
கலைவிழா சிறப்பிதழ்

KALKI 20.12.92 ரூ. 3.00

கல்கி



தமிழிசைச் சங்கம்-
பொன்விழா

சில குழந்தைகள் மற்றவர்களை விட நன்றாக எடை போடுகிறார்களே எப்படி ?

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது. மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக்கூடிய புரோட்டீன்கள் தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆன பிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

செரிலாக், ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைடிரேட், இரும்புச் சத்து, கால்சியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவிலே கலந்த உணவு செரிலாக். வைட்டமின்கள் A, D, E, B காம்ப்ளெக்ஸ் மற்றும் C இதற்குப் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-டேன் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன் கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால், இதில் பாலின் எல்லா நற்பயன்களும் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை சரியான அளவு எடை போடுவதற்கு வேண்டிய ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு செரிலாக்.





இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்


உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எழுதுக: செரிலாக், தபால் பை எண் 21, புது தில்லி - 110 025.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

MudraNES:0319 Tam

இவர்கள் சபா செகரட்டரி ஆனால்!



ஒரு பொன் விழா; வைர விழா!



* கிருஷ்ணன்குட்டி நாயர்



* பாலகிருஷ்ணா சாஸ்திரிகள்

அரசியல்வாதிகளின் முழுப் பக்க, சாதனை - விளம்பரங்களுக்குப் போட்டியாக விளங்குகின்றன சென்னை சபாக்களின் சங்கீத விழா நிகழ்ச்சிகள் பற்றிய விளம்பரங்கள்! பக்கம் பக்கமாக இடத்தை அடைத்துக் கொண்டு ஏராள விளம்பரங்கள்!

என்றாலும் இந்த வருஷ ஸ்பெஷல் - தமிழிசைச் சங்கத்தின் பொன் விழாவும், இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைடியின் வைர விழாவும்.

தமிழிசை சங்கத்தின் பொன் விழா பற்றி தனி அனுபந்தமே இந்தச் சிறப்பிதழில் இடம்பெறுவதால் இங்கு இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைடியைக் கவனிப்போம்.

சிதம்பரம் ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர் 'சங்கீத கலா சிகாமணி' விருது பெறுகிறார். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஏராளமான கீர்த்தனைகளை உருவாக்கியவர். (டிசம்பர் 31 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு கே.வி.என். இவற்றைப் பாடுகிறார்.) முப்பது வயதுக்கு முன்னாலேயே வாக்கேயக் காரர் என்று அறியப்பட்டவர் தீட்சிதர். ஸ்ரீ சங்கர நவராகதாள கீர்த்தனாவளி என்ற ஆதிசங்கரர் பற்றிய நூலை எழுதியதற்காக, ('ராமஜென்ம பூமி' புகழ்) அயோத்தியில் உள்ள சம்ஸ்கிருத சமிதி 1982லேயே சாகித்ய பூஷணம் பட்டம் வழங்கியிருக்கிறது. கும்பகோணத்துக்குப் போய், அப்போது அங்கே முகாமிட்டிருந்த காஞ்சிப் பெரியவரிடம் நூலைக் கொடுத்த போது, அதிலுள்ள பாடல்கள் சிலவற்றைப் பாடும்படி பெரியவர் கேட்டுக் கொண்டாராம். தீட்சிதர் பக்க வாத்யங்களுடன் கீர்த்தனைகளைப் பாட, பெரியவர் மெய் மறந்து ரசித்தாராம். ''இதைவிடப் பெரிய அங்கீகாரம் வேறு என்ன வேண்டும் எனக்கு?'' என்கிறார் ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர்.

மியூசிக் அகடமியில் இந்த வருஷம் இசைக் கலைஞர்களைப் போல், இசைக் கருவிகளுக்கும் முக்கியத்துவம் தரப்படவிருக்கிறது. இசைக் கருவிகள் கண்காட்சி ஒன்றும், ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கலைஞர் வீதம், பதிமூன்று இசைக் கருவிகள் பற்றிய லெக்சர் - டெமான்ஸ்ட்ரேஷன்களும் இந்த வருஷ ஸ்பெஷல். சாக்ஸபோன் பற்றி காதிரி கோபால்நாத், ஹவாயன் கிடாரில் ஹிந்துஸ்தானி இசை வழங்கி வரும் பனாரஸ்காரரான எஸ். கமலா, நாதசுரம் பற்றி மதுரைப் பேராசிரியர் பக்கிரிசாமி பாரதி - இவர்கள் சொற்பொழிவு - கம்-டெமான்ஸ்ட்ரேஷன் ஆர்வமுடன் எதிர் பார்க்கப்படுபவை.

ஒட்டுமொத்தமாகத் தேவாரத்தைத் தமிழிசைச் சங்கமே சொந்தம் கொண்டாடி விட முடியாது என்று உணர்த்துவது போல, அகடமியில் தேவாரத்தைப் பாடி, இசைப் பேருரை நிகழ்த்தப் போகிறார் லால்குடி சுவாமிநாதன்.

சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு என்ற தஞ்சை நால்வரின் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்த வீணைக் கலைஞர் கே. பி. சிவானந்தம். இவர் 'சங்கீத



* ரமணி

கலாநிதி' விருது பெறுகிறார். 1933ல் இவரது தகப்பனார் பொன்னையா பிள்ளை இதே விருது பெற்றார். 59 ஆண்டுகள் கழித்து, பிள்ளைக்கு விருது! அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றியதோடு, சுவாமி விபுலானந்த அடிகளுடன் சேர்ந்து இலங்கை மட்டக்களப்பில் ஓர் இசைக் கல்லூரி தொடங்கினார் சிவானந்தம். (இப்போதும் அதற்குக் கௌரவத் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.) ஓலைச் சுவடிகளிலிருந்து திரட்டியெடுத்து, நாட்டியத்துக்கு அடிப்படையான விஷயங்களை மூன்று நூல்களாகப் பிரசுரித்திருக்கிறார் சிவானந்தம்.


இவரது துணைவியார் சாரதாவும் பட்டம் பெற்ற வீணை வித்துவான்தான். கணவரின் நிழல் மாதிரி, எப்போதும் சேர்ந்தே வாசிப்பார். பாதி சங்கீத கலாநிதி விருது இவருக்கல்லவோ சேர வேண்டும்!



ஸ்வர்ண வேங்கடேச தீக்ஷிதர்

ஃபைன் ஆர்ட்ஸ் நிகழ்ச்சிகளுக்கு சீஸன் டிக்கெட் கிடையாது. அங்கத்தினர் அல்லாதார், அன்றன்றைக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு போக வேண்டியதுதானாம்!

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் 'சங்கீத கலா நிபுண' விருது பெறுகிறவர் டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள். நாற்பது வருடங்களுக்கு முன் கதா காலட்சேபம் செய்யத் தொடங்கிய போது, வடசென்னையின் மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், பாமர மக்களிடையே சொற்பொழிவாற்றியதைக் குறிப்பிடும் சாஸ்திரிகள், ''அந்தப் பகுதிக்குள் நுழையும்போதே ரிக்ஷாவில் அமர வைத்து அழைத்துச் செல்லுவார்கள். சன்மானம் பத்து ரூபாய்தான். ஆனால் அதற்கு மதிப்பு ஆயிரம் மடங்கு! கடைசி நாள் அன்னதானம் செய்வார்கள். இன்றைக்கு அந்தப் பகுதிகள் எல்லாம் எப்படி மாறிப் போய் விட்டன!'' என்கிறார் வருத்தத்துடன்.



சிவானந்தம் - சாரதா

கிருஷ்ண கான சபாவில் இந்த வருஷம் 'நிருத்ய சூடாமணி' விருதைப் பெறுகிறவர் கோட்டக்கல் - கிருஷ்ணன் குட்டி நாயர். ''இதையும் சேர்த்தால் இந்திய நடன வகைகள் எல்லாவற்றையும் கௌரவித்த மாதிரி, எல்லா வகை நடனக் கலைஞர்களுக்கும் நிருத்ய சூடாமணி விருது வழங்கி விட்டோம்!'' என்கிறார் யக்ஞராமன். அதனால் தானோ என்னவோ, ஒடிசி, பரதநாட்டியம், கதக், கதகளி, மணிப்புரி, என்று பல நடன வகைகளிலும் உள்ள விற்பன்னர்களை அழைத்து, நவரசங்களில் ஒவ்வொன்றை அவர்கள் பாணியில் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உதாரணமாக, பரத நாட்டியத்தில் ஹாஸ்யம் எப்படி இடம்பெறுகிறது என்பதை பத்மா சுப்ரமணியம் நிகழ்ச்சியைப் பார்ப்பவர்கள் அறியலாம்.

முக்கிய அம்சம், லால்குடி ஜெயராமன் இங்கே பாடுகிறார்!

புல்லாங்குழல் வித்வான் என். ரமணியின் 50 ஆண்டுக் கால வாசிப்புக்கு ஒரு பாராட்டு விழாவும் இருக்கிறது.

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணனுக்குக் கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் 'இசைப் பேரொளி' விருது வழங்குகிறது. கூடவே பணமுடிப்பு பத்தாயிரம் ரூபாய்! கார்த்திக்

கல்சுரல் சென்டர் ஃபார் பர்ஃபாமிங் ஆர்ட்ஸ் இந்த வருடம், திருக்கோகர்ணம் ராமச்சந்திர அய்யருக்கு 'சங்கீத சாகரம்' விருது வழங்குகிறது.

இன்று பரத நாட்டியத்துக் குக் கௌரவமான அந்தஸ்து நிலவக்



ராமச்சந்திர அய்யர்



* ஜி. ஜே. ஆர். கிருஷ்ணன் (படம் : அவினாஷ் பஸ்ரிசா)




* பாலுமதி
(படம் : அன்வர்)

காரணமாயிருந்தவர்களுள் ஒருவர் ஈ. கிருஷ்ணய்யர். இவர் நினைவாக கருதி ஃபவுண்டேஷன், முதல் முதலில் மியூசிக் அகடமியில் பரதநாட்டிய நிகழ்ச்சி வழங்கிய கும்பகோணம் பாலுமதிக்கு இந்த ஆண்டு தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவிக்கிறது. பந்தணைநல்லூர் பாணி நாட்டியத்துடன் முறையாக இசையும் கற்றவர் இந்தப் பெண்மணி.

இந்த சங்கீத சீசனில் ரசிகர்களுக்கு மகாராஜபுரம் சந்தானத்தின் நினைவு எழாமல் போகாது. அவர் அகால மரணமடைவதற்குச் சில காலம் முன்பு தான்சேன் - தியாகராஜர் விழா என்று நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். அதை அவரது சந்ததியினர் நிறைவேற்றி வைக்கிறார்கள். இவ்விழாவில் ஹிந்துஸ்தானி இசையும் கர்நாடக சங்கீதமும் போட்டி போட்டுக் கொண்டு செவிகளை நிறைத்து இதயத்தைக் குளிர்விக்கும்.

– நமது நிருபர்



இந்த பாலகுமாரன் புதுமுகமோ?

● ஒரு முதிர்கன்னி, ஒரு இளம் கன்னி சகோதரிகள், சின்னவளை ஒருவன் காதலிக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் கல்யாணத்திற்கு உடனடித் தடை எது? ஒரு U.K.G. பையன் பதில் சொல்லி விடுவான். ஆனால் காதல் சமாசாரத்தைத் தைரியமாக வீட்டில் சொல்லும் இளையவளின் காதலன், அதற்குக் குறுக்கே நிற்கும் தலையாய பிரச்னை பற்றி மட்டும் சொல்வதில்லை!

'ஏனெனில் அது ஒரு டீ.வி. நாடகம்.'

விவரம் தெரியாமல் மூத்த பெண்ணை நிச்சயித்து விட, இவனும், 'இனி நீதான் என் காதல் வெண்ணிலா. அவள் இல்லை' என்று பிளேட்டை மாற்றி விடுகிறான். அவள் காதலி, தியாகி ஆகி விடுகிறாள்!

ஐயா, காதில் ஒரு பூ வைத்தால் அழகாக இருக்கும். கொஞ்சம் முயன்று முழம் பூவை வேண்டுமென்றால் சுற்றிப் பார்க்கலாம். கூடை, கூடையாய்ச் சுற்றப் பார்த்தால் - தாங்காதுடா சாமி! கதை, வசனம் பாலகுமாரன் என்று கார்டு காட்டினார்கள். வேறு யாராவது இதே பெயரில், புதுமுகம் வந்திருக்கிறார்களா என்ன?

● சீனக் கலை விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பினார்கள். நேரு காலத்திலிருந்து தொடரும் இந்திய - சீன நட்புப் பாலம், இரண்டாயிர வருஷ பாரம்பர்யம் (இடையிடையே 'சோனியாஜி' நாமஸ்மரணம்) இன்ன பிறவற்றுடனான அர்ஜுன்சிங் வரவேற்பு, கே. ஆர். நாராயணன் உரைகளுக்குப் பின் ஒரு சீன நாடகம். நம்மூர் நிஜந்தன், ந. முத்துசாமி பாணி 'நவீன' நாடகமும், கதகளியும் சரிவிகிதத்தில் கலந்தாற்போலிருந்தது. வெண்கலப் பானை உருட்டி விட்டாற் போன்ற சீன வசனங்கள் - புரியாவிட்டாலும் கேட்க சுவாரஸ்யம்.

● முன்பு நன்னன் அரசோச்சிக் கொண்டிருந்த 'வாழ்க்கைக் கல்வி'யில் இப்போது முத்துக் கண்ணப்பர். அனில், ஆடு, படம், பட்டம் உச்சரிக்கக் கண்ணப்பர் கற்றுக் கொடுக்கட்டும், தாராளமாக. ஆனால் கற்றுக் கொள்ள வருகிறவர்களாகப் பல்கலைக் கழக உயர் அதிகாரிகளைப் பிடித்துப் போடுவானேன்? இதை நிறுத்தச் சொல்லி சத்தியாகிரகமே பண்ணலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் இந்த வாரம் இனிய அதிர்ச்சியாக பேராசிரியர் கல்கி பற்றி மீ.ப. சோமு உரை! உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், இந்தத் தலைமுறைக்குக் கல்கியை அறிமுகப்படுத்தும் நயமான பேச்சு. சத்தியாகிரகம் - தள்ளி வைக்கப்படுகிறது!


● 'கலாகைரளி'யில் ஒரு மலையாள நாடகம். குடும்பச் சொத்தாக ஒருவனிடம் ஒரு குடை. போகுமிடமெல்லாம் அவன் குடையை மறந்து விட்டு விடுவதும், அங்கு ஏதாவது திருட்டு நடந்து, 'குடை சாட்சி'யாக இவன் பழியை ஏற்க வேண்டி வருவதும் ஹ்யூமர், ஹ்யூமர், ஹ்யூமர்! மறு ஒளிபரப்பானால் மறக்காமல் பாருங்கள்!

● ஞாயிறு சினிமா பிற்பகல், மாலை இரண்டுமே உபயம் விக. இந்த இரட்டைத் தாக்குதலைத் தவிர்த்திருக்கலாம், டில்லி - சென்னை நிலையங்களிடையே கருத்துப் பரிமாற்றம் இருந்திருந்தால். என்னதான் விக ரசிகனானாலும் இரண்டு விக கதை வசனப் படங்களை ஒரே நாளில்... தேவைதானா? அதுவும் அந்த பிற்பகல் படத்துக்கு வசனங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு... ஐயோ, அபத்தம்! (உம்) எனக்கு மானம் இருக்கு - I have sense of shame! மானம் போக்க போங்கள்!



- கிச்சா

விமர்சனம்



★ இசைக் குழு

தி. நகர் நடேசன் பூங்கா பக்கமாகச் சாலையோடு நடந்து செல்லும் போது 'சாமஜ வர கமனா' என்ற தியாகராஜரின் க்ருதி கிளாரினெட் வாத்யத்தில் இருந்து புறப்பட்டு வருகிறது. பூங்காவிற்குள் புகுந்து பார்த்தால், எட்டு பேர் கொண்ட இசைக் குழு! சேக்ஸஃபோன், டிராம்போன், டிரம்ஸ், என்று மேற்கத்திய இசைக் கருவிகளை வைத்துக் கொண்டு, கிளாரினெட்டுக்குப் பக்கவாத்யம் வாசித்துக் கொண்டிருந்தார்கள்! தயிர் சாதத்துக்குத் தொட்டுக் கொள்ள வாழைப்பழம் போல் அக் குழுவில் தவில் காரரும் தம் திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார்!

நமது ஆச்சர்யத்தைப் புரிந்து கொண்ட கிளாரினெட் கலைஞர் 'சாமஜ வர கமனா' வை முடித்துக் கொண்டு நம் அருகில் வந்தார்.

''நான்தான் பேண்ட் மாஸ்டர். பெயர் கிருஷ்ணமூர்த்தி... நாங்க மாநகராட்சி இசைக் குழுவைச் சேர்ந்தவங்க. நகர் முழுக்க உள்ள பிரபல பூங்காக்களிலும், கடற்கரையிலும், தினசரி மாலை மக்களுக்காக வாசித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார்.

மாநகராட்சியில் இசைக் குழு ஏற்படுத்தப்பட்ட வரலாறு தெரிய வேண்டுமானால் 1940 களுக்குச் செல்ல வேண்டும். மாநகராட்சி சார்பாக அவ்வப்போது நடக்கும் விழாக்களில் பிரதான நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன் வாசிப்பதற்கும், பெரிய தலைவர்களை நகரின் சார்பாக வரவேற்கும் போது இசைப்பதற்கும், மாநகராட்சி தனியார் இசைக் குழுக்களைத்தான் நம்பியிருந்தது. அடிக்கடி இசைக் குழுக்களை அழைக்க வேண்டி இருந்தபடியால், மாநகராட்சியிலேயே நிரந்தரமாக ஓர் இசைக் குழுவை வைத்துக் கொண்டால் என்ன என்று எண்ணம் தோன்றி, பன்னிரண்டு பேர் கொண்ட கார்ப்பரேஷன் இசைக் குழு உருவாயிற்று. இதற்குப் பின்பலமாக இருந்து செயல்பட்டவர்கள், 1945-47 கால கட்டங்களில் மேயர்களாக இருந்த சிவராஜ், சுந்தரராவ் ஆகியோர். நாளடைவில், பொது மக்களின் பொழுது போக்குக்காகப் பொது இடங்களிலும் இக் குழு இசைக்க ஆரம்பித்தது.



★ கிருஷ்ணமூர்த்தி - பாண்ட் மாஸ்டர்

தற்போது கார்ப்பரேஷன் நிகழ்ச்சிகள் இல்லாத நாட்களில் இசைக் குழு தனியார் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கும் செல்கிறது. இதனால் மாநகராட்சிக்கு வருமானம். நாதஸ்வரத்துக்குப் பதிலாக கிளாரினெட் இருந்தாலும், திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் தவிலின் தேவை அவசியம் எனக் கருதப்பட்டதால் இசைக் குழுவில் தவில் சேர்க்கப்பட்டது.

''முன்பெல்லாம்



பூங்காக்களில் பாண்டு சங்கீதம்!



"தலைவருக்குக் காலில் அடிபட்டதாம், ட்ரீட்மெண்ட் எடுக்க நெதர்லாந்து போறாரே, ஏன்?"

"தலைவர் அந்த நாட்டை மட்டும் இன்னும் பார்க்கலையாம், அதான்!"

- எஸ். முகம்மது யூசுப்

பார்க்குக்குச் சென்று வாசிப்பதற்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். காரணம் கௌரவமானவர்கள், காற்று வாங்க அங்கே வருவார்கள். எங்கள் வாசிப்பைக் கேட்டு ரசிப்பார்கள். ஆனால் இப்போது தென் சென்னையில் உள்ள மூன்று நான்கு பார்க்குகளைத் தவிர வேறெங்கும் மக்கள் சரியாக வருவதில்லை. இதற்குக் காரணம், பார்க்குகள் சரியாக நிர்வகிக்கப்படாததுதான். தவிர, சமூக விரோதிகள், தங்களது தளமாகப் பார்க்குகளைப் பயன்படுத்துவதும் அதிகரித்து வருகிறது" என்று இசைக் குழுவினர் கோரஸாகச் சொல்கிறார்கள்.


மாலை ஐந்திலிருந்து ஏழு மணி வரை வாசிக்கிறார்கள். முதல் முக்கால் மணி நேரம் வெஸ்டர்ன் நோட்ஸ். அடுத்த முக்கால் மணி நேரம் தியாகராஜரும், முத்துசாமி தீக்ஷிதரும், சியாமா சாஸ்திரியும் வலம் வருகிறார்கள். கடைசி அரை மணி நேரம் சினிமாப் பாட்டு.

"இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை எங்களுக்குச் சீருடை தர வேண்டும். ஆனால் நான்கு வருடங்களாகச் சீருடை கொடுக்கவில்லை. இதனால் சிலர் சீருடை இல்லாமலும், சிலர் கிழிந்த சீருடையுடனும் நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் கார்ப்பரேஷனின் கௌரவம்தானே பாதிக்கப்படுகிறது" என்று வருத்தப்படுகிறார்கள். மேலும், பன்னிரண்டு பேர் கொண்ட இசைக் குழுவில் இப்போது எட்டு பேர்தான் இருக்கிறார்கள். மீதி நான்கு இடங்களைப் பூர்த்தி செய்யாமலே காலம் தள்ளுகிறது மாநகராட்சி.

- ஸ்ரீநிவாஸன்

படங்கள் : ராஜன்

அடுத்த இதழ்... பாண்டிச்சேரி சிறப்பிதழ்



●● கண்களுக்குப் பயிற்சி கொடுங்கள்; மூக்குக் கண்ணாடியைத் தூக்கியெறியுங்கள்!
- கடைப்பிடிக்க வேண்டிய மருத்துவச் செய்திகள்


●● பாண்டிச்சேரி பாலிடிக்ஸ்

●● பாண்டிச்சேரி ரவுண்ட் அப்

●● சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கு முதல்வர் மற்றும் கவர்னர் பதில்கள்!



GX/20/202 TAM R2



ஏறுங்க, ஏறுங்க.. இடிச்சுத் தள்ளுங்க... நாங்க பொறுப்பு ஏத்துக்-கறோம்!
கல்யாண் சிங்
போலீஸ் செயல்படத் தடை உத்தரவு
ராஜினாமா கடிதம் கூட ரெடி பண்ணி வச்சிருக்கோம்!
அத்வானி
..பீனிக்ஸ் பறவை
பாபர் மசூதி இடிபாடுகள்
வகுப்பு வாத இயக்கங்களுக்குத் தடைச் சட்டம்
ஆர். எஸ். எஸ். ஃப்ரெஸ்ஸ இருந்தது போதும்! இப்ப இருக்கற சூழ்நிலைக்கு அந்தர் காஸ்ட்யூம்-தான் பொருத்தமா இருக்கும்...!
தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தில் பேச்சு
அமைதிகாக்க மக்களுக்கு அறிவுரை



கல்கி



1992
டிசம்பர் 20
மலர் : 51
இதழ் : 21
ஆங்கீரச
மார்கழி 5

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

அத்வானிக்கு ஓர் அழைப்பு!

பிரதமர் முதல் பாமரர் வரை சகலரும் எச்சரித்தார்கள். அதற்குச் செவி சாய்க்காமல், அரசியல் ஆதாய சுயநல நோக்கோடு செயல்பட்டு, தீராப் பழியைச் சுமந்து கொண்டு நிற்கிறது பி.ஜே.பி. நடந்து முடிந்த பிறகு வருத்தப்பட்டு கல்யாண்சிங் ராஜினாமா செய்கிறார். அத்வானி ராஜினாமா தொடர்கிறது.

வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா இயக்கங்கள், பி.ஜே.பி.யை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, தங்களுக்கு வேண்டியதைச் சாதித்துக் கொண்டன. அவர்களுக்குக் கோவில் கட்டும் நோக்கத்தை விட மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கும் நோக்கம்தான் முக்கியம். அதை நிறைவேற்றிக் கொண்டார்கள். பி.ஜே.பி. ஏமாற்றப்பட்டு கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கிறது.

பி.ஜே.பி. தலைவர்களின் கண்மூடித்தனமான பிடிவாதப் போக்கினால், மதச் சார்பற்ற இந்திய அரசியல் சாசனத்துக்கு மகத்தான துரோகம் இழைக்கப்பட்டு விட்டது. ஒரு மசூதியை இடிக்கப் போய் வேறு நாடுகளில் ஹிந்து ஆலயங்கள் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன. அந் நாடுகளில் வசிக்கும் ஹிந்துக்கள் நெருப்பின் மேல் நடப்பது போல் உணர்கிறார்கள். இந்தியாவிலேயே மதக் கலவரங்கள் தூண்டி விடப்பட்டு இதுவரை ஆயிரம் மக்களுக்கு மேல் பலியாகியுள்ளார்கள். (அதிகாரபூர்வ எண்ணிக்கையை விட உண்மையில் உயிர் பலிகள் அதிகமாகவே இருக்கும்.) உலக நாடுகள் அத்தனையும் நம்மைக் கண்டிக்கவும் பரிகசிக்கவும் செய்கின்றன. உலக அரங்கிலே இந்தியா தலைகுனிய நேரிட்டிருக்கிறது. உபயம்: அத்வானி அண்டு கம்பெனி.

'எரிகிற வீட்டில் பிடுங்கிய மட்டும் ஆதாயம்' என்பது போல் தி.மு.க. உள்ளிட்ட தேசிய முன்னணி, பிரதமரின் ராஜினாமாவைக் கோருகிறது. அவர் பி.ஜே.பியுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டிருந்ததாக அபாண்டப் பழி சுமத்துகிறார் கருணாநிதி.

ஆரம்ப கட்டத்தில் பிரதமர் பேச்சு வார்த்தைகள் நடத்தாமல் சற்று கால தாமதம் செய்தது உண்மைதான். ஆனால் ''எங்கள் அனுமதி இன்றி எப்படி ராணுவத்தை அனுப்பலாம்?'' என்று கேட்கும் ஒரு பி.ஜே.பி. அரசு உ.பி.யில் இருக்கும் போது பிரதமரோ அல்லது உள்துறை அமைச்சரோ என்ன செய்ய முடியும்? கல்யாண் சிங் அமைச்சரவையை டிஸ்மிஸ் செய்திருந்தாலோ அல்லது பி.ஜே.பி. அரசை ஒதுக்கி, ராணுவத்தைக் கொண்டு சுற்றி வளைத்து கரசேவகர்களை நெருங்க விடாமல் தடுத்திருந்தாலோ, அவை ஜனநாயக விரோத செயல் என்றும் ஆக்கிரமிப்பு என்றும் வர்ணிக்கப்பட்டு, மத்திய அரசைப் பெரும் அபகீர்த்தி சூழ்ந்திருக்கும். பி.ஜே.பி., வி.எச்.பி. வகையறா தேவதைகள் ஆகி விட, மத்திய காங்கிரஸ் அரசு அசுரனாகத் தோற்றமளிக்க நேர்ந்திருக்கும். மத்திய ஆட்சியே கவிழ்ந்திருக்கலாம்.

''போலீஸோ ரிஸர்வ் போலீஸோ எந்தக் காரணம் கொண்டும் கரசேவகர்களைத் தடை செய்யக் கூடாது'' என்ற கல்யாண்சிங்கின் உத்தரவானது கரசேவகர்களுக்கு அராஜகம் புரிய லைசென்ஸ் கொடுத்ததாகி விட்டது. கல்யாண்சிங்கும் அத்வானியும் இப்போது வருந்தி, ''பொறுப்பேற்கிறோம்'' என்கிறார்கள். காலம் கடந்த ஞானோதயம்.

வெறுமனே, ''பொறுப்பேற்கிறோம்'' என்று கூறி என்ன பயன்? செயலிலே காட்ட வேண்டும். இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் என்ன? இந்தியாவும் பி.ஜே.பி.யும் இனி தலைநிமிர்வது எப்படி? ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

அத்வானி அண்டு கம்பெனி வருத்தப்படுவது நாடகம் இல்லை என்றால், அவர்கள் பேச்சு சத்தியமானது என்றால் அவர்கள் ஒரு காரியம் செய்யட்டும். ''மசூதியைத் திரும்பக் கட்டுங்கள். நாங்கள் ஒத்துழைக்கிறோம்'' என்று மத்திய அரசிடம் மனம் திறந்து கூறட்டும். மத்திய அரசின் நிதியுதவியோடு, இந் நாட்டு மெஜாரிட்டி இந்து மக்களின் நன்கொடையும் சேரட்டும். மசூதியைத் திரும்பக் கட்டும் பணியில் முஸ்லிம்களுடன் இந்துக்களின் கரசேவையும் இணையட்டும். இந்தக் கரசேவைக்கு அத்வானி தலைமை தாங்கட்டும்.

இதை அத்வானி செய்தால் கோடிக்கணக்கான முஸ்லிம் மக்களின் மன்னிப்பை மட்டுமல்ல; நன்மதிப்பையே அவர் திரும்பப் பெற முடியும். இன்னும் கூறப் போனால், அடுத்த தேர்தலில் பி.ஜே.பி. ஆட்சியைப் பிடிப்பது கூட உறுதியாகி விடும்! அந்த அளவுக்குப் பெருந்தன்மையும் விவேகமும் செயல்படுமா? பி.ஜே.பி. தலைவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

'சுந்தரி நீயும்' பாட்டுக்குச் சுவரம் பாடிக் காட்டினோம்!

தாத்தா பூஜை பண்ணும் சமயத்தில் பேத்தி மேற்கத்திய 'பாப்' இசையை அலற விட, தாத்தா ஆட்சேபித்து, கர்நாடக இசையின் பெருமைகளைப் பறைசாற்ற, பேத்தி 'But it is so boring...! எனக்குப் புரியலை.....' என்று சிணுங்க... இப்படித்தான் ஆரம்பித்தது 'தமிழக இசைமகான்கள்' என்ற டீ.வி. தொடர்.

பேத்தியின் தோழி ஒருத்தி, மத்யஸ்தம் செய்யும் முகமாக 'சினிமா இசையிலும் சாஸ்திரீயம் உள்ளது' என்பதை எடுத்துக் காட்ட சில இசைக் கலைஞர்களின் உதவியை நாடி வெற்றியும் பெறுகிறாள்.

'தாத்தாவின் பிடிவாதம் தளர்ந்துவிட்டாலும் பேத்தி கர்நாடக இசையின் மேன்மையை உணர்ந்ததாகத் தெரியவில்லையே.... மேலும், இளைய தலைமுறையினரை ஈர்க்கும் முயற்சிப் பாதையிலிருந்து டீ.வி. நிகழ்ச்சி விலகி விலகிப் போகிறதே' என்ற ஐயங்களுடன் தயாரிப்பாளர் உஷா சுப்ரமண்யத்தை அணுகிய போது அவர் சொன்னார் :

''இந்த நிகழ்ச்சியை நான் திட்டமிட்டதே வேறு விதமாக... தமிழகத்தின் இசை மகான்களைப் பற்றிய இந்த நிகழ்ச்சியில் 'பொழுது போக்கு அம்சமே இல்லை' என்று காரணம் காட்டி விளம்பரதாரர்கள் இதை Sponsor செய்ய மறுத்து விட்டார்கள். சினிமா அம்சங்களைக் கொஞ்சமாவது சேர்த்தால் தான் ஆயிற்று என்றார்கள். அதற்காக ஒரு 'தாத்தா - பேத்தி' கதையைப் புகுத்தி (பேத்தி கடைசி வாரத்தில் கர்நாடக இசையின் மேன்மையை ஒப்புக்கொள்வாள்) சில சினிமா பாடல் காட்சிகளையும் இந்நிகழ்ச்சியில் சேர்க்க வேண்டியதாகிவிட்டது!''



* உஷா சுப்ரமண்யம்


* தமிழக இசை மகான்கள் - டீ.வி. நிகழ்ச்சி

ஒரிஜினல் நிகழ்ச்சி வடிவத்தை மாற்றக் கூடாது என்ற பிடிவாதத்துடன் ஆறு மாதங்கள் முயன்று பார்த்த பின்னரே மாற்றத்துக்கு ஒப்புக் கொண்டு ஸ்பான்ஸர்களின் ஆதரவு பெற்றதாகக் கூறுகிறார் உஷா சுப்ரமண்யம்.

விளைவு : 'மேற்கத்திய சங்கீதத்தை விட நம் இசை உசத்தி' என்ற ரீதியில் சில மதிப்பீடுகளும் சினிமா இசை மூலமாக கர்நாடக இசையில் ஆர்வம் வளர்க்கும் பழைய டெக்னிக்குகளும் அவ்வப்போது இசை மகான்கள் பற்றிய குறிப்புகளுமாக ஓர் அவியல்.

நிகழ்ச்சியின் நோக்கத்தில் குழப்பம் ஒரு புறமிருக்க, கர்நாடக இசையைப் பற்றியே முழுக்க முழுக்கச் சொல்லும் ஒரு நிகழ்ச்சிக்கு நமது டீ.வி.யில் இடம் கிடைப்பதும் ஸ்பான்ஸர் கிடைப்பதும் துர்லபம் என்பதும் தெரிகிறது!

ஒரு சக்தி வாய்ந்த மீடியாவில் போதிய அளவு ஆதரவு கிடைக்காத போது இளைஞர்களை மட்டும் எப்படி குறை கூற முடியும்?

"டீ.வி. யின் துணையுடன் கர்நாடக இசையில் ஆர்வம் வளர்க்க எவ்வளவோ செய்யலாம். மாறாக, அவர்கள் ஒளிபரப்பும் பல இசை நிகழ்ச்சிகளே இரண்டாந்தரமானவையாக இருக்கின்றனவே!" என அங்கலாய்க்கின்றனர் ஒய். ஏ. சி. எம். அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள்.

Youth Association for Classical Music என்ற இந்த அமைப்பின் குறிக்கோள் இளம் கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் பெற்றுத் தரப் பாடுபடுவதாக இருந்தது. "ஆனால் இப்போது அதில் ஒரு மாற்றம் செய்திருக்கிறோம்" என்கிறார்கள் இவர்கள். கலைஞர்கள் வளர்ந்தால் மட்டும் போதாது ரசிகர்கள் எண்ணிக்கையும் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் ரசிகர்களை 'உருவாக்கும்' முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் - 'ரசிகர்கள் ஆண்டு' கொண்டாடுகிறார்கள். சினிமா இசை மூலம் கர்நாடக இசையில் ஆர்வம் வளர்க்க இவர்களும் முனைந்துள்ளார்கள்.

"உதாரணமாக 'சுந்தரி நீயும் சுந்தரன் ஞானும்...' என்ற கேதார ராக சினிமா பாட்டுக்குக் கற்பனை சுவரம் பாடிக் காட்டினோம்! - சுவரம் பாடுவது என்றால் என்ன என்று புரிந்து கொண்டார்கள் இளைஞர்கள். அப்புறம் இசையைப் புரிந்து கொள்ள உதவும் வகையில் ஒரு கதை அமைத்து, அதை நாடக வடிவமாக்கி ஆடியோ காஸெட்டில் பதிவு செய்துள்ளோம். பரிசோதனையாக விற்பனை செய்து பார்க்கப் போகிறோம். எட்டு பள்ளிகள், இரண்டு கல்லூரிகள், இரண்டு அலுவலகங்களில் Lec-Con கள் நடத்தியிருக்கிறோம். Lec-Con என்பது ஒரு மணி நேர Lecture Concert. பாட்டுக்கு இடையிடையே விளக்கங்கள் அளிக்கப்படும். இதன் முடிவில், நாங்கள் சொன்ன விஷயங்கள் தொடர்பாக அரை மணி நேரம் குவிஸ் நடத்தி, அதில் வெல்பவருக்குச் சிறிய ஊக்கப் பரிசும் கொடுக்கிறோம்...."

"இந்த Lec-Con களினால் பயனடைந்து கர்நாடக இசையின் ரசிகர்களாகப் பலர் மாறுகிறார்களா...?" என்று கேட்டால், "அதை உறுதியாகச் சொல்ல முடியாது" என்கின்றனர் YACM இளைஞர்கள். எனினும், சொல்லப்பட்ட பல விஷயங்களில் சிலவாவது மனத்தில் நிலைத்துச் சிலரையாவது கச்சேரிகளுக்கு ஈர்க்கும் என நம்புகிறார்கள்.

சரி, சினிமா இசையைப் பயன்படுத்தித்தான் கர்நாடக இசையின் பக்கம் ரசிகர்களை ஈர்க்க முடியுமா? 'புரியவில்லை',

'bore' என்று சொல்லாமல் சிறந்த மனத்துடன் அணுகினால் ரசிக்கக் கற்றுக் கொள்ள முடியாதா....? இப்படிக் கேட்டால் YACM இளைஞர்கள் பொரிந்து தள்ளுகிறார்கள் : ''ஏன்? சினிமா மூலம் இசைக்கு ரசிகர்களை ஈர்ப்பதில் என்ன தவறு? இங்கேதான் நாம் தவறு செய்கிறோம். ஏதோ கர்நாடக இசை வேறு ஒரு லெவலில் இருக்கிறது என்றும், பக்தி மார்க்கத்தால் மட்டுமே அதை ரசிக்க முடியும் என்றும், அதனால் வயதானவர்களுக்கே அது சாத்தியம் என்பது போன்ற பிரமையையும் நாம் காலப்போக்கில் உருவாக்கி விட்டோம். இவை இளைஞர்களைப் பயமுறுத்துகின்றன.

''இளைஞர்களைக் கவர வேண்டுமானால் வித்வான்களும் தங்களைக் காலத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும். சிறந்த ஆளுமையை வளர்த்துக் கொண்டு, உலக நடப்புகளில் தொடர்பு உள்ளவர்களாய், சமூக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களாய் - இசையால் மட்டுமின்றி வேறு விதங்களிலும் கவனம் கவர்பவர்களாய் இருப்பது அவசியம். அவ்வாறன்றி 'நம்ம சங்கீதமே உசத்தி; அது கைவருவதே கஷ்டம்' என்ற ஒருவிதமான உயர்வு மனப் பான்மையுடன் தனித் தீவில் வாழ்ந்து வந்திருக்கின்றனர் வித்வான்கள்...

''இதைத் தவிர பெற்றோர் தங்கள் வீட்டில் குழந்தைகளின் காதுகளில் கர்நாடக இசை விழச் செய்வதோடு கச்சேரிகளுக்கும் அழைத்து வரணும் - படிக்கிறான், என்று வீட்டிலே விட்டுவிடக்கூடாது! இசையில் பரிச்சயம் உள்ள இளைஞர்களும் தங்கள் நண்பர்களை அதில் ஈடுபடச் செய்ய வேண்டும்; பத்திரிகைகள் இசை விமர்சனம் செய்வதே அரிதாகிவிட்டது. இசைக் கலைஞர்களின் போட்டோக்கள், கார்ட்டூன்களை அவர்கள் பிரசுரித்து சுவையான செய்திகளை வெளியிடுவதன் மூலம் ஆர்வம் வளர்க்கலாம்....''

- இப்படி வரிசையாக அடுக்குகின்றனர் YACM இளைஞர்கள்.

எல்லாமே நியாயமான கோரிக்கைகள் தான். ஆனால் 'Peer Pressure' என்ற ஒன்று இளைஞர்களைக் கட்டுப்படுத்துகிறதே! அதாவது, குழுவில் மற்றவர் செய்வதையே நாமும் செய்ய வேண்டும். வேறுபட்டு நிற்கக் கூடாது என்ற உணர்வு. இதே உணர்வு கர்நாடக இசைக்கு உதவவும் கூடும் என்பதை ஐ.ஐ.டி.யில் மாடிகிரா கலை விழாவின் போது நடக்கும் கச்சேரிகளுக்குக் கூடும் ஏராளமான மாணவ ரசிகர்கள் நிரூபிக்கிறார்கள்!

- சீதா ரவி

கம்பீரமான தோற்றம், பெயரைப் பெற்றுத் தந்த மீசையினூடே விரியும் வெள்ளைச் சிரிப்பு... கலகலப்பாகப் பேசுகிறார் கலைமாமணி மீசை முருகேசன்.

"என்னுடைய சங்கீத ஞானம் எனது தந்தை தவில் வித்வான் சுப்பிரமணிய முதலியாரிடமிருந்து வந்தது. நான் அடிப்படையில் கடம் வாசிப்பவன். நானாகத்தான் கற்றுக் கொண்டேன். எம். கே. தியாகராஜ பாகவதர், வசந்த கோகிலம், டி. கே. பட்டம்மாள், ராதா - ஜெயலக்ஷ்மி உட்பட எத்தனையோ வித்வான்களின் கச்சேரிகளுக்கு வாசித்திருக்கிறேன்.

"ஆனால் என்னுடைய இன்றைய பலம் ஒரு மணி நேரம் நான் நிகழ்த்தும் தனி மனிதக் கச்சேரிகளாகும். இந்தக் கச்சேரிகளில், நானே வடிவமைத்த பதினைந்து வகை வாத்தியங்களை இசைக்கிறேன். உபயோகமற்றவையென நிராகரிக்கப்படும் பொருள்களிலிருந்து பலவிதமான இயற்கை ஒலிகளை வரவழைக்கிறேன்.

"இத்தகைய கச்சேரிகளை பல அயல் நாடுகளிலும் நூற்றுக்கணக்கில் நிகழ்த்தி, பாராட்டுப் பெற்றுள்ளேன். இந்தியாவில் கச்சேரி நடத்தாத மாகாணம் கிடையாது. ஜப்பானில் கம்ப்யூட்டர் அடிப்படையிலான எலக்ட்ரானிக் கருவி மூலம் இயற்கை ஒலிகளைப் பதிவு செய்யத் திட்டமிடுகிறார்கள் என அறிந்தேன். என் போன்ற கலைஞர்களின் வாசிப்பை ஒலிப்பதிவு செய்து சென்னை வானொலி நிலையம் மூலம் அனுப்பினேன். அதிகபட்ச ஒலிப் பதிவுகளைச் செய்ய உதவியது என்கிற முறையில் சென்னை வானொலி நிலையத்திற்குப் பரிசும், எனக்குப் பணமும் கிடைத்தது."

எம். எஸ். விஸ்வநாதன் இசைக் குழுவில் சுமார் 35 வருடங்களாக வாசித்து வரும் முருகேசன் கடம், கஞ்சிரா, மோர்சிங், தபேலா போன்றவை தவிர, தாமே வடிவமைத்த கடசிங்காரி, மோங்கோஸ், ஏக்தார், கபஸ் போன்ற பல வாத்தியங்களையும் வாசித்து வருகிறார்.

மூக்கை விரல்களால் அழுத்தி நாதஸ்வரத்தின் ஒலியைத் தத்ரூபமாக உண்டாக்குகிறார்!

மழை, இடி, மின்னல் சப்தங்களை அலுமினியத் தகடு அசைவுகள் மூலம் எழுப்புகிறார்.

பவுடர் தீர்ந்த பாண்ட்ஸ் டப்பாவில் பச்சைப் பயறுகளைப் போட்டு மூடி, தகுந்தபடி உருட்டி 'டிரம்' வாத்திய ஒலியை ஏற்படுத்துகிறார்!

சினிமாவில் குடிசை பற்றி எரிகிற காட்சியில் வரும் சப்தங்களைச் சாதாரண பிளாஸ்டிக் ஷீட்டைக் கசக்குவதன் மூலம் உண்டாக்குகிறார்!

"இப்படியாகப் பலதரப்பட்ட ஒலிகளை, தேவையில்லாத பொருள்களைக் கொண்டே உருவாக்கி, திரை இசைக்கு உதவுவதுடன் Special effecta அளிக்கவும் முடிகிறது" என்கிறார் மீசை முருகேசன்.



கின்னஸில் இடம் கேட்கிறார் மீசை முருகேசன்...!



''இம் மாதிரி ஒலிகளை எழுப்ப இய லும் என்கிற எண்ணம் எப்போது முதலில் எழுந்தது?''

''1950 ம் வருடம் ஒருநாள், என் தாயார் கொட்டாங்கச்சியைத் தூக்கிப் போட்டார். அது எழுப்பின ஒலி சற்று மாறுதலாக இருந்தது... உடனடியாகக் கொட்டாங்கச்சி யில் ஒரு வாத்தியம் தயாரித்து வாசித்தேன். இப்படியே வேண்டாத பொருள்களைக் கொண்டு விதவிதமான ஒலிகள் எழுப்பக் கற்றுக் கொண்டேன்'' என்று கூறும் மீசை முருகேசன், தமது வாசிப்பை வீடியோ காஸட்டில் பதிவு பண்ணி கின்னஸ் நிறுவன நிர்வாகிகளுக்கு அனுப்பியுள்ளார். மிக அதிகமான வாத்தியங்கள் வாசிப்பவர் என்ற அடிப்படையில் கின்னஸ்ஸில் இடம் கோரியிருக்கிறார்.

பேட்டி : நாயகன்
படங்கள் : யோகா

'விக்கு' வுக்கு 'கிராமி' விருது!

சென்னை திருவல்லிக்கேணியில் 'ஜெய் கணேஷ் தாள வித்யாலயா' நடத்தி, எம்.எஸ்.ஸின் இசைக் குழுவில் ஒருவராய் ஐ.நா. சபையில் கச்சேரி செய்து, மேற்கத்திய இசைக் குழுக்களிலும் இடம் பெற்று உலகப் புகழ் பெற்று விட்ட 'விக்கு' வினாயகராமின் மலரும் நினைவுகள் :


* விக்கு

என் சகோதரியும் நானும் இரட்டையர்கள். எனக்கு ரமாமணி என்றும், சகோதரிக்கு சீதாமணி என்றும் பெயர். எங்கள் ஜாதகத்தைக் கணித்த குடும்ப ஜோதிடர் இரண்டு குழந்தைகளும் ஒரே இடத்தில் வளர்ந்தால் ஆபத்து. ஒன்றை யாருக்காவது 'தத்து' கொடுத்து விடுங்கள் என்று ஆலோசனை கூறியதன் பேரில், எங்களுடைய பெற்றோர், எங்களில் ஒருவரை யாருக்காவது தத்து கொடுத்து விடுவது என்று முடிவு செய்தார்கள். ஆனால், உடல் பலஹீனமான என்னையோ, சீதாமணியையோ சொந்தத்தில் கூட தத்து எடுத்துக் கொள்ள யாரும் முன் வரவில்லை. கடைசியில், என் அப்பா, எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பிள்ளையார் கோவிலில், சாஸ்திர சம்பிரதாயப்படி, என்னை விநாயகருக்கே தத்து கொடுத்துவிட்டு, என் பெயரையும் 'விநாயகராமன்' என்று மாற்றி வைத்து விட்டார். இதுதான் ரமாமணி, விநாயகராம் ஆன கதை.

அப்பா பெயர் டி.ஆர். ஹரிஹரசர்மா. மிருதங்கம் மற்றும் கடம் வித்வான். குடும்பத்தில் கஷ்ட ஜீவனம். ஒரு எலெக்டிரிக் டிரெயின் விபத்தில், விரலில் அடிபட்டு, விட்டதால், அப்பாவால் மிருதங்கம் வாசிக்க முடியாத நிலைமை. உடனே மோர் சிங் கற்றுக் கொண்டார். எனக்குக் கடம் வாசிக்கக் கற்றுக் கொடுத்தார்.

தாம் வாசிக்கும் கச்சேரிகளுக்கு, மகனையும் அழைத்துக் கொண்டு போய், கடம் வாசிக்க வாய்ப்பு வாங்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணம். அதன் மூலம், கஷ்ட ஜீவனமாக இருந்த குடும்பத்துக்கு இன்னும் சிறிது வருவாய் கிடைக்குமல்லவா... நானும் ஆசையாகக் கற்றுக் கொண்டேன்.

ஜார்ஜ் டவுனில் தட்சிணாமூர்த்தி கோவிலில் 1955 - ல் ஒரு கச்சேரி. அதற்கு என் அப்பாதான் மோர்சிங். கோவில் நிர்வாகிகளிடம் நல்லபடியாகப் பேசி, எனக்கும் ஒரு வாய்ப்பை வாங்கிக் கொண்டு வந்துவிட்டார். எனக்கு அப்போது பத்து வயது இருக்கும். அதுதான் என் முதல் கச்சேரி. ஒரு ரூபாய் சன்மானம் கொடுத்தார்கள். அதுவே பெரும் மகிழ்ச்சியை அளித்தது.

எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு என் மேல் தனி அன்பு. ஒரு முறை அவருக்குக் கொல்லத்தில் கச்சேரி. கடம் வாசிக்க என்னை அழைத்துக் கொண்டு



* பிளானட் டிரம் இசைக்குழு

போக முடிவு செய்து, என் அப்பாவுக்குச் சொல்லி அனுப்பினார். எனக்கோ அப்போது உடல் நலமில்லை. அப்பாவும், என் உடல் நிலை காரணமாக அனுப்ப முடியவில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டார். எம்.கே.டி. வேறு ஒரு கச்சேரியை முடித்துக் கொண்டு காரில் நேரே எங்கள் வீட்டுக்கு வந்து பாதி ராத்திரியில் கதவைத் தட்டினார். ''நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். விநாயகராமனை என்னுடன் கச்சேரிக்கு அனுப்பிவையுங்கள்'' என்று கேட்டவுடன் என் தந்தையாரால் தட்ட முடியவில்லை. ''இதோ, படுத்துக் கொண்டிருக்கிறான் பையன்' எழுப்பிக் கேளுங்கள். 'வருகிறேன்' என்றால் தாராளமாய் அழைத்துக் கொண்டு போங்கள்'' என்று கூறிவிட்டார். எம்.கே.டி. என்னைத் தட்டி எழுப்பிக் கேட்டார். எனக்கு நிலைமையைப் புரிந்து கொள்ளச் சில விநாடிகளாயிற்று. நான் தலையை ஆட்ட, கடகட வென்று, கொல்லம் புறப்பட நான் தயார்ப்படுத்தப்பட்டேன். காரில், பின் சீட்டில் நானும், அவரும். அவர் மடியில் தலைவைத்துத் தூங்கியபடியே பயணம் செய்தேன்.

ஒரு நாள் பாரகன் தியேட்டரில் எம்.ஜி.ஆர். சினிமா. அப்பாவுக்குத் தெரியாமல், அம்மாவிடம் மட்டும் சொல்லிவிட்டு, சினிமாவுக்குப் போய் விட்டேன். படம் பார்த்துக் கொண்டேயிருக்கும் போது திடீரென்று ஒரு ஸ்லைடு : ''கடம் வாசிக்கும் விநாயகராமன், உடனடியாய்த் தியேட்டர் ஆபீசுக்கு வரவும்!'' என்று அறிவிப்பு! விழுந்தடித்துக் கொண்டு, தியேட்டர் ஆபீசுக்குப் போனால், அங்கே என் அப்பா! நடுங்கிப் போனேன்.

''கிச்சாலீஸ்வரர் சபாவில் மாலியுடைய புல்லாங்குழல் கச்சேரி. உன்னை உடனடியாக அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்'' என்றார் அப்பா. வீட்டுக்குப் போய் கடத்தை எடுத்துக் கொண்டு, சபாவுக்குப் போனால், ரசிகர்கள் எல்லாம் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். மாலி மனம் மாறி கச்சேரியை கான்சல் செய்துவிட்டிருந்தார். திருட்டுத்தனமாக சினிமா சென்றதற்காகத் திட்டு வாங்கியதுதான் மிச்சம்!

ஆல் இந்தியா ரேடியோவில், எனக்குக் கிடைத்த உத்தியோகத்தை ஏற்றுக் கொண்ட ஒரு சில மாதங்களுக்குள்ளாக, எனக்கு, இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் மெக்லாஃப்ளே என்ற கிடாரிஸ்ட்டும், வயலின் வித்வான் எல். சங்கரும் இணைந்து, ஒரு புதிய குழுவை அமைக்கும் எண்ணத்துடன் இந்தியா வந்தனர். வட இந்தியாவிலிருந்து, தபலா கலைஞர் ஜாகிர் ஹுசைன், தெற்கே இருந்து நான் இருவரையும் இணைத்துக் கொண்டு, கிடார், வயலின், தபலா, கடம் காம்பினேஷனில் புதிய இசைக்குழு உருவாயிற்று. மூகாம்பிகை கோவிலுக்குப் போய் விட்டு வந்த கையோடு, அந்த இசைக் குழுவுக்கு 'சக்தி' என்ற பெயர் சூட்டப்பட்டது. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் 'சக்தி' குழு சக்கைப் போடு போட்டது. அப்போதுதான் எல்.சங்கர், மேற்கத்திய ரசிகர்களுக்குச் சுலபமாய்ப் பரிச்சயம் செய்யும் எண்ணத்துடன் விநாயகராமன் என்கிற பெயரை ''விக்கு'' வாக்கினார்.

சக்தி இசை நிகழ்ச்சிகளில் தபலா, கடம் ஆகியவை பக்கவாத்தியங்களாகச் செயல் படாமல் பிரதான வாத்தியங்களாகவே விளங்குகின்றன.

ஏதென்ஸ் நகரில் 'சக்தி' குழுவின் இசை நிகழ்ச்சி. நான் நேரே ஏதென்ஸ் வந்து விட்டேன். மற்ற மூவரும் லண்டன் போய் விட்டு, அதன் பின் ஏதென்ஸ் வருவதாய்த் திட்டம். ஓட்டலுக்கு வந்து, பெட்டியைத் திறந்து பார்த்தால், கடம் சுக்கல், சுக்கலாய் உடைந்து விட்டிருந்தது! எனக்கு அழுகை யாய் வந்து விட்டது. செண்டிமெண்ட்டலாய் ரொம்ப அப்செட் ஆகிவிட்டேன். உடனே லண்டனுக்குப் போன் செய்து, ஜாகிரிடம் நடந்ததை விளக்கிவிட்டு, ஸ்பேர் கடம் கைவசமில்லாத நிலையில், பேசாமல் ஊருக்குப் புறப்பட்டுப் போகட்டுமா என்று கேட்டேன்.

''காண்டிராக்ட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு, இப்படி திடீரென்று ஊருக்குப் போகிறேன் என்று கிளம்பினால் ஏதாவது சட்ட சிக்கல் எழலாம். வேறு ஏதாவது கடம் கிடைக்குமா என்று பாருங்கள்'' என்று அவர் கூறிவிட்டார்.

உடனே மெட்ராசுக்கு டெலிபோன் பண்ணினேன். உடனடியாய் மாற்று கடம் அனுப்ப ஏற்பாடு செய்யச் சொன்னேன். என் வீட்டில், மனைவியும், சகோதரர்களும் மனம் கலங்கிவிட்டனர். மனச்சாந்திக்காகக் காஞ்சிபுரத்தில் பரமாச்சாரியாளைத் தரிசிக்கச் சென்றனர்.

'இதற்கிடையே ஜாகிர் ஹுசைன் மூலம் விஷயம் தெரிந்து கொண்ட லண்டன் வாழ் தமிழர், ஒருவர், ஜாகிர் ஹுசைன் மூலமாகவே ஒரு கடம் கொடுத்து அனுப்பி னார்.

மிகப் பெரிய ஆச்சர்யம் என்னவெனில் அந்த லண்டன் அன்பர் தமது சென்னை விஜ யத்தின் போது, என்னிடமிருந்து நினைவுப் பரிசாகக் கேட்டு வாங்கிச் சென்றதுதான் அந்தக் கடம்!

பரமாச்சாரியாள் அருளால்தான் இது நேர்ந்தது என்று நெகிழ்ந்து போனேன்.


பிளானெட் டிரம் என்று ஓர் அமெரிக்க இசைக்குழு. தாள வாத்தியங்களுக்கு முக்கி யத்துவம் தரும் அந்த இசைக்குழுவில் ஜாகிர் ஹுசைனும் நானும் இடம் பெற் றிருக்கிறோம். எங்கள் 'பிளானட் டிரம்' இசைக்குழு வழங்கியுள்ள 'இசைத்தட்டு ஆல்பம்' உலகப் புகழ் கிராமி விருது பெற் றுள்ளது. இந்தியாவுக்கே பெருமை சேர்க்க எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததே என்று எண்ணி எண்ணி மகிழ்கிறோம்.

பேட்டி : எஸ். சந்திரமௌலி



22 - ஆம் தேதி கிருஷ்ணகான சபா; 24 - மியூசிக் அகாடமி; 25 - தமிழிசை; 27 - இண்டியன் ஃபைனார்ட்ஸ்...''

''அப்படியா? இந்த வருஷம் உங்களுக்கு நல்ல வேட்டைதான்... நிறைய கச்சேரி சான்ஸ்.''



''நீங்க ஒண்ணு - எந்தத் தேதில எந்த சபாவிலே கச்சேரி கேட்கப் போகலாம்னு ஒரு 'புரோக்ராம்' போட்டு வெச்சிருக்கேன். அதைச் சொன்னேன்...''



''மத்தியானம் வசந்தா கலர் நல்லா இருந்தது, இல்லே?''

''புடைவைக் கலரா?''

''ஓ... மத்தியா னம் கச்சேரிலே வசந்தா 'வர்ணம்' பிர மாதமாப் பாடி னார்னு சொன்னா, நீ வேறே...!''


அந்த அதிர்ச்சி தாளாமல்....அந்தச் சின்ன நகரம் வெலவெலத்தது. மூலை முடுக்கெல்லாம் பயத்தோடும் பதைப்போடும் புலம்பல்கள். டீக்கடைகளில், பஸ் நிலையத்தில், சினிமாத் தியேட்டர்களில் எங்கும் அதே பேச்சுத்தான்.

தீப்பெட்டியாபீஸ்கள் எல்லாமே இன்றைக்கு லீவ் விடப்பட்டன. எந்த வேலைகளும் நடக்கவில்லை. எல்லா ஆலைகளும் மூடிக் கிடந்தன. வாட்ச்மேன்களைக் கூட வரச் சொல்லவில்லை.

தீப்பெட்டி ஆலைகளை நிறுத்தியவுடன், நகரம் வெறும் வீடு போல ஆகி விட்டது. கடைசி ஊருக்குள் நுழைகிற டவுன் பஸ் மாதிரி... அங்கும் இங்குமாய் ஓரிரு மனிதர்கள். ஜனக் கூட்டமேயில்லை. சவமாயிற்று, ஊர்.

வெறிச்சோடிக்கிடக்கிறது, மெயின் பஜார். நடந்த சம்பவத்தைக் கண்டித்து நாலைந்து தட்டிப் போர்டுகள் மெயின் பஜாரில் முளைத்து விட்டன. அதில் ஒன்றுதான் ''ஆலை முதலாளியைக் கைது செய்'' என்று தெளிவாகக் கூறியிருந்தது.

விஷயம் இதுதான். முந்தாநாள், மதியச் சாப்பாட்டுக்குக் கலைந்து விட்டு, திரும்ப வேலைக்குள் நுழைகிற போது அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவள் காணாமல் போயிருக்கிறாள் என்பதை அன்று சாயங்காலம் வரை யாரும் உணரவேயில்லை.



வேலைகள் முடிந்து பிட்டைகளில் குறிக்கிற போதுதான், அவள் காணவில்லை என்று உணரப்படுகிறது. தீப்பெட்டியாபீஸ் முழுவதும் பரபரப்பு. ஆலை முழுக்கத் தேடிப் பார்க்கிறார்கள். மூலைமுடுக்கெல்லாம் தேடுகிறார்கள். காணோம்.


ஒரே பரபரப்பு. சிறுமிகளின் அழுகை. கதறல். கூச்சல். திகைப்பு. குழப்பம்.

மறுநாள், பார்த்தால் அவள் ஊருக்குப் போகிற வழியில், நகருக்கு ஒதுக்குப்புறமாக, பிணமாகக்கிடக்கிறாள்...

தாவணியும், உயிரும் எப்போதோ... உருவப்பட்டு விட்டன.

நகரம் திகைத்துப் போய்விட்டது. ஜனங்கள் 'ஐயோ பாவம்' என்று புலம்பினர். அனுதாபப்பட்டனர்.

''ஐயோ..... யாரு பெத்த புள்ளையோ... எந்தப் பாவிப் பய சீரழிச்சானோ... உயிர் போறப்போ... அந்தப் புள்ளை மனசு என்ன மாய்த் துடிச்சிருக்கும்?'' என்று பெண்கள் மருகித் தவித்தனர்.



போலீஸ் வந்தது. காவல் இருந்தது. சுற்றி மொய்த்த ஆட்களைத் துரத்தியது. சடங்கு, சம்பிரதாயங்களின் படி வேலைகள் நடந்தன.

பெண்ணுக்குப் பாத்தியப்பட்ட கிராமத்தினர் சிலர் வந்தனர். அழுது குமுறினர். சுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். பெரிதாக வம்பு தும்புகளில் ஈடுபடுவதைப் போல மிரட்டினர்.

இன்ஸ்பெக்டர் அடங்கிய - அரவணைப்பான தொனியில் - கண்டிப்புடன் பேசியபின், எல்லாம் அடங்கிப் போயிற்று.

பாவம், அந்தப் பெண்ணின் அம்மா மட்டும் ஒற்றை மனுஷியாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

அவளிடம் வந்தவர்களெல்லாம்... எம்.எல்.ஏ.விடம் சென்று முறையிடும்படியே வற்புறுத்தினர். நஷ்ட ஈடு கிடைக்கும் என்றனர்.

அதிலும் சிலர், ''சங்கத்துக்காரங்க கிட்டே போயிடாதே. அவங்க சட்டம், கொள்கைன்னு பேசி, கிடைக்கிறதும் கிடைக்கவிடாமப் பண்ணிடுவாங்க'' என்று விஷமமாகப் பேசினர்.

மதியச் சாப்பாட்டுக்குக் கலைகிற போது, காதலனைச் சந்திப்பதாகத் திட்டமிட்டு... வாட்ச்மேனை எப்படியோ ஏமாற்றி, அரவமில்லாமல் வெளியேறியிருக்கலாம்.

அப்போது... காதலன் திட்டமிட்டபடி வராமல் போயிருக்கலாம். தனித்து நின்ற இளம் பெண்ணை வேறு சிலர் வளைத்திருக்கலாம். கற்பழிப்பு முயற்சியில் மரணம் சம்பவித்திருக்கக் கூடும்....

இதுதான் போலீஸ் சொல்கிற யூகம். இப்படித்தான் முதல் தகவல் அறிக்கை. இந்த யூகமே... ஊர் முழுக்கச் செய்திகளாகப் பரப்பப்பட்டது.

பாவம்... ஊரிலும் அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள்.

இன்னொரு உலகம் இருக்கிறது. இருட்டுக்குள் இயங்குகிற உலகம். பணம் மழைக்காலத் தண்ணீராகப் புரள்கிற உலகம். அந்த உலகத்துக்குத்தான், உண்மை தெரியும். ஆனால், அந்த உலகம், உண்மையை - நீதியை - மனிதாபிமான மானத்தை எல்லாவற்றையும் விழுங்கி ஜீரணித்துவிட்டது.

அருந்தனை மனசுக்குள் சிரித்துக் கொண்டான். அவனும் அந்த உலகத்தைச் சேர்ந்தவன்தானே!


டெக்கில் படம் ஓடிக் கொண்டிருந்தது. இப்படிப் பகலில் ஹாய்யாக வீட்டில் உட்கார்ந்திருக்க முடியுமா?

வெறும் கைலியை மட்டும் உடுத்தியிருந்தான். சோபாவில் சுதந்திரமாகச் சரிந்து கிடந்தான். படுத்த மாதிரியும் இல்லாமல், உட்கார்ந்த மாதிரியும் இல்லாமல் இடைப்பட்ட ஒரு நிலையில்.

ரத்னம் தட்டில் பலகாரம் ஏதாவது கொண்டு வந்து கொண்டிருந்தாள். இவனும் அதைக் கொறிக்க.. படம் பார்க்க.. ரத்னத்துடன் ஏதாச்சும் வாய் கொடுத்துக் கொள்ள....

ரத்னத்துக்குச் சொல்லிமாளாத சந்தோஷம். புருஷன் வீட்டில் இருப்பதுவும்..... சிரித்துப் பேசுவதும்.... அவளுக்குப் பெரிய கோட்டையே பிடிபட்டுப் போன மாதிரியிருந்தது.

மேலாண்மை பொன்னுச்சாமி



"என்ன, பாதி பேர் திரைச்சு எழுந்து போயிட்டா?"
"காண்டீன்லே கூட ஸ்பெஷல் வெங்காய நெய் ஊத்தப்பம் ரெடியாயிடுத்துன்னு நியூஸ் வந்திருக்கும்...!"

டெக்கில் ஓடுகிற படத்திலுமா... ஒரு கற்பழிப்புக் கொலை நிகழ வேண்டும்? கொலையை மறைக்க அந்தப் பணக்காரன் பெரிய போலீஸ் ஆபீஸருடன் பேச வேண்டும்? வேறுவிதமாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு... கோர்ட்டில் வழக்கு நடக்க வேண்டும்?

அருஞ்சுனைக்குள் ஏதோ ஈரமான நினைவுகள். மாபெரும் கொலைபாதகத்திற்கு மௌனத்தின் மூலம் தானும் உடந்தையாக இருந்துவிட்ட மாதிரி ஒரு பயம், பிரமை.

இத்தனைக்கும்... அந்த தீப்பெட்டி யாபீஸ், இவனுக்கு முழுக்க முழுக்க போட்டி. தீவிரமான போட்டி.

இந்நேரம் அருஞ்சுனை இலேசாக வாயைத் திறந்தால் போதும், அந்த பேக்டரியே க்ளோஸ். கைது, வழக்கு என்று முதலாளி அலைவது மட்டுமல்ல....

பேக்டரியின் பெயர் பலமுனைகளிலும் ரிப்பேராகி விடும். ஒரு ஈங்குஞ்சு கூட வேலைக்குப் போகாது. 'கொலைகார ஆபீஸ்' என்று எல்லாக்கிராம மக்களும் சீல் வைத்து விடுவார்கள்.

பெரும் தொழில் போட்டியாக இருக்கிற நந்தியை உடைத்துத் தூள் தூளாக்கி விடலாம்.

ஆனாலும், இவனுக்குச் செய்ய மனமில்லை. விருப்பமில்லை. உரிமையாளர்களுக்குள் ஒரு ஒற்றுமை இருந்தாக வேண்டும்.

பல முனை ஆபத்துகள் நிரம்பியுள்ள சிறு தொழில். இது பெரிய பகாசுரன்களை எதிர்த்து உயிர் வாழ்கிற சிறு தொழில்.

இதில் ஒருவரை ஒருவர் ஜெயிக்க ஆசைப்படுகிற போட்டிகள் இருக்கலாம், ஒழிக்க முனைகிற பொறாமை ஆகாது. துரோகம் ஆகாது.

அழிவு என்று வருகிற போது.. அது தீயாக வரும். பற்றிய வீட்டில் மட்டும் எரிந்து முடியாது. சுற்றியுள்ள சகல வீடுகளையும் அது தொடும். பற்றும். கரியாக்கி விடும்.

பொறாமைப்படுவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மௌனத்தைவிட கூடுதலான எச்சரிக்கை எது இருந்துவிட முடியும்?....

"ரத்னம்....."

"ம்?"

"நீ படம் பாரு... நா சித்தே உடம்பைச் சாய்க்கேன்."

"தூங்கணுமா?"

"இல்லே, ரெஸ்ட்."

உள்ளே போனான். மின் விசிறி சுவிட்சைத் தட்டிவிட்டுப் படுத்தான்.

மன அயர்ச்சியுடன் கண்களை மூடினான். காற்றின் சுகத்தில் லயித்தான். அலை பாய்கிற மனசு, மெல்ல மெல்ல கண் மூடுகிறது.

கிழிசல்களோடு மல்லாந்து கிடக்கிற அந்த இளம் பெண் - வெறிபிடித்த மனித மிருகங்களால் குரூரமாகக் கிழிக்கப்பட்ட பெண் - மானத்தையும் உயிரையும் இழந்து அனாதையாகக் கிடந்த ஓர் ஏழைச் சிறுமி...

மதியச் சாப்பாட்டு நேரம் பார்த்து... வாட்ச்மேனுக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டான். அந்தப் பெண்ணுக்கு, 'அம்மா வெளியே நிக்குறா. கூப்பிடுறா. சத்தமில்லாம வா' என்று மேஸ்திரி மூலமாகத் தகவல் போகிறது.

வெளியே வந்தவளை வாரியள்ளிப் போட்டுக் கொண்டு ஒரு கார் தூள் பறந்து கிறது.

எல்லாம் பேக்டரி முதலாளியின் செல்ல மகன் வேலை.

அவனும் அவனது நண்பர்களும் அந்த விருந்தைப் பலவந்தமாகத் தின்று 'தீர்க்கி'ன்றனர்.

சிந்தின பருக்கையாகக் கிடந்த உடல், அப்புறப்படுத்தப்படுகிறது....

அந்த இரவிலேயே... முதலாளிக்கு ரகசியமாகத் தகவல் போகிறது. அவர் 'பேக்டரியின் பெயர் கெட்டுவிடக் கூடாதே... தொழில் நாசமாகிவிடக் கூடாதே' என்று மட்டும் கவலைப்படுகிறார்.

அதைக் காப்பாற்ற மட்டுமே, அவர் எடுக்கிற நடவடிக்கைகளில்... இயல்பாகவே கொலை மறைக்கப்பட்டு விடுகிறது.

டெக்கில் படத்தின் சப்தம் கேட்கிறது. கதாநாயகன் பாய்ந்து பாய்ந்து போடுகிற சண்டையின் சினிமாச் சத்தம்.

சொர்ணத்தையும் இதே போல் கடத்தி விட்டாலென்ன.... கடத்தி விடலாம். ஒரு நாள் அனுபவிக்கவும் செய்துவிடலாம்.

அதுவல்ல தேவை. எனக்குச் சொர்ணம் வேண்டும். முழுசாக வேண்டும். என் மீது விழும் வெளிச்சமாக என் நிழலைக் கர்ப்பந்தரித்துப் பெற்றுத் தருகிற வெளிச்சமாக....

என்றென்றும் என் சொத்தாக - என் உரிமையாக - என் வாழ்வாக, எனக்கே வேண்டும்.

சம்மதிப்பாளா?

லேசாகக் கை நீட்டிய ஸ்டோர் மேனையே பத்ரகாளியாகி அந்தப் பாடு படுத்தி ஆர்ப்பாட்டம் செய்தவள் -

சம்மதிப்பாளா?

அவள் என்ன ஜாதி? நான் என்ன ஜாதி?

கிராமங்கள் சூழ்ந்த - கிராமக் கலா சாரத்திலிருந்து இன்னும் உருவிக் கொள் ளாத - இந்த நகரத்தில் ஜாதி கடந்த சேர்க்கை அனுமதிக்கப்படுமா? ரத்தக்களறி வருமா?

ஒரு காலத்தில் ஓஹோவென்று வாழ்ந்த குடும்பம்.

இன்று நொறுங்கிப் போய், கூலி வேலைக்கு வந்தாலும்... அந்தப் பிறவிக் குணம் போகுமா? உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த கர்வம் - உயர்ந்த ஜாதி என்கிற அகந்தை - போகுமா?

கர்வமும் அகந்தையும் உள்ள சொர் ணம், என்னை எப்படி ஏற்பாள்? அடுத்த ஜாதிக்காரன். ஒரு காலத்தில் போர்மேனாக இருந்தவன். என்னை மதிப்பாளா?

சம்மதிக்கவே மாட்டாள்....

சம்மதம் என்பது, அத்தனை முக்கியமா? அவசியமா?

எப்படியும் சொர்ணம் வேண்டும். சொர்ணத்தின் இழப்பை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. எனக்கு அவள் வேண்டும். அவள்தான், என் வாழ்க்கையை அர்த்தப்படுத்துவாள். நான் ஆண்மகன் என்று என்னையே நம்ப வைப்பாள். என்னைத் தகப்பனாக்குவாள்.

வெற்று மரமாக இருக்கும் என்னை... அவள்தான் வாழை மரமாக்குவாள். என் வாரிசை என் மடியில் போடுவாள்....

அப்படியானால்... சொர்ணம் எனக்கு எதுவாக வேண்டும்? சின்ன வீடாகவா? ஆம். அப்படித்தான்...

குழந்தை பெற்றுத் தருகிற ஓர் உயிர்.

அவளை எப்படியாவது ஆகர்ஷிக்க வேண்டும். வசீகரிக்க வேண்டும். வசப் படுத்த வேண்டும்?

அதற்கு வழி? கருவி?

என் பணம். அவள் பார்த்தறியாத ஆடம்பரம்... அவள் இழந்து விட்டு ஏங்கு கிற பணக்கார வாழ்க்கை. பட்டுச் சேலை கள்... தங்க நகைகள்... கவலையற்ற, சுக போக வாழ்க்கையனுபவங்கள்.

இவைதான் என் ஆயுதங்கள். அஸ்தி ரங்கள்.

பயன்படுமா? பாயுமா? குறிமாறாமல் தைக்குமா?

பறவையைக் காயப்படுத்தாமல் மடி யில் கொண்டு வந்து போடுமா? மெல்ல மெல்ல உறக்கத்தின் மடியில் புதைந் தான்.

(தொடரும்)

புளியை நனைத்துக், கரைத்து, வடிகட்டும் தொல்லையிலிருந்து விடுதலை!



அன்றாடம் எழுந்ததுமே இன்றைக்கு என்ன சமையல் என யோசித்து, முதற்காரியமாக பெண்கள் செய்வது புளியை நனைக்கும் வேலையைத்தான். புளியை முன் கூட்டியே ஊற வைத்து, கசக்கி சாறெடுத்து, கோது, விதை முதலியவை நீங்குவதற்காக வடிகட்ட வேண்டும். அவசரச் சமையல் என்றால் கேட்கவே வேண்டாம். இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளியாக வந்திருப்பதுதான் டாமரிண்ட் ப்யூரி.



வற்றல் குழம்பு

டாமரிண்ட் ப்யூரி என்பது புத்தம்புது புளியிலிருந்து எடுக்கப்பட்ட கெட்டியான சாறு. பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படாத இது அசல் புளியின் சுவையுடனும், நிறத்துடனும், மணத்துடனும் உபயோகிக்கத் தயார் நிலையிலே வருகிறது. குறிப்பாக, வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

வற்றல் குழம்பு, மிளகு குழம்பு, புளிக் காய்ச்சல், புளிப் பச்சடி, புளி மிளகாய் போன்ற புளியை பிரதானமாகக் கொண்டவற்றை, நினைத்ததும் சுலபமாக இதைக் கொண்டு தயாரிக்கலாம். இதர பொருட்களைத் தாளித்துக் கொண்டு, சிறிது நீர் விட்டு, டாமரிண்ட் ப்யூரியை தேவையான அளவு போட்டு இரண்டு கொதி வந்ததும் இறக்கி விடலாம்.



புளியோதரை

டாமரிண்ட் ப்யூரி அதி நவீன, அழகிய டெட்ரா பேக்கிலே பேக் செய்து வருகிறது. பேக்கைத் திறந்த பின் 6 நாட்களுக்கு இதை ஃப்ரிட்ஜில் வைத்திருக்கலாம்.

பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை.
அதனால் பேக்கைத் திறந்தபின் இதை ஃப்ரிட்ஜில் வைத்து 6 நாட்களுக்குள் உபயோகிக்கவும்.

Godrej*
FOODS

டாமரிண்ட் ப்யூரி.

புளியின் அசலான சுவை,
தொல்லையிலிருந்து விடுதலை.

தமிழ்நாட்டில் மட்டும் கிடைக்கிறது.

Enterprise/CFL/480 Tm

சிவகாமியின்

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்
சிம்மக் கொடி

உயிர்க்களை இழந்து மரணத்தின் அமைதி குடிகொண்டிருந்த கண்ணபிரானுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் சிவகாமி கண்ணீர் விட்டுத் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

''அம்மா! எத்தனை நேரம் அழுது புலம்பினாலும் கண்ணனுடைய உயிர் திரும்பி வரப்போவதில்லை. யுத்தம் என்றால் அப்படித்தான். கண்ணபிரான் ஒருவன் தானா இறந்தான்? இவனைப் போல் பதினாயிரக்கணக்கான வீரர்கள் பலியானார்கள். தயவு செய்து புறப்படுங்கள். இந்த வீட்டுக்குப் பக்கத்தில் தீ வந்து விட்டது'' என்று பரஞ்சோதி கூறினார்.

கண்ணீர் ததும்பிய கண்களினால் சிவகாமி அவரைப் பரிதாபமாகப் பார்த்து, ''தளபதி! யுத்தம் வேண்டாம் என்று தங்களுக்கு ஓலை எழுதி அனுப்பினேனே!'' என்று விம்மினாள்.

''ஆம், அம்மா! யுத்தத்தைத் தடுப்பதற்கு நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். என் முயற்சி பலிதமாகும் சமயத்தில் அந்தக் கள்ள பிக்ஷு வந்து எல்லாக் காரியத்தையும் கெடுத்துவிட்டான். வாதாபி நகரம் அழிய வேண்டும் என்று விதி இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?''

''ஐயா! விதியின் பேரில் ஏன் குற்றம் சுமத்துகிறீர்கள்? எல்லாவற்றிற்கும் காரணம் இந்தப் பாதகிதான், அன்றைக்குத் தாங்களும் அவரும் வந்து எவ்வளவோ பிடிவாதமாக என்னை அழைத்தீர்கள். மூர்க்கத்தனத்தினால், 'வரமாட்டேன்' என்று சொன்னேன்....''

''அம்மா! எவ்வளவோ காரியங்கள் வேறுவிதமாக நடந்திருக்கலாம். அதையெல்லாம் பற்றி இப்போது யோசித்து என்ன பயன்? தயவு செய்து புறப்படுங்கள். மாமல்லரும் தங்கள் தந்தையும் தங்களைப் பார்க்க ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பார்கள்.

''தளபதி! அவருடைய முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? என்னால் முடியாது. நான் இங்கேயே இருந்து உயிரை விடுகிறேன். ஆயிரந் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக அவரிடம் சொல்லுங்கள்!'' என்று சிவகாமி சொல்லிக் கொண்டிருக்கும்போது வாசலில் பெருஞ் சத்தம் கேட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் மாமல்லர் உள்ளே பிரவேசித்தார்; அவருக்குப் பின்னால் ஆயனரும் வந்தார்.

''ஆ! இதோ அவரே வந்துவிட்டார்'' என்று பரஞ்சோதி வாய்விட்டுக் கூறி, மனத்திற்குள், ''இத்துடன் என் பொறுப்புத் தீர்ந்தது!'' என்று சொல்லிக் கொண்டார்.

''அவரே வந்துவிட்டார்!'' என்ற வார்த்தைகள் காதில் விழுந்ததும் சிவகாமியின் தேகம் புல்லரித்தது. குனிந்திருந்த தலையை நிமிர்த்தி வாசற் பக்கம் பார்த்தாள். கண நேரத்திலும் மிகச் சிறிய நேரம் மாமல்லருடைய கண்களும் சிவகாமியின் கண்களும் சந்தித்தன.

அடக்க முடியாத உணர்ச்சி பொங்கச் சிவகாமி மறுபடியும் தலை குனிந்தாள். அவளுடைய அடிவயிற்றிலிருந்து ஏதோ கிளம்பி மேலே வந்து மார்பையும் தொண்டையையும் அடைத்துக் கொண்டு மூச்சுவிட முடியாமலும் தேம்பி அழுவதற்கு முடியாமலும் செய்தது.

அப்புறம் சிறிது நேரம் அங்கு என்ன நடந்ததென்றே தெரியாமல் சிவகாமி உணர்வற்றிருந்தாள்.

''ஆ! கண்ணபிரானா? ஐயோ!'' என்று அவளுடைய தந்தையின் குரல் அலறுவது காதில் விழுந்ததும் உணர்வு பெற்றாள்.

''ஆமாம் கண்ணன்தான்! கமலியின் சிநேகிதியைச் சிறை மீட்டு ரதத்தில் வைத்து அழைத்து வர வந்த கண்ணன்தான் மார்பில் விஷக்கத்தி பாய்ந்து செத்துக் கிடக்கிறான், ஆயனரே! உம்முடைய மகளைக் கேளும்; அவளுடைய சபதம் நிறைவேறிவிட்டதல்லவா? அவளுடைய உள்ளம் குளிர்ந்து

சபதம்

விட்டதல்லவா? கேளும், ஆயனரே! கேளும்!''

மாமல்லரின் மேற்படி வார்த்தைகள் சிவகாமியின் காதில் உருக்கிய ஈயத் துளிகள் விழுவதுபோல் விழுந்தன. ஆஹா! இந்தக் குரல் எத்தனை அன்பு ததும்பும் மொழிகளை இன்பத் தேன் ஒழுகும் வார்த்தைகளை ஒரு காலத்தில் சொல்லியிருக்கிறது? அதே குரலில் இப்போது எவ்வளவு கர்ண கடூரமான சொற்கள் வருகின்றன? ஆஹா! இதற்குத்தானா இந்த ஒன்பது வருஷ காலமும் பொறுமையுடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தோம்?

மாமல்லரின் கொடுமையான வார்த்தைகள் பரஞ்சோதிக்கும் பெருந்துன்பத்தை உண்டாக்கின. ''சக்கரவர்த்தி! சிவகாமி அம்மை ரொம்பவும் மனம் நொந்து போயிருக்கிறார்....'' என்று அவர் சொல்லுவதற்குள் மாமல்லர் குறுக்கிட்டு, ''சிவகாமி எதற்காக மனம் நோக வேண்டும்? இன்னும் என்ன மனக்குறை? சபதந்தான் நிறைவேறி விட்டதே? சந்தேகமிருந்தால் வீதி வழியே போகும் போது பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்ளட்டும். வீடுகள் பற்றி எரிவதையும், வீதிகளில் பிணங்கள் கிடப்பதையும் ஜனங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுவதையும் பார்த்துக் களிக்கட்டும். ஆயனச் சிற்பியாரே! உம்முடைய குமாரியை அழைத்துக் கொண்டு உடனே கிளம்பும்!''

சிவகாமியின் மார்பு ஆயிரம் சுக்கலாக உடைந்தது. அவளுடைய தலை சுழன்றது. அச்சமயம் ஆயனர் அவளுக்கு அருகில் சென்று இரக்கம் நிறைந்த குரலில், ''அம்மா, குழந்தாய்! என்னை உனக்குத் தெரியவில்லையா?'' என்றார்.

''அப்பா!'' என்று கதறிக் கொண்டே சிவகாமி தன் தந்தையைக் கட்டிக் கொண்டு விம்மினாள்.

அன்று அதிகாலையில் சேனாதிபதி பரஞ்சோதி வாதாபிக்குள் பிரவேசித்ததிலிருந்து மாமல்லருடைய உள்ளப் பரபரப்பு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. சிவகாமிக்கு ஏதோ விபரீதமான அபாயம் நேரப் போகிறதென்றும் நாம் இங்கே வெறுமனேயிருப்பது பெரிய பிசகு என்றும் அவருக்குத் தோன்றி வந்தது. புலிகேசிச் சக்கரவர்த்தி அரண்மனையில் அகப்படவில்லையென்று மானவன்மரிடமிருந்து செய்தி வந்த பிறகு கோட்டைக்கு வெளியே அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆயனரையும் அழைத்துக் கொண்டு வாதாபி நகருக்குள் பிரவேசித்தார்.

சிவகாமியைச் சந்தித்தவுடனே அவளிடம் அன்பான மொழிகளைக் கூற வேண்டும் என்பதாகத்தான் யோசனை செய்து கொண்டு சென்றார். ஆனால் அவருடைய அன்புக்கும் அபிமானத்துக்கும் பெரிதும் பாத்திரமாயிருந்த கண்ணபிரான் செத்துக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லரின் மனம் கடினமாகி விட்டது. அதனாலேதான் அந்தகைய கடுமொழிகளைக் கூறினார்.

ரதத்தில் ஆயனரும் சிவகாமியும் முன்னால் செல்ல, பின்னால் சற்று தூரத்தில் மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகளின் மீது ஆரோகணித்துச் சென்றார்கள். மாமல்லரின் விருப்பத்தின்படி பரஞ்சோதி தாம் சிவகாமியின் வீட்டு வாசலை அடைந்ததிலிருந்து நடந்த சம்பவங்களையெல்லாம் விவரமாகச் சொன்னார். அதையெல்லாம் கேட்கக் கேட்கச் சக்கரவர்த்தியின் நெஞ்சில் குரோதாக்கினி சுடர் விட்டு எரியத் தொடங்கியது. முக்கியமாக நாகநந்தியைப் பரஞ்சோதி கொல்லாமல் உயிரோடு விட்டு விட்டார் என்பது மாமல்லருக்குப் பெருங் கோபத்தை உண்டாக்கியது. சிவகாமியைப் பெருந் துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகவே அவளைக் கொல்ல எத்தனித்ததாக நாகநந்தி சொன்னாரல்லவா? அதைக் கேட்டபோது, அந்தக் கூற்றில் அடங்கியிருந்த உண்மையை மாமல்லரின் அந்தராத்மா உடனே உணர்ந்தது. அது காரணமாக அவருடைய குரோதம் பன்மடங்கு அதிகமாகிக் கொழுந்து விட்டெரிந்தது.

சிவகாமி தன் அருமைத் தந்தையின் மீது சாய்ந்த வண்ணம் வாதாபி நகரின் பயங்கர வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சென்றாள். அந்தக் கோரங்களைப் பார்க்கச் சகிக்காமல் சில சமயம் கண்களை மூடிக் கொண்டாள். ஆனால், கண்களை மூடிக் கொண்ட போதிலும் காதுகளை மூடிக் கொள்ள முடியவில்லை. ஜ்வாலை விட்டுப் பரவிய பெருந் தீயிலே வீடுகள் பற்றி எரியும் சட சடச் சத்தமும், காற்றின் 'விர்'ரென்ற சத்தமும், குழந்தைகளின் கூக்குரலும் ஸ்திரீகளின் ஓலமும், சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்தி ஓடும் சத்தமும், ஜயகோஷமும், ஹாஹா காரமும் அவளுடைய செவிகளை நிரப்பி அடிக்கடி கண்களைத் திறந்து பார்க்கச் செய்தன.

அமரர் **கல்கி**

அந்த நிலையில் ஒரு முறை மாமல்லர் சிறிது முன்னேறி வந்து ரதத்தின் ஓரமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்த போது சிவகாமி ஆவலுடன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆனால், மாமல்லரோ அவள் பக்கம் தம் பார்வையைத் திருப்பவேயில்லை. ஆயனர் முகத்தை நோக்கிய வண்ணம், ''சிற்பியாரே! நாங்கள் எல்லாரும் இங்கிருந்து புறப்பட்டு வர இன்னும் ஒரு மாதம் ஆகலாம். உங்களுக்கு இஷ்டமிருந்தால் உம்மையும் உமது மகளையும் முன்னதாகத் தக்க பாதுகாப்புடன் காஞ்சிக்கு அனுப்பி வைக்கிறேன். அல்லது நாகநந்தி பிக்ஷு உம்மையும் உமது குமாரியையும் அஜந்தாவுக்கு அழைத்துப் போக விரும்புவதாகச் சொன்னாராம். அது உங்களுக்கு இஷ்டமானால் அப்படியும் செய்யலாம்!'' என்றார்.

அத்தனை கஷ்டங்களுக்கும் யுத்த பயங்கரங்களுக்கும் இடையிலேயும் ஆயனருக்கு ''அஜந்தா'' என்றதும் சபலம் தட்டியது. அஜந்தா வர்ண இரகசியத்தைப் பரஞ்சோதி நாகநந்தியிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட விவரம் இன்னமும் ஆயனருக்குத் தெரியாது. எனவே, அவர் சிவகாமியைப் பார்த்து, ''அம்மா! உனக்கு என்ன பிரியம்? காஞ்சிக்குப் போகலாமா? அல்லது அஜந்தாவுக்குப் போகலாமா?'' என்றார்.

சிவகாமியின் உள்ளம் அந்த நிமிஷத்தில் வயிரத்தை விடக் கடினமாயிருந்தது. ''அப்பா! நான் காஞ்சிக்கும் போகவில்லை! அஜந்தாவுக்கும் போகவில்லை. பல்லவ



குமாரரை என் பேரில் கருணை கூர்ந்து அவர் கையிலுள்ள வாளை என் மார்பிலே பாய்ச்சி என்னை யமபுரிக்கு அனுப்பிவிடச் சொல்லுங்கள். பழைய அபிமானத்துக்காக எனக்கு இந்த உதவி செய்யச் சொல்லுங்கள்!'' என்றாள்.

இவ்விதம் சொல்லிவிட்டு ஆயனரின் மடியின் மீது சிவகாமி மறுபடியும் ஸ்மரணையிழந்து விழ்ந்தாள்.

மாமல்லர் திரும்பிச் சென்று பரஞ்சோதியின் பக்கத்தை அடைந்தார். சிவகாமியின் மீது அத்தகைய குரூரமான சொல்லம்புகளைச் செலுத்திய பிறகு அவருடைய மனம் சிறிது அமைதி அடைந்திருந்தது. ''நண்பரே! அதோ புலிகேசியின் பொய்யான ஜயஸ்தம்பத்தைப் பார்த்தீரல்லவா? ஒன்பது வருஷத்துக்கு முன்பு ஒருநாள் நாம் அந்த ஸ்தம்பத்தின் அடியில் நின்று, செய்து கொண்ட சங்கல்பத்தை இன்று நிறை வேற்றி விட்டோம். அந்தப் பொய்த் தூணை உடனே தகர்த்தெறிந்துவிட்டுப் பல்லவ சைனியத்தின் ஜயஸ்தம்பத்தை நாட்டச் செய்யுங்கள். புதிய ஜயஸ்தம்பத்திலே பல்லவ சேனையின் வெற்றிக்கொடி வானளாவப் பறக்கட்டும்! மகத்தான இந்த வெற்றிக்கு அறிகுறியாக நமது கொடியிலும் விருதுகளிலும் உள்ள ரிஷபச் சின்னத்தை மாற்றிச் சிம்மச் சித்திரத்தைப் பொறிக்கச் செய்யுங்கள்!'' என்று ஆக்ஞாபித்தார்.

(தொடரும்)



திரைகள்

அரசமரத்தடி நிறுத்தத்தில் 'பதினெட்டு' வந்து நின்றது. குருசாமி இறங்கினார். மேற்கே பிரிந்து சென்ற செம்மண் பாதையைப் பிடித்து நடக்க ஆரம்பித்தார்....

தள்ளாமையால் மூச்சிரைத்தது. அரிதாரம் பூசிப் பூசி கருத்திருந்த அவருடைய சுருக்கம் விழுந்த முகத்தில், வியர்வை வழியத் தொடங்கியது.

சே! கிராமங்கள் எப்படியெல்லாம் நிறம்மாறிவிட்டன! அந்தக் காலத்தில் இது மாதிரி கிராமத்துக்குள் நாடகக்காரர்கள் வந்துவிட்டால் எவ்வளவு மரியாதை! எத்தனை உபசரிப்பு! தங்களைச் சந்தோஷப் படுத்தும், அவர்களைச் சந்தோஷப்படுத்துவதில், 'நீ-நான்' என்று ஊரே போட்டி போடும்.

பங்குனி தொடங்கி - வைகாசி முடிய கிராமங்களில் திருவிழா காலம். ஊருக்கு ஊர் 'வள்ளித் திருமணம்', 'சம்பூர்ண ராமாயணம்', 'பக்த பிரகலாதன்', 'அரிச்சந்திர மயான காண்டம்', 'நல்ல தங்காள்' என்று ஒவ்வொரு இரவும் ஒரே நாடக மயமாக இருக்கும்!

நள்ளிரவில்தான் நாடகம் தொடங்கும். ஆனாலும் இரவு சாப்பாடு முடிந்தவுடனேயே ஊர் ஜனங்கள் தண்ணீர்ச் செம்பு, பாய்-தலையணை சகிதம் நாடகம் நடக்கும் திடலில் கூடத் தொடங்கி விடுவர். நாடகம் தொடங்குமுன்பே பல 'பெரிசு'கள் தூங்கிப் போகும். சிலர் தூக்கத்தைப் போக்க பீடி, சுருட்டு புகைத்துக் கொண்டும், பட்டாணி கொறித்துக் கொண்டும் ஊர் வம்பு பேசுவார்கள். ஆனால் என்னதான் கும்பகர்ணத் தூக்கம் போட்டிருந்தாலும், நாடகம் தொடங்கும் முன் வரும் பபூன், 'வந்தேனே வந்தேனே' என்று பாடத் தொடங்கினால் சுற்றுவட்டார ஏழெட்டு ஊரும் தூக்கம் கலைந்துவிடும்!

இப்பொழுது கிராமத் திருவிழாக்களிலெல்லாம் தினம் ஒரு வீடியோ படம்! சின்னத் திரையில் தெரியும் திரைப் படத்தை, பாமர மக்கள் ரசித்துப் பார்ப்பதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்?

நாடகக்காரர்களின் குடும்பமெல்லாம் வெவ்வேறு தொழிலில் ஈடுபட்டு, பிழைக்கத் தலைபட்டு விட்டன.

குருசாமியினால் மட்டும் நாடக மேடைகளை முழுதுமாகத் துறக்க முடியவில்லை. பலர் அறிவுரை கூறியும் பிடிவாதமாக, அரிதாரம் பூசுவதை நிறுத்த மறுத்து விட்டார். வேறு வேலை செய்ய ஏனோ அவரால் முடியவில்லை.

''என் கட்டை மேடையிலதான் சாயணும். மூஞ்சில பூச்சிருக்கும் போதே, என் மூச்சு நின்னு போயிடணும்... அதான் என் ஆசை!'' - நாடகத் தொழிலை கை விடச் சொல்லி, யாரேனும் வற்புறுத்தினால் இப்படித்தான் உணர்ச்சி வசப்பட்டு பதில் சொல்லுவார்.

அவர் சொல்வது போலவே, அவருக்கென்று ஒரு 'ராசி' போலிருக்கிறது. குருசாமிக்கு எப்படியும் வருஷத்தில் பத்து, பன்னிரண்டு நாடக வாய்ப்புகள் வந்துவிடும். மரபு மாறாத அந்த சில ஊர்களின் மேல் குருசாமிக்கு அப்படியொரு அசாத்திய நம்பிக்கை! அதில் வரும் வருமானத்தை வைத்துக் கொண்டு எப்படியோ ஒரு வருஷத்தைச் சமாளித்து விடுவார்..

ஆனால் குருசாமிக்கு இந்த வருஷம் ரொம்ப சோதனையாகப் போய்விட்டது.

சித்திரையூர், சாட்டியக்குடி, வேப்பத்தாங்குடி, மாலூர், வயலூர், புலிவலம் - இதெல்லாம் குருசாமியின் நாடகங்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பளித்து வரும் கிராமங்கள். இந்த ஊர்களிலிருந்து கூட இன்னும் அழைப்பு வரவில்லை!


குருசாமிக்குக் கொஞ்சம் உதைப்பாகத்தான் இருந்தது. இருந்தும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. இந்த விஷயத்தை யாரிடமாவது சொன்னால், அவர்கள் 'எதுக்கு குருசாமி இன்னும் இந்த எழவெடுத்த பொழைப்போட மாரடிச்சிக்கிட்டு கிடக்கிற. ஏதாச்சும் வேற தொழிலைப் பாரு!' என்பார்கள். குருசாமிக்கு அது எரிச்சலைக் கிளப்பும். அதனால் பொறுமையாகவே இருந்தார்.

பொறுமையாக இருந்தா மட்டும் போதுமா? எப்படி வயிறு கழுவுவது? சித்திரையும் முடியப் போகிறது. வைகாசி ஒரு மாதத்துக்குள் பெரிசாய் எத்தனை நாடகங்கள் ஒப்பந்தமாகப் போகிறது?

இந்த லட்சணத்தில், இந்த வருட வருமானத்தில் குருசாமி இன்னொரு திட்டம் வேறு போட்டு வைத்திருந்தார். வரும்படியில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடித்து 'வள்ளித் திருமணத்'தில் முருகன் வேஷங்கட்டும் கன்னையன் கையில், மகள் ருக்குமணியைச் சேர்த்து விடுவதென்று!

ராஜகுமாரன்

குருசாமியின் போதாத காலம், ருக்கு மணியின் கல்யாணக் கனவெல்லாம் கலைந்து. இப்போது வீட்டில் தினசரி உலை



கொதிப்பதே பெரிய சோதனையாகி விட்டது!

என்று மஞ்சள் போர்டில் அம்புக்குறி கட்டிக் காட்டிய பாதையில் வியர்வை வழிய வழிய, குருசாமி நடந்தார்.

இந்த ஊரில் போன வருஷம் 'வள்ளித் திருமணம்' போடக் கூப்பிட்டிருந்தார்கள். ஊர் பட்டாமணியருக்குக் கொஞ்சம் நல்ல மனசு! தொகையும் கூடுதலாகவே கிடைத்தது. இந்த வருஷமும் அந்த அளவு பணம் கிடைத்தால் முதலில் ஊரைச் சுற்றி வாங்கியுள்ள 'பீக்கல் பிடுங்கல்' கடன்களை அடைத்து விடலாம். இதற்குப் பிறகு ஏதேனும்

வாய்ப்புகள் வந்தால் ருக்குமணி கல்யாணம் பற்றி யோசிக்கலாம்.....

வடக்குத் தெரு கோடி. உயரமான கட்டுமானத்தில், பழைமை மிடுக்குடன் வீற்றிருந்தது பட்டாமணியர் வீடு.

அலைமோதிய எல்லா நினைப்பையும் கலைத்து விட்டு, துண்டால் முகம் துடைத்தவாறே படியேறினார் குருசாமி.

''வாய்யா குருசாமி. நல்லாருக்கியா?''

''நம்ம தொழில்தான் ரொம்ப படுத்துட்டுதுங்களே. ரொம்ப கஷ்டமான ஜீவனந்தாங்க!''

''ம். என்னய்யா பண்றது. காலம் கலி காலமா போச்சு. இந்த வருசம் திருவுசா நடத்துறதுக்கே வசூல் பத்தலை. அது மட்டுமில்ல, இப்ப உள்ள பசங்க நாடகமே வேணாங்குறாங்க! வீடியோ பொட்டியில சினிமா போடறததான் ஜனங்களும் விரும்புதுங்க!''

குருசாமிக்கு நெஞ்சுக்குள் படபடப்பு! பட்டாமணியரின் பேச்சு மழுப்பலாக இருப்பதுபோல் உணர்ந்தார். 'இந்த வாய்ப்பும் போய்விடுமோ' என்ற பயம் அவர் முகத்தில் தெரிந்தது.!

''அது சரிங்க. காலம் மாறிப் போச்சே! வாலிபப் புள்ளைங்களுக்கு நாடகம் கூத்தெல்லாம் புடிக்காது. ஆனா நீங்கள்ளாம் படியளக்கலன்னா எங்க பொழப்புல மண்ணுதாங்க. உங்கள மாதிரி பெரியவங்களுக்காகன்னு சொல்லி, நீங்கதாங்க எப்படியாச்சும் எவக்கு ஒரு நாடகம் குடுக்கணும்!''

''வாஸ்தவந்தான் குருசாமி. கெழங்கட்டைங்க கேக்குதுங்கன்னு சாக்கு போக்கு சொல்லித்தான் போன வருசமே ஒனக்கு நாடகம் குடுத்தேன். இந்த வருசமும் அப்படி செய்யலாம்னுதான் நெனச்சிருந்தேன்....'' என்று கொஞ்சம் பேச்சை நிறுத்திய பட்டாமணியரை குருசாமி பயத்துடன் பார்த்தார்.

பட்டாமணியர் தொடர்ந்தார் : ''ஒங் கெட்ட நேரம் போலருக்கு. போன வருசம் நீ போட்ட வள்ளித் திருமணம் நாடகத்த இளைஞர் மன்றத்துப் பசங்க வீடியோ படம் புடிச்சி வச்சிருக்கானுங்களாம்! எத்தன ராத்திரி வேணும்னாலும் பெருசுங்க அதைப் போட்டுப் பாத்துக்கலாம்னு சொல்லிட்டானுங்க. அவனுங்க செலவுல, மூணு ராத்திரிக்கு வீடியோ படம் போடப் போறானுங்களாம்! இதுக்கு மேல நான் என்னா செய்யறது சொல்லு!''

குருசாமி வாயடைத்துப் போய் நின்றார்! அவர் முகத்தில் புதிதாய்ப் படர்ந்திருந்த சோகம் பட்டாமணியருக்குப் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

''வெசனப் படாத குருசாமி. வெயில்ல வுழுந்து வந்திருக்கே. இந்தா, இத வழிச் செலவுக்கு வச்சிக்க. அடுத்த திருவிழாவுக்குப் பொழைச்சிக் கெடந்தா பாப்போம்!''

பட்டாமணியர் கொடுத்த இருபத்தைந்து ரூபாயைக் கூச்சத்துடன் வாங்கிக் கொண்ட குருசாமி, ''பரவால்லிங்க. நான் வர்றேன்'' என்று படியிறங்கினார்.


பஞ்சடைத்துப் போயிருந்த அவர் கண்களில், தொலைக் காட்சிப் பெட்டியும் நாடக மேடையும் மங்கலாக மாறி மாறித் தெரிந்தன.

இரண்டிலும் மகள் ருக்குமணி பெரிதாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்!

சிறையிலிருந்து கைதிகள் தப்பிய சாகசங்களிலேயே இது துணிச்சலானது : பிரான்சின் பிரிட்டானி சிறைச்சாலை மைதானத்தில் கடுங்காவல் கைதிகள் வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு ஹெலிகாப்டர் வந்து இறங்கியது. என்ன நேர்கிறது என்று சிறைக் காவலர்கள் திகைத்திருக்கும் போதே அது அங்கு கைதியாக இருந்த கிளாட் என்ற கொள்ளைக்காரனை ஏற்றிக் கொண்டு பறந்து விட்டது!

அவனுடைய துரதிர்ஷ்டம்- மார்சேல் என்னுமிடத்திலிருந்த தன் காதலியைக் காணவே முதலில் விரைந்தான். அதை எதிர்பார்த்து அங்கு மறைந்திருந்த போலீஸாரின் வலையில் மீண்டும் சிக்கிக் கொண்டான்!

- அ. ஷண்முகசுந்தரம்.





சீனர்கள் எவ்வளவுதான் புத்திசாலிகளாக இருந்தாலும் மூடநம்பிக்கை கொண்டிருந்தனர். பேய்கள் தங்கள் வீட்டுக்குள் வராமல் இருக்கத் தங்கள் வீட்டினை வட்டமாக வடிவமைத்தனர். நுழைவாயில் எங்குள்ளது என்று தெரியாமல், பேய்கள் வீட்டினைச் சுற்றி, சுற்றி வருமாம்!

- கே.பி. சிவகுமார்.

தமிழிசைச் சங்கம் பொன்விழா

சிறப்பு மடல்



* ராஜா சர் முத்தையா செட்டியார்



* ராஜா சர் அண்ணாமலை செட்டியார்



* எம்.ஏ. சிதம்பரம்



* நீதிபதி கோகுலகிருஷ்ணன்

தமிழிசை இயக்கம்

நீதிபதி பு.ரா. கோகுலகிருஷ்ணன், தலைவர்,தமிழ் இசைச் சங்கம்



* பாரதியார்



* பாரதிதாசன்

''**1943** - ல் துவக்கப் பெற்ற தமிழிசைச் சங்கம், இவ்வாண்டு தனது பொன் விழாவினைக் கொண்டாடுகின்றது. புறக்கணிக்கப்பட்ட தமிழிசையைத் தலை நிமிரச் செய்ய ஓர் இயக்கம் தமிழகத்திற்குத் தேவைப்பட்டது. உயிரும் உடலும் உனக்காக என்று நம் ஓதுவாமூர்த்திகள் நம் தமிழ்ப் பக்திப்பாடல்களைப் பாதுகாத்து வந்தனர். ஆனால் அவர்களுக்கு உற்ற துணைபுரிய நம் தமிழ்ச் சமுதாயம் முன்வரவில்லை. தமிழ் மெல்லச் சாகும் என்ற நிலை உணர்ந்த பாரதியார், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டுமெனக் குரல் எழுப்பினார். அவர் எழுந்து கூறிற்று. ''வித்வான்கள் பழைய கீர்த்தனைகளைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீண்டும் மீண்டும் பாடுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்.''

பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசன் ஆவேசமாகச் சொன்னார் :

''செந்தமிழில் இசைப்பாடல் இல்லை யெனச் செப்புகின்றீர் மானமின்றி

....

நம் தமிழில் இசையில்லை நம் தாய்க்கே உடையில்லை என்பதுண்டோ?''

1937 - ல் மறைந்த தேசியவாதி, மேடைப் பேச்சிற்கே உதாரணமாக இருந்த சத்தியமூர்த்தி ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார்: ''நமது வித்வான்கள் தமிழ்ப் பாட்டுக்களை அதிகமாகப் பாடவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. பொருள் தெரிந்த தாய் மொழியில் பாட்டுக்கள் கேட்கும்போதுதான் எனக்குப் பரிபூர்ண ஆனந்தம் ஏற்படுகிறது.''

உள்ளத்து உணர்ச்சிகளைத் தொட்டு மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டுமென்றால் இசையோடு பொருளும் கலக்க வேண்டும். மேல்நாட்டுச் சங்கீதம் கணக்கிலிருந்து பிறந்த ஒன்று. நம்முடைய தமிழ் இசையோ உணர்ச்சியிலிருந்து பிறந்த ஒன்று. ''ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை'' என்று நம் தமிழ்ப் பாடகர் இசையோடு இந்தச் சொல்லையும் குழைத்துத் தருவாரேயானால், எந்த மனம் ஈர்க்க மறுக்கும்? இதையே வேறு மொழியில் கூற முற்பட்டால் மனம் லயிக்குமா? இதைச் சொல்ல வந்த ஒரே இயக்கம்தான் தமிழிசை இயக்கம். இயக்கம் என்று தோன்று முன்னரே தனிப்பட்ட முறையில் வேதனை நிறைந்த குரலில் குமுறும் உள்ளத்தை வெளிக்காட்டியவர்கள்தான் பாரதியாரும், பாரதிதாசனும், ராஜாஜியும், சத்தியமூர்த்தியும், கல்கியும், டி.கே. சிதம்பரநாதனாரும், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியாரும்.



* 1977 - 78 இசை விழா - எம்.ஜி.ஆரின் துவக்க உரை.

* ராஜாஜி நினைவு தம்பூரா பரிசு வழங்குகிறார் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்



தமிழிலே இசைப் பாடல் இல்லையென்று சொல்கின்றவர்கள் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் வாசகத்தைக் கேளுங்கள் :


"சங்கீதத்திலும் நல்ல சாகித்தியத்திலும் வல்ல வித்வான்கள் பலர் தமிழில் கீர்த்தனங்கள் இயற்றி இருக்கின்றார்கள். நன்கு பாடுவோரும் பாராட்டுவோரும் இல்லாமையால் வரவர அக் கீர்த்தனங்கள் மறைந்துபோயின. ஆயிரக் கணக்கான தமிழ்க் கீர்த்தனங்கள் இந் நாட்டில் முன்பு வழங்கிவந்தன. கர்நாடக ராகங்களின் கதிக்கு மிகவும் பொருத்தமாக அவை அமைந்திருந்தன. அன்று நான் கேட்ட அவை, இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோய் விட்டன. 'தமிழில் கீர்த்தனங்கள் இல்லை' என்று கூறவும் சிலர் அஞ்சவில்லை. எல்லாம் சற்றேறக்குறைய அறுபது வருஷத்தில் நிகழ்ந்த மாறுபாடு."

தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையினை இப்பாரத தேசம் அறிய, அரசியல் வாதியாக, கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி கூறுகிறார் :

"தமிழ்ப் பாட்டுக்கள் பாடவேண்டும் என்கிற கட்சியைச் சேர்ந்த பாமரர்களில் நான் ஒருவன். கண்ணை மூடிக்கொண்டு கூட்டத்தில் பெரும்பான்மையோருக்குப் புரியாத பாஷையில் பாடித் தள்ளுவது சங்கீத வளர்ச்சிக்கு உதவாது என்றுதான் சொல்கிறேன்.

மொழியும் பொருளும் இருந்தால்தான் மானிடக் குரல் இசையாகும்; இல்லாவிடில் வெறும் ஓசைதான். கேட்போரின் இன்பத்திற்கும், உணர்ச்சிப் பெருக்குக்கும் தாய் பாஷை இன்றியமையாதது. இந்தத் தாய் மொழிக் கிளர்ச்சியானது இசையில் மாத்திரம் அல்ல, எல்லாத் துறைகளிலுமே ஓங்கி வளர வேண்டும். ஆனால் இந்தக் கிளர்ச்சியில் ஜாதி, சுயநலம், கட்சிபேதம், கோபம், துவேஷம் இவைகளைப் புகுத்தி இயக்

* தமிழிசைக் கல்லூரி ஆசிரியர்கள் குழு - இடமிருந்து வலமாக : வயலின் சடகோபன், வீணை சண்முக சுந்தரம், குரலிசை ராம்தாஸ், கௌரவ இயக்குனர் மீ.ப. சோமு, தேவாரம் சோமசுந்தர தேசிகர், வாய்ப்பாட்டு கிருஷ்ணமூர்த்தி, மிருதங்கம் பூவராகன்.





* தமிழிசைச் சங்கத் துணைக் காரியதரிசி ஸ்ரீராமன்

கத்தைக் கெடுக்கக் கூடாது.''

என் தாய் என்னைத் தொட்டில் இட்டுத் தாலாட்ட எடுத்த குரல் தமிழ்க் குரல், என் மூதாதையர் இறைவனைத் துதிக்க எழுப்பிய இசை தமிழ் இசை. என் ஆசான் எடுத்து அடி வைக்கக் கொடுத்த பாடம் தமிழ்ப் பாடம். அந்தத் தமிழுக்கு நான் செய்யும் நன்றிக் கடன் அதனை ஒதுக்குவதா? என் தாயை நான் வெறுப்பதா? இறைவனுக்கு உகந்த மொழி என்று ஆழ்வார்களும், நாயன்மார்களும் விளக்கிய பிறகு, அரசவையில் வீற்றிருந்த மொழி என்று சரித்திரம் பறைசாற்றிய பிறகு, இசைக்கு உகந்த மொழி என்று இலக்கியங்கள் கூறிய பிறகு, இதை மறுக்கும் எவர்க்கு நாம் செவி சாய்க்க வேண்டும்!

இந்தத் தன்மான உணர்ச்சியில் சாதி மத வேறுபாடு இன்றி, மொழி வெறியின்றி, இயற்கையாகத் தோன்றிய இயக்கம்தான் தமிழிசை இயக்கம். இந்த உண்மை உணர்ந்த எந்த மொழிக்காரர்களும் நம் இயக்கத்தின் உயர்வை, நிச்சயமாக உணர்வார்கள் என்றுதான் கருதுகிறேன்.

நமது தமிழிசை இயக்கம் எந்த ஒரு மொழியையும் வெறுக்கவில்லை. பிறமொழிகளில் இயற்றியுள்ள தத்துவப் பாக்களை ஒருபோதும் குறை கூறியது கிடையாது. ஏன் நம் தமிழ் மொழியில் உருவான உன்னதமான தமிழ் இசையை, உயரிய கருத்துக்கள் கொண்ட பாசுரத்தை, தேவாரத்தை, திருவாசகத்தை, திருவருட்பாவை, இன்ன பிற தமிழ் இசைப் பாடல்களைப் பாடவில்லை என்றுதான் அறைகூவி அழைக்கின்றது.

இந்த நேரத்தில் ''கல்கி'' அவர்களின் வாசகம் என் நினைவிற்கு வருகிறது. அவர் எழுதுகிறார் :

''தமிழ்நாட்டில் உள்ளவை போன்ற சிற்பக்கலையின் சிகரமான ஆலயங்கள் உலகில் வேறு எங்கும் இல்லை; தமிழ் நாட்டில் வழங்கும் சங்கீதத்தைப் போன்ற சங்கீதம் உலகில் வேறு எங்கேயும் கிடையாது.''

அவர் மேலும் சொல்கிறார், ''நமது சங்கீதத்திற்கு இந்த அன்னிய பாஷை விலங்கிலிருந்து விடுதலையே கிடையாதோ என்று ஏங்கியதுண்டு. இதைப் பற்றி பிரஸ்தாபித்தாலே, சிலர் பரிகாசம் செய்யத் தொடங்கினார்கள். 'உங்களுக்குத் தெலுங்கின் மேல் என்ன துவேஷம்' என்று சிலர் கேட்டார்கள். இப்படிக் கேட்ட ஒரு நண்பரைப் பார்த்து, டி.கே.சி. திருப்பி ஒரு கேள்வி கேட்டார். 'உங்களுக்கு கிரீக் பாஷை தெரியுமா?, என்றார். ''தெரியாது'' என்றார் நண்பர். ''கிரீக் பாஷையின் மீது உங்களுக்கு என்ன ஐயா துவேஷம்?'' என்று கேட்டார் டி.கே.சி.

கல்கி அவர்களின் வாக்கியங்கள் இவை.

தமிழிசை இயக்கத்திற்கு வித்திட்டவர் டி.கே.சி. அதைச் செடியாக்கி வளர்த்து விட்டவர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார். அவர் கூட்டிய சிதம்பரம் மாநாடும், நிறுவிய தமிழிசைச் சங்கமும்தான் தமிழிசையைத் தழைக்கச் செய்தன.

'கல்கி' இந்தத் தமிழிசை இயக்க வளர்ச்சியைப் பாராட்டும்போது கூறுகிறார் : ''ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதை நிறைவேற்றியே தீருவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே தமிழுக்கும் சங்கீதத்திற்கும் யோகம் இருப்பதாலேயே அவர் இந்தக் காரியத்தை மேற்கொண்டார் என்று கருத இடமிருக்கிறது. அவருடைய இந்த உயர்ந்த காரியத்தில் ஒத்துழைப்பது சங்கீத வித்வான்கள், தமிழன்பர்கள் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும் தலைசிறந்த கடமை என்றே சொல்ல வேண்டும்.''

கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டிற்கு உரிய ஒன்று. இதை ஆணித்தரமாகச் சொன்னவர் 'கல்கி'. அவர் எழுதுகிறார்:

''கர்நாடக சங்கீதம் தமிழ்நாட்டுக்குத்தான் உரியது என்பதில் சந்தேகம் இல்லை. சிலப்பதிகார காலத்திற்கு முன்னாலிருந்து இரண்டாயிரம் வருஷமாகத் தமிழ்நாட்டில் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்த சங்கீதம்தான் கர்நாடக சங்கீதம். 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்று தமிழையும் இசையையும் சேர்த்து வளர்த்த பெரியவர்கள் இந்நாட்டில்தான் வாழ்ந்தனர்.''

தமிழ் சங்கீதத்திற்கு உகந்த பாஷையில்லை என்று வாதிட்டோரை ஆவேசத்தோடு 'கல்கி' கண்டித்தார். அவருடைய எழுத்து இன்றும் பேசுகிறது :

''எனக்குத் தமிழ்தான் மற்ற எந்த பாஷையைக் காட்டிலும் இனிய பாஷையாகவும், சங்கீதத்திற்கு ரொம்பவும் இசைந்ததாகவும் தோன்றுகிறது. தமிழ் சங்கீதத்திற்கு ஏற்ற பாஷைதானா என்று சந்தேகப்படுகின்றவர்கள், முதலில் கொஞ்சம் தமிழ் படிக்கட்டும்; முக்கியமாகக் கம்பனையும்,

பாரதியையும், தேவார திருவாசகங்களையும், திருவாய்மொழியையும், அருட்பாவையும் படிக்கட்டும். பிறகு சொல்லட்டும்."

பண் சுமந்த பாடல்கள்தாம் கர்நாடக இசைக்கே அஸ்திவாரம். 'கல்கி' கூறுவதைப்போல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய நாயன்மார்கள் கையாண்ட அற்புத இசைக் கலைதான் காவேரி தீரத்திலும், பொருனை நதிக்கரையிலும் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து, தற்போதைய உன்னத நிலையை அடைந்துள்ளது. இந் நேரத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் சொல் ஞாபகத்திற்கு வருகிறது :

"பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்
பழத்தினிற் சுவை ஒப்பாய்."

சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்த Encyclopaedia of Tamil Literature Volume 1 - 1990 Edition கீழ்க்கண்டவாறு கூறுகிறது :

"It could be reasonably concluded that Silapathikaram marks an advanced stage in the musical tradition of the Tamils with many a work on music preceding it. In it there are references to nearly 1200 scales with different permutations and combinations. It also talks about 103 Pans as coming under four classes of Yal and four classes of Jatis. There are again clues in it to the origins of notes and pans and the structure of Ragas."

இச் சிலப்பதிகாரம் எழுந்த காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு. கி.மு. 300 லிருந்து கி.பி. 250 ற்கு இடைப்பட்ட காலத்தில் எழுந்த கடைச்சங்க நூலாகிய பரிபாடல் இயற்கையைப் பற்றி, இறைவனைப் பற்றிப் பல பண்களில் இயற்றப்பட்டுள்ள உண்மையை தமிழ்த்தாத்தா நமக்கு அளித்துள்ளார். இப் பரிபாடல்களுக்கான இலக்கண வரம்பை கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியதும் நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளதுமான 'தொல்காப்பியம்' எடுத்தியம்புகின்றது. அப்படியென்றால் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் முற்பட்டதாகத் தமிழிசை இருந்திருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம் கி.பி. 632 முதல் கி.பி. 648 வரை. அவர் பாடிய பதிகங்கள் 1600. நமக்குக் கிடைத்தவை 384 பதிகங்கள். அதிலுள்ள பாடல்கள் 4181. இவை 23 பண்களில் பாடப் பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் வாழ்ந்த காலம் கி.பி. 570 முதல் கி.பி. 655 வரை. இவர் பாடிய பதிகங்கள் 4900. நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் 312; அடங்கிய பாடல்கள் 3066. இவை 10 பண்களில் பாடப்பெற்றுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலம் கி.பி. 694 முதல் கி.பி. 712 வரை. இவர் பாடிய பதிகங்கள் 3800. கிடைத்த பதிகங்கள் 100. அவற்றில் அடங்கிய பாடல்கள் 1026. இவை 16 பண்களில் பாடப்பெற்றன.

இவர்களைத் தவிர, மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர், வேதநாயகம்பிள்ளை, கவிகுஞ்சர பாரதியார், கோடீஸ்வர ஐயர், ராமசாமி சிவன், பாரதியார், பாரதிதாசன், பாபநாசம் சிவன், பெரியசாமித் தூரன், கண்ணதாசன் போன்ற எண்ணற்றோர் இயற்றிய பண் சுமந்த பாடல்களை ஏன் ஒதுக்கவேண்டும்? ஏன் கச்சேரி மேடைகளில் நிறைய அளவில் பாடக் கூடாது? என்றுதான் தமிழிசை இயக்கம் கேட்கிறது.

கண் இருந்தும் பார்க்க முடியாதவர்களாய், காதிருந்தும் கேட்க முடியாதவர்களாய், வாய் இருந்தும் பேச முடியாதவர்களாய்த் தாழ்ந்த நிலையில் தமிழகமே ஏன் நிற்கிறாய் என்று தமிழர்களைத் தட்டி எழுப்பப் பிறந்ததுதான் தமிழிசை இயக்கம். இச்சக்திக்கு வித்திட்ட பெரியவர்கள், அச்சக்தியை ஒன்று திரட்டி ஒரு இயக்கமாக உருவாக்கிய நல்லவர்களின் கனவினை எந்த அளவிற்கு வளர்த்துள்ளோம் என்பதைச் சிந்திக்கும் நாள்தான் பொன் விழாக் காணும் புனித நாள்.

நாம் எண்ணிய அளவிற்கு வளர்ந்துள்ளோமா, இத் தமிழிசை இயக்கத்தை உருவாக்கிய உத்தமர்கள் ஆன்மா சாந்தி அடையும் அளவிற்குத் தமிழிசையை வளர்த்துள்ளோமா? இது இன்றைக்கும் ஒரு கேள்விக்குறியாகத்தான் உள்ளது. எனவே தமிழிசை இயக்கத்துக்கு இன்னும் தேவை

யும் இருக்கிறது.

தமிழ் அழிந்துபடுமா என்ற எண்ணம் உருவான நேரத்தில், நல் உணர்வில் பிறந்ததுதான் தமிழிசை இயக்கமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும். இந்த நல் உணர்விற்கு வித்திட்டவர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும் அவர் தம் குடும்பத்தாரும் என்றால் அது மிகை யாகாது. அந்தப் பாரம்பரியத்தில் வந்த ராஜா சர் முத்தையா செட்டியாரும், அவர் அருமைத் தம்பி, உயர்திரு எம்.ஏ. சிதம்பரம் செட்டியாரும், ராஜா சர் முத்தையா செட்டியார் மகனும் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தருமான டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களும், ஸ்பிக் நிறுவனங்கள் உரிமையாளரும் உயர்திரு எம்.ஏ. சிதம்பரம் அவர்கள் மகனுமான திரு ஏ.சி. முத்தையா அவர்களும் இத் தமிழ் இசை இயக்கத்திற்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணி ஏராளம். அத்தகைய தமிழிசை இயக்கத்தில் உருவான தமிழிசைச் சங்கம் இவ்வாண்டு தன் பொன் விழாவினைக் கொண்டாடுகிறது.

இந்த நந்நாளில் இன்பத் தமிழில் பாடி, இசைக்கலையை வளர்க்க, உறுதி கொள்வோம்.

இசைப் பேரறிஞர் விருதுபெறும் பேறு பெற்றவர்கள்:

1957 - 1958 - எம்.எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, வயலின் ராஜமாணிக்கம் பிள்ளை
1958 - 1959 - பி.எஸ். வீருசாமி பிள்ளை
1960 - 1961 - அரியக்குடி டி. இராமானுஜ ஐயங்கார்
1961 - 1962 - வழுவூர் ராமையா பிள்ளை
1962 - 1963 - மதுரை மணி ஐயர்
1963 - 1964 - முசிறி சுப்பிரமணிய ஐயர்
1964 - 1965 - சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
1965 - 1966 - பாபநாசம் சிவன்
1966 - 1967 - கே.பி. சுந்தராம்பாள்
1967 - 1968 - திருமுருக கிருபானந்த வாரியார்
1968 - 1969 - பாலக்காடு மணி ஐயர்
1969 - 1970 - செம்மங்குடி ரா. சீனிவாச ஐயர்
1970 - 1971 - எம். எஸ். சுப்புலட்சுமி
1971 - 1972 - மதுரை எஸ். சோமசுந்தரம்
1972 - 1973 - ம.ப. பெரியசாமித் தூரன்
1973 - 1974 - டி.கே. பட்டம்மாள்
1974 - 1975 - திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணியப் பிள்ளை
1975 - 1976 - த. பாலசரசுவதி
1976 - 1977 - வி.ஆர். கோவிந்தராசப் பிள்ளை
1977 - 1978 - திருவீழிமிழலை எஸ். நடராச சுந்தரம் பிள்ளை
1978 - 1979 - எம்.எல். வசந்தகுமாரி
1979 - 1980 - இராமநாதபுரம் சி.எஸ். முருகபூபதி
1980 - 1981 - மீ.ப. சோமசுந்தரம் (சோமு)
1981 - 1982 - டாக்டர் எஸ். இராமநாதன்
1982 - 1983 - சீர்காழி எஸ். கோவிந்த ராஜன்
1983 - 1984 - நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன்
1984 - 1985 - லால்குடி ஜி. ஜெயராமன்
1985 - 1986 - தஞ்சை க. பொ. கிட்டப்பா பிள்ளை
1986 - 1987 -தருமபுரம் ப. சுவாமிநாதன்
1987 - 1988 - ஆர் எஸ். மனோகர்
1988 - 1989 - ஏ.கே.சி. நடராஜன்
1989 - 1990 - குன்னக்குடி ஆர். வைத்தியநாதன்
1990 - 1991 - வலையப்பட்டி ஏ.ஆர். சுப்பிரமணியம்
1991 - 1992 - மகாராஜபுரம் வி. சந்தானம்
1992 - 1993 - கே. ஜே. யேசுதாஸ்.



* மதுரை மணி



* லால்குடி ஜெயராமன்



* ராமையா பிள்ளை



* மீ.ப. சோமு



* மதுரை சோமு

“தமிழிசை என்று பெயர் சூட்டியதே ராஜாஜிதான்!”

“ஐம்பது வருடங்களுக்கு முன்னால், தேவகோட்டையில் ஒரு தமிழ் மாநாடு நடந்தது. அதில் தமிழ் இசையைப் பரப்ப வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என் தகப்பனார் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆகியோர் செட்டிநாடு தவிர, தஞ்சாவூர், கோயமுத்தூர், சென்னை என்று பல ஊர்களுக்கும் சென்று நிதி வசூலித்தார்கள். அந்தக் காலத்தில், இந்த முயற்சிக்காக ரொம்பவும் பிரியமாகப் பலர் வெள்ளித் தட்டில், வெள்ளிக் காசாக வைத்துக் கொடுத்தார்கள்!'' என்று நினைவு கூர்கிறார் தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர் எம்.ஏ. சிதம்பரம்.

''தமிழிசை என்று பெயர் சூட்டியது யார்?''

''ராஜாஜிதான். அண்ணாமலை செட்டியார், சண்முகம் செட்டியார் இவர்களுடன் ராஜாஜி, கல்கி, டி.கே. சிதம்பரநாத முதலியார் ஆகியவர்களும் தமிழிசை ஓர் இயக்கமாக வடிவம் பெற உதவியவர்கள். இவர்கள் எல்லோரும் கூடிப் பேசிக் கொண்டிருந்த போது, ராஜாஜியைக் கேட்டார்கள், என்ன பெயர் வைக்கலாம் என்று. அவர்தான் தமிழ் இசை என்று வைக்கச் சொன்னார். அதற்குப் பிறகு ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ராஜாஜி கலந்து கொண்டார். கல்கியும் கூடவே இருப்பார். என் தகப்பனார் ராஜா சர் அவர்களும், சர் ஆர்.கே.எஸ். அவர்களும் கூடவே இருப்பார்கள்.... நான் அப்போதெல்லாம் இந்த நிகழ்ச்சிகளில் ஆரம்பத்திலேயே கலந்து கொண்டு வந்தேன். அப்படியே நினைவில் இருக்கிறது.''


''சென்னையில் எங்கே நிகழ்ச்சிகள் நடத்தி வந்தீர்கள்?''

''சென்ட்ரல் ஸ்டேஷன் இருக்கிறதே, அதன் அருகில் இருக்கும் மெமோரியல் ஹாலில்தான் ஒன்றிரண்டு கச்சேரிகள் நடந்தன. பிறகு செயின்ட் மேரிஸ் ஹாலில் தொடர்ந்து நடத்தி வந்தோம். அண்ணாமலை மன்றம் 1952 - ல் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அங்கேதான் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறத் தொடங்கின. 67 - ல் தமிழிசைச் சங்கத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்ட போது அறிஞர் அண்ணா அவர்கள் தான் தலைமை வகித்தார். ராஜாஜி அவர்களும் கலந்து கொண்டார்.''

''முதல் முதலாக கௌரவக் காரியதரிசி பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தார்கள்?''

''திரு டி.எஸ். கச்சாபகேச முதலியார் தான் முதல் கௌரவக் காரியதரிசி. நான் ஆரம்பம் முதலே இந்த இயக்கத்தில் இருந்தாலும், என்னை அந்தப் பொறுப்பில் நியமிக்கவில்லையே என்ற வருத்தம் எனக்கு ஏற்படவில்லை. ஏனென்றால் முதலியார் அவர்கள் திறமைசாலி. 1946 - ல்

* அண்ணாமலை வள்ளலின் உருவச் சிலையைத் திறந்து வைக்க வந்த மைசூர் மன்னரை வரவேற்கிறார் எம்.ஏ.சி.



நான் இணைச் செயலர் ஆக்கப்பட்டேன். 78 - க்குப் பிறகு நான்தான் கௌரவச் செயலர்.''

''தமிழிசைக் கல்லூரியை, இயக்கம் தொடங்கிய போதே ஆரம்பிக்கவில்லையா?''

''1944 - ல் சென்னையில் தமிழிசைக் கல்லூரி தொடங்கினோம். பிறகு தேவ கோட்டையிலும் ஆரம்பித்தோம். வேலூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்தான் அன்றைக்கு முதல்வர்... இப்போது 250 மாணவ - மாணவிகள் படிக்கிறார்கள். தமிழ் இசை தவிர, வீணை, வயலின், மிருதங்கம் எல்லாம் கற்றுக் கொடுக்கிறோம்.''

''பண் ஆராய்ச்சி மாநாடு எப்போது தொடங்கினீர்கள்?''

''1949 - ல். சர். ஆர்.கே. எஸ். தான் முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால் 1957 - ல்தான் 'இசைப் பேரறிஞர்' பட்டத்தை மாநாட்டுக்குத் தலைமை ஏற்கிறவருக்குக் கொடுக்க

* ராஜேந்திர பிரசாத் வருகை - ஸ்ரீபிரகாசாவுக்கு இசைக்கருவியைக் காட்டி விளக்குபவர் எம்.ஏ. சிதம்பரம்.



ஆரம்பித்தோம்.''

''தேவகோட்டையில் நடந்த முதல் மாநாட்டுக்கு ராஜாஜி வந்திருந்தாரா?''

''இல்லை. கல்கி, டி.கே.சி., சா. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அதில் டி.கே.சி. சொன்னார்: பழங் காலத்தில் இந்தப் பகுதி முழுக்கத் தமிழ் ராஜ்யமாக இருந்தது. அப்போது ஆண்ட தமிழ் மன்னர்கள், தமிழை ஆதரித்தார்கள். இடையே வந்த பிற மொழி மன்னர்கள் ஆட்சியில், தமிழ் முக்கிய ஸ்தானத்தை இழந்தது. பாண்டிய அரசர்கள் வந்த பிறகு தமிழ், பழையபடி, இழந்த இடத்தைப் பிடித்தது. அப்போது மற்றப் பெருமக்களும் சேர்ந்து தமிழை ஆதரித்தார்கள். மக்களுக்கும் தமிழின் உன்னதமும், பெருமைகளும் புலப்படத் தொடங்கின.'' கல்கி தமக்கே

* இசைக்கருவி நிலையத் திறப்புவிழாவுக்குப் பிறகு - பக்தவத்சலத்துக்கு விளக்கம் அளிப்பவர் பேராசிரியர் சாம்பமூர்த்தி.



உரித்தான நையாண்டி பாணியில் பேசினார் : 'தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்களை இப் போது கற்றுக் கொடுத்துப் பாடச் சொல்ல வேண்டிய நிலைக்கு வந்து விட்டோம். தமிழுக்கு இப்போதுதான் ஓர் ஆதரவு வந்த மாதிரி இருக்கிறது' என்றார்.''

''44 - ல் சென்னையில் தமிழிசைக் கல்லூரி ஆரம்பித்ததாகச் சொன்னீர்களே, அப்படியானால் சிதம்பரத்தில் தமிழ் இசைக் கல்லூரி ஆரம்பித்தது எப்போது?''

''அது 1929 ல். தமிழிசை இயக்கம் வேகம் பெறு முன்னால். பிறகு அது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டது. நாட்டிலேயே, இசைக்காகத் தனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்த முதல் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான். இந்தத் துறைக்குப் பல புகழ்பெற்ற வித்துவான்கள் தலைவராக இருந்திருக்கிறார்கள் - டைகர் வரதாச்சாரியார், அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், தண்டபாணி தேசிகர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை என்று.... திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை நாதசுர வித்துவான் தான். ஆனால் அவர் தமிழ் இசை இயக்கத்துக்குப் பெரிய தூண் மாதிரி. கச்சேரிகளில் தமிழ்ப்பாட்டை வாசித்துவிட்டு, தான்



✱ டி.கே.சி.



✱ கல்கி



✱ ஆர்.கே. ஷண்முகம் செட்டியார்

வாசித்தது இன்னபாட்டு என்று அறிவிப்பார்.''

''அந்த ஆரம்ப கட்டத்தில் வானொலியில் தமிழ் இசைக்கு ஆதரவு இருந்ததா?''

''அப்போதெல்லாம் ரேடியோவில் தமிழ்ப்பாடல்கள் பாடுவதே இல்லை. தமிழ்ப் பாட்டுக்குப் பெரிய எதிர்ப்பு இருந்தது. தமிழ், சங்கீதத்துக்குப் பொருத்தமல்ல என்று கூடப் பேசினார்கள். அப்போதுதான் கல்கியின் உதவி மகத்தானதாக இருந்தது. அவர்களுக்குத் தக்க பதில் தந்தது கல்கி தான். ராஜாஜி, ஆர்.கே.எஸ். போன்றவர்கள் சென்னையிலும், தில்லியிலும் எடுத்துச் சொல்லி, பிறகு தமிழ்ப்பாடல்கள் ஒலி பரப்பத் தொடங்கினார்கள். திருச்சி வானொலி முன்பு ஒரு மறியல் கூட நடத்தப் பட்டதாக எனக்கு நினைவிருக்கிறது. தமிழிசை இயக்கம், தெலுங்கு - சம்ஸ்கிருத சாகித்தியங்களைப் பாடுவதற்கு எதிராகத் தொடங்கப்பட்டது என்று பலரும் தவறாக எண்ணினார்கள். அது உண்மை அல்ல.''

✱ ராஜா அண்ணாமலை மன்றப் புதுமனை புகுவிழாவுக்கு டாக்டர் இலக்குமணசாமி முதலியாரின் வருகை.



''உங்களைப் பொறுத்தவரை எப்படி? பிற மொழி கீர்த்தனைகளை ரசிப்பீர்களா?''

''தாராளமாக! காலையில் எழுந்த உடனே காசெட்டைப் போட்டு விடுவேன். வெளியூர், வெளிநாடு பயணங்களின் போது கையோடு காசெட்டுகள் கொண்டு போய் விடுவேன். குடும்பத்திலும் தமிழிசையை விரும்பிக் கேட்டாலும், தீட்சிதர், சியாமா சாஸ்திரி, தியாகராஜர் பாட்டுக்களையும் நிறைய விரும்பிக் கேட்பதுண்டு. தியாகராஜ சுவாமிகளின் பாடல்களை நிறையவே கேட்பேன்!''

சுந்தராம்பாள், கிட்டப்பா, முசிறி, அரியக்குடி, டைகர், பாபநாசம் சிவன் ஆகியோர் பாடிய சுமார் 250 க்கு மேற்பட்ட மிகப் பழைய கிராமபோன் இசைத் தட்டுக்களைச் சேகரித்து வைத்திருக்கிறார் எம்.ஏ.சி.

''வேலையில் கவனமாக இருக்க நமது சாஸ்திரீய இசை உதவுகிறது. மனநிலையைச் சீராக வைத்திருக்க உதவுகிறது. அதனால் ஊழியரின் உற்பத்தித் திறனும் கூடுகிறது!'' என்கிறார்.

ஸ்பிக் நிறுவன லிஃப்டில் மெலிதான இசை கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஓய்வு அறை, சிற்றுண்டிச்சாலை, வரவேற்பு அறை எங்கும் இசையின் ஒலி. ''என் தொழிற்சாலைகள் எல்லாவற்றிலும் - வெளிநாடுகளில் இருக்கின்றவை உட்பட - இசை மிருதுவாக ஒலித்துக் கொண்டே இருக்கும்!'' என்கிறார் எம்.ஏ.சி.

பேட்டி : சாருகேசி

தமிழிசை என்றால் எது?

மிகவும் தொன்மைவாய்ந்த நம்முடைய இராகங்கள் சிலவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், அவற்றின் ஒலிச் சட்டத்திற்குள் உயிர்த்துக் கொண்டிருக்கிற முதிர்ந்து கனிந்து பழுத்த சுவையுணர்வு, நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. ஒரு சங்கராபரணம், ஒரு தோடி, ஒரு காம்போதி, ஒரு பைரவி - இதற்கு எத்தனை வயதிருக்கும் என்று சிந்தனை செய்து பாருங்கள். நேற்றோ முந்தா நாளோ தோன்றிய இராகம் இல்லை ஒரு சாவேரி! பல நூறு ஆண்டுகளாக நமது சமுதாயத்தின் நாவிலும் செவியிலுமாகப் புரண்டு எழுந்து நடனம் ஆடி உல்லாசங்களையும் உருக்கங்களையும் இந்த இராகங்கள் தங்கள் ஒலி மேனியிலே மெருகேற்றிக் கொண்டிருக்கின்றன! இப்படியே ஒவ்வொரு இராகத்துக்கும் வயது என்ன என்று கேட்டால், பல நூற்றாண்டுகளையே சொல்ல வேண்டியிருக்கிறது! அத்தனை முதிர்வு கொண்டு பழுத்த பழமாக அவை கனிந்திருக்கின்றன. ஒவ்வொரு ராகமும் பல்லாண்டு பல்லாண்டுகள் மனித உள்ளத்தின் கற்பனையிலே வயமாகி நின்று ஒலித்தவம் செய்து, ஒரொரு வண்ணத்தையும் வடிவத்தையும் சித்தி செய்து கொண்டுள்ளது!

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்ந்தோமானால், தேவாரம் தோன்றிய காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பண்கள் என்று அழைக்கப் பெற்ற இராகங்கள் இசை ஞானியரின் நாதக் கருவிலே சூலாகி, உரம் பெற்று, வடிவம் தாங்கி, வெளிவந்து, செவிப் புலனிலே நடனம் புரிந்து, தமிழ் மக்களின் சமுதாயத்தைக் கலையின்பத்திலே ஆழ்ந்து திளைக்கச் செய்துள்ளன! தியாகராஜர், முத்துசுவாமி தீக்ஷிதர், சியாம சாஸ்திரி முதலான இசை மேதைகள்



* 1970 - 71 இசைப்பேரறிஞர் எம்.எஸ்.......

* தமிழிசைக்கு வளம் சேர்த்த பெரியசாமி தூரனுடன் எம்.ஏ.சி. ஸ்ரீராமன்.





✱ 1948 - ஆம் ஆண்டு தமிழிசை மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்கள்.

இவ்வாறு நமது தமிழகத்தில் வழிவழியாக வழங்கி வந்துள்ள இந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் ஒலிப்படைப் புக்களைச் செய்தார்கள். இவ்வாறே சைவ சமய ஞானிகளாகிய தேவார மும்மூர்த் திகளும், அவர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கி வந்த, பண்முறை என்று அந்தக் காலத்தில் அழைக்கப் பெற்ற இராக மரபைக் கையாண்டே, தமிழ் வேதமாகிய தேவாரப் பதிகங் களை அருளினார்கள். ஆழ்வார்கள் திரு வாய் மலர்ந்த பாசுரங்களும் இந்த அடிப் படையிலேயே எழுந்தன! ராகங்களை அவர்கள் உண்டாக்கவில்லை!

தமிழகத்தில் மிகப் பழங்காலத் தில் இருந்தே இராக முறையைப் பண் முறை என்றும், இராகங்களைப் பண் கள் என்றும் அழைத்து வந்திருக்கிறார் கள். முழு வடிவமும், முழுமையான அகல நீளமும் கொண்ட தாய்இராகங் களைப் பண்கள் என்றும், இவற்றி லிருந்து பிறக்கிற சேய் இராகங்களைப் பண்திறம், பண்திறத் திறம் என்றும் நம் முன்னோர்கள் அழைத்தார்கள். பண் கலந்த பாடல்களைப் பண்ணத்தி என்று தொல் காப்பியர் கூறுகிறார். இந்தச் சொல்லுக்குப் பொருள் கூறுகிற இளம்பூரணர் பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்களே பண்ணத்தி என்கிறார். அதோடு இந்தப் பண்ணத்திப் பாடல்களுக்கு உதாரணமும் கூறுகிறார் இளம்பூரணர். 'அவையாவன சிற்றிசையும்

மீ.ப.சோமு



✱ மன்றத்தின் அலங்கார நுழைவாசல்.

பேரிசையும் முதலான இசைத் தமிழில் ஓதப் படுவன' என்று சான்று செப்பி விளக்கம் சொல்கிறார் இளம்பூரணர். பண்ணத்திக்கு உரைவிளக்கம் செய்கிற பேராசிரியர் கூறு கிறார், ''அவையாவன, நாடகச் செய்யு ளாகிய பாட்டும், மடையும், வஞ்சிப் பாட் டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முத லியவா!'' இது தொல்காப்பிய உரையிலே பேராசிரியரின் விளக்கம்!

ஆகவே கீர்த்தனங்கள், பதங்கள் என் பது போலப் பண்ணோடு கலந்த இந்த வகையான இசைப் பாடல்கள், சங்க காலத்து நாடக அரங்குகளிலும், இசை அரங் குகளிலும், ஏராளமாக வழங்கி வந்தன என்றும், இலக்கண நூலிலே இவற்றுக்குச் சூத்திரம் வகுக்க வேண்டிய அளவுக்கு அவை வழக்கத்தில் இருந்தன என்றும் அறி கிறோம்.

பரிபாடல் போன்ற பழைய நூல்களில் வருகிற பண்கள் தவிர, இவ்வகையான பண் ணத்திகள் நாடக நடன, இசை அரங்குகளி லும், ஆலய வழிபாடுகளிலும் ஏராளமாக வழங்கி வந்திருக்கின்றன. நடனங்களுக் குரிய பல பல தாளக்கோவைகளும், சொற் கட்டுகளும், இசைத் துணுக்குகளும் எல் லாமே சேர்ந்து, தமிழிசை மரபை வளப் படுத்தின. உருப்படி என்று நாம் சொல்கிற சொல்லை ''உருக்கள்'' என்றே பழந்தமிழ் நூல்கள் அழைக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்து ஒருமித்து வளர்ந்த கலையே தமிழ் நாட்டின் இசை நெறியாகும்.

''பேணி இசை வளர்க்கும் நந்திபெம் மான் பேரரங்கு''

என்று நந்திவர்ம பல்லவனுடைய இசை அரங்கத்தை வர்ணிக்கிறது நந்திக் கலம்பகம்! சங்கீதம் என்ற கலை, அரச ஆதரவில் எப்படிப் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டது என்பதையே இது போன்ற குறிப்புகள் நமக்கு உணர்த்து கின்றன. அரசவைகளிலும், நாடக மேடை களிலும், நாட்டிய அரங்குகளிலும், தேவா ரத்தையா பாடி வந்தார்கள்? தேவாரத்தில் உள்ள பண்கள் மட்டுந்தானா இங்கெல் லாம் வழங்கிவந்தன? இல்லவே இல்லை!

'பல்லியம்' என்ற பழைய சொல் இசைக் கருவிகளைக் குறிக்கிறது. இந்த கைய வாத்திய இசையிலும் பண்கள், பண் திறங்கள், பண்திறத் திறங்கள் கற்பனை வளத்தோடு வழங்கி வந்தன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

''சேணுயர் நெறிமுறை திறம்பல்
இன்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில்
பண்ணுடை வீணை''

என்பது கம்பர் பாடல். வீணையிலே எப் படிப் பண்கள் செம்மையோடு ஒலித்தன என்பதைக் கவிச்சக்கரவர்த்தியின் இந்தப் பாடலிலே பார்க்கிறோம்.

தேவாரங்களிலும் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களிலும் வழங்கி வருகிற பண்முறை சில தனிப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட் பட்டது. வேதத்தை ஓதுவதற்கு ''சிக்ஷா'' என்று இருப்பதுபோல, ''கட்டளை'' என்ற ஒருமுறை இந்தப் பதிகங்களை நெறிப் படுத்தியிருக்கிறது. மற்ற இசைப் பாடல்கள் எல்லாம் நடனமுறை என்றும், நாடக மரபு என்றும், இசைவழி என்றும் பல பெயர் களில் அழைக்கப் பெறுகிற நெறிமுறை யிலே பாடப்பட்டு வந்தன.

வங்கியம் என்றும் ஏழில் என்றும் அந்தக் காலத்தில் அழைக்கப்பட்ட கரு வியே நாகஸ்வரம். இந்த நாகஸ்வரம் தமிழ் நாட்டின் தனிப்பெரும் சிறப்புக்கு உரிய வாத்தியம். இதிலும் புல்லாங்குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளிலும், பலவகை யான தாள அடைவுகளையும், வரிசைகளை யும் நெறிப்படுத்துகிற முழவின் வகைகளி லும், குரலிசையோடு சேர்ந்து நம் இசைக் கலையின் நெறிமுறைகள் வளர்ந்தோங்கிக் கிளைவீசிப் படர்ந்திருக்கின்றன.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஓர் அரிய ஆராய்ச்சி நூல் வெளியிட்டிருக்கிறார்கள் - ''கர்நாடக சங்கீத ராகங்கள்'' என்று பெயர். இந்த நூல் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் தமிழகத்தின் இசை மரபாகிய தமிழிசையின் நெறி முறைகளைத் தக்க ஆதாரங்களுடன் விளக்கு கிறது. தமிழிசை என்றால் தேவா ரத்தில் வழங்குகிற பண்கள்



* தமிழிசைக் கல்லூரி நூலகத் திறப்பு விழா - அரியக்குடி, சரஸ்வதி பாய், முசிறியுடன் முத்தையா செட்டியார், சங்கரன்.

★ 1952 - 53 இல் தமிழிசை விழாவைத் துவக்கி வைக்கிறார் ராஜாஜி. அருகே ஈ.பி. சேது பிள்ளை. அமைச்சர் ராமையாவுக்கு மாலை அணிவிப்பவர் கச்சாபகேச முதலியார்.



மட்டுமே என்று தவறாக எண்ணுகிறவர்கள் இந் நூலைப் படித்துப் பார்க்க வேண்டும்.

தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் இசையானது கலையின்பத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு தோன்றவில்லை. இந்த மறைப் பாடல்களின் ஆதார சுருதி பக்தியாகும் - இறையுணர்வாகும். பாடுகிற கலைஞருக்கும், கேட்கிற ரசிகருக்கும், இருசாராருக்குமே, இந்த இசை தருகிற அடிப்படையான சுவை, பக்திச் சுவையாகும். எட்டுச் சுவைகளையும் தாண்டி, அவற்றுக்கு அப்பாலும், அவற்றை உள்ளடக்கியும் நிற்கிற சமன் அல்லது சாந்தமாகிய ஒன்பதாவது சுவை, இந்தப் பக்திப் பண்களின் இசைக் கலைக்கு அஸ்திவாரமாகும். இந்தப் பய பக்தியோடு கூடிய உணர்வை, நம் பழந் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ''உட்கு'' என்ற ஒரு பழைய தமிழ்ச் சொல்லால் அழைக்கிறார்கள்! ''உட்கு'' என்பதே, இந்த இசையின் உயிர்நாடியாக ஒலிக்கிறது.

நம் நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஞானத் துறையிலே அநுபூதி பெற்ற மகான்கள் என்பதோடு கூட, இசைத் துறையிலும் ஆற்றல் நிரம்பிய கலைஞர்கள்! தியாகராஜர், முத்துசுவாமி தீக்ஷிதர் போன்ற இசை மேதைகளும் அப்படியேதான். இவர்கள் எல்லாம் மொழிப் புலவர்களோ, அல்லது இசைப் புலவர்களோ மட்டும் இல்லை. அவர்களை வாக்கேயகாரர்கள் என்று அழைக்கிறோம். அதாவது கவிக்கலையும் இசைக்கலையும் இரண்டும் இணைந்து செயற்படுகிற அரிய வாக்குப் பெற்றவர்கள் அவர்கள். சொல் முந்தியதா அல்லது இசை முந்தியதா என்று சொல்லமுடியாதபடி இரண்டும் சேர்ந்து ஒரே நேரத்தில் தோன்றுகிற வல்லமை படைத்தவர்கள் இவர்கள். இப்படிப்பட்டவர்களின் பாடல்களிலெல்லாம் இசைக்கு எவ்வளவு முக்கியம் உண்டோ அவ்வளவு முக்கியம் சொல்லுக்கும் உண்டு. ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது என்றோ, ஒன்றைவிட ஒன்று தாழ்ந்தது என்றோ சொல்ல முடியாதபடி ஒருடல் ஒருயிராகப் பிறந்த பாடல்கள் அவை. நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கீத மும்மூர்த்திகள் ஆகியோர் அருளிய பாடல்கள் எல்லாம் இசையையும் சொல்லையும் இணைபிரிக்க முடியாதபடி ஒருமித்துப் பிறந்த இன்கவிகள் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் சொல் தருவதும், அதற்கு மற்றொருவர் இசை தருவதும் பிசகில்லை. அடியார்க்கு நல்லாரே இந்த மரபுக்கு இலக்கணம் வகுக்கிறார். என்றாலும், இப்படி இரண்டு கலைஞர்கள் ஒத்துழைப்பதற்கு அவசியம் இல்லாதபடி, சொல்பிறந்த போதே அதன் இசையும் பிறந்து இசை வடிவிலேயே தோன்றிய பாடல்களே திருமுறையும் திவ்வியப் பிரபந்தம் முதலிய பாடல்களும். சொல்லின் தந்தையே இசையின் தந்தையாகவும் திகழ்கிறார்.

திருமுறைப் பண்களின் ஒலி அமைப்பிலே பன்னிரண்டு இசையியல்புகள் பொருந்தியுள்ளன. அந்தப் பாடல்கள் தோன்றியபோதே இந்தப் பன்னிரண்டும் அவற்றோடு இரண்டறக் கலந்து அமைந்து விட்டன. அந்தப் பன்னிரண்டு எவை என்றால், முதல், முறை, முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை, நிறம் ஆகியவை!

முதல் என்பது, இந்தப் பண் சுமந்த பாடல்களை எந்தச் சுவரத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்கிற ஆதார நிலை. இதற்குத் தமிழாசிரியர்கள் கூறுகிற பெயர் முதல் என்பது. முடிவு என்று சொல்வது இந்தப் பண்களிலே உள்ள, 'நியாசங்கள்' என்று இக்காலத்தில் அழைக்கப்பெறுகிற, அழுந்த நிலைகள். அந்தந்தப் பண்களின் உயிர் ஊற்று இந்த ஒலி நிலைகளிலேதான் தனித்தன்மையோடு சுரக்கிறது. ஒரு பசுவுக்குப் பால் சுரக்கும் இடம் முழங்கால் இல்லை, கொம்பு இல்லை. மடியிலே கறந்தால் பால் சுரக்கிறது. இப்படியே தான் ஒவ்வொரு இராகத்துக்கும் மடி என்ற சுவை புணர்வின் ஒலிச்சுரப்பு இருக்கிறது. அந்த இடத்திலே குரலை அழுத்தும்போது அல்லது இசைக் கருவியிலே அழுத்தம் கொடுக்கும்போது அந்த இராகத்தின் ஜீவன் அதன் உயிர் நிலையிலே ரச ஊற்றாகச் சுரக்கிறது. இந்த ஊற்று ஒவ்வொரு ராகத்துக்கும் ஒவ்வொரு தனித்தன்மையோடு கூடியது. இந்த அழுத்த நிலையைத்தான் தமிழ்நாட்டு



✱ இசை விழாவுக்கு வரும் 'அண்ணா'வை வரவேற்கிறார் முத்தையா செட்டியார்.

இசை பொருந்தி அமையும் போது, அதன் ''நீர்மை'' முழு ஆற்றலும் பெறுகிறது! இந்த நீர்மை கெடாமல் சொற்களுக் குள்ளே இராகம் இசையும போது தாள இயலிலே அதைப் பொருத்துகிற ஆற்றல் இருக் கிறதே, அதற்கு ''நிறம்'' என்று பெயர் தந்தார்கள் நம் முன்னோர்கள்.

இசைவாணர்கள் முடிவு என்ற சொல்லால் அழைத்தார்கள். வடமொழியில் உள்ள சங்கீத சாஸ்திரங்களில் ராக லக்ஷணங் களைக் கூறும்போது பஹுத்வம் அல்பத் வம் என்று இரண்டு சொல்வார்கள். இவையே அந்தக்காலத்துத் தமிழ் இசைப் புலவர்களால் நிறை குறை என்று அழைக் கப்பெற்ற பழந்தமிழ் இலக்கணச் சொற்கள். இவற்றைப் போலவே மந்தரம் தாரம் என்றும் இரண்டு பண்புகள் பேசப்படு கின்றன. இவையே மெலிவு, வலிவு என்று யாழின் மறை நூல்களான பழந்தமிழ்ச் சுவடிகள் பேசுகின்றன. கிழமை என்பது பண்களின் ஜீவசுரம். சமன் என்பது சமசுரங் கள். வரையறை என்பது இராகங்களின் ஆரோகண அவரோகணக் கிரமங்களில் ஒரு பண்ணை இன்னொரு பண்ணோடு மயங் காமல் காக்கிற கட்டுப்பாடு! முறை என்பது நாதம் ஒலிக்கிற பாங்கிலே அளவுகளை இயக்குகிற ஒலிச் சட்டமாகும். இவை யெல்லாவற்றையும் விட மிகவும் சிறப் பான ஒரு தன்மை திருமுறைப் பண்களுக்கு உண்டு. அதை ''நீர்மை'' என்று அழைத் தார்கள். நீர்மை என்பது ஒவ்வொரு பண்ணுக்கும் உள்ள தனித்தன்மையான சுவையுணர்வு. ஒரு பண் ஒலிக்கும் போது அதைக் கேட்பவர்களின் உள்ளத்தில் அப் போது தோன்றுகிற சுவையின் துடிப்பு, ரசாநுபவம் இருக்கிறதே, இதையே ''நீர்மை'' என்ற சொல்லால் அழைக் கின்றன, பழந்தமிழ் இசைச் சுவடிகள். இந்த நீர்மையின் நுட்பத்தை அடிக்கோடு போட்டுக் காட்டுவதுபோல அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் ஓர் இடத்தில் சொல்கிறார் : ''உருக்களை (அதாவது உருப்படிகள் என்று இன்று நாம் அழைக்கிற இசைப் பாடல்களை) இசை கொள்ளும்படியும் இரதம் பொருந்தும் படியும் புணர்க்க வேண்டும்.'' இது அடி யார்க்கு நல்லாரின் வாக்கியம். இப்படி

இந்தப் பன்னிரண்டு பண்புகளும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிய இசைப் பாடல்களில் ஈராறு கண்களோடு நின்று ஒளிவீசுகின்றன! சொற்களுக்குள்ளே கண் வளர்கிற இசை ஊற்று பன்னிரண்டு ஊற்றுக் கண்களிலே பொங்கிச் சுரந்து இசை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடி வரு கிறது. இதுவே இந்தத் திருமுறைப் பாடல் களின் உயர்தனிப் பெருமை.

இந்தப் பன்னிரண்டு பண்புகள் தவிர, இந்தப் பாடல்களின் எழுத்து இயலிலுமே இசையின் இயக்கத்திற்குச் சில விதி முறைகள் அமைந்துள்ளன.

தமிழ் எழுத்துக்களின் ஒலி நீளத்துக்கு அளவைகளாக மாத்திரைகளின் கணக்கை அறுதியிடுகிற தொல்காப்பியர், இந்த மாத்திரை அளவுகள் இசைப் பாடல்களிலே மட்டும் வேறுவிதமாக இருக்கும் என்று ஒரு சூத்திரத்தில் மொழிகிறார்.

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை
நீடலும்
உளவென மொழிப; இசையொடு
சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்!

என்கிறார். ''சிவணிய'' ''நரம்பின மறைய'' என்றெல்லாம் ஒரே சங்கீத இனி மையோடு இந்தச் சூத்திரமே ஒலிக்கிறது! இலக்கிய முறையிலே எழுத்துக்களுக்குச் சொன்ன மாத்திரைகள், இசைப் பாடலில் வேறுவிதமாக இருப்பதை, உயிர் எழுத்துக் களும் மெய்யெழுத்துக்களும் நீண்டு ஒலிப் பது உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

இந்த எழுத்தொலி மாறுபாடு தவிர, சொற்கள் தங்கள் மிடுக்கிலும் வேகத்திலும் தாள இயலினால் மாறுபாடுகள் கொள்வது இசைப் பாடலின் இன்னொரு தனிப்பண்பு. இனி, உயிர்நிலையான சுரங்கள் உயிர் நிலையான சொற்களிலே தோயும் வண்ணம் அமைவது இன்னொரு சிறப்பு.

அதோடு வேறொரு பெருமையும் தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்களுக்கு உண்டு. அதாவது பாடல் தோன்றுகிற திணை, காலம், ஆகியவற்றுக்குப் பொருந்துகிற பண்ணிலே இந்தப் பாடல்களின் இசை அமைந்திருக்கும். அதோடு கூட, அந்தப் பாடலின் யாப்பிலே உள்ள ''ரிதும்'' என்கிற தாள இயலோடு, பண்ணின் தாளமும் இணைந்து இயங்கும்.

திருமுறைப்பாடல்களின் அடிப்படையான நாதம், இறையுணர்வாக இருப்பதால் இந்தப் பாடல்களின் அமைப்பிலே இத்தனை இயல்புகளோடு இன்னொரு உயர் தனி இயல்பு, இவற்றுக்கு என்றே அமைந்த ஒப்பற்ற சிறப்பாக விளங்குகிறது. அதுவே இந்தச் சொற்களுக்குள்ள மந்திர ஆற்றல்.

வியாழக்குறிஞ்சி, என்று ஒரு பழைமையான பண் இருக்கிறது. இது ஒலியின் சட்டத்திலே தனியான ஆற்றல் கொண்ட ஒலிக்கோவை. இது போலவே அந்தாளிக் குறிஞ்சி என்று ஒரு பண். இந்த இரண்டும் இக்காலத்தில் ஸௌராஷ்ட்ரம் என்றும், சாம ராகம் என்றும் வழங்குகிற ராகங்கள். இந்த வியாழக்குறிஞ்சி அந்தாளிக் குறிஞ்சி முதலிய பண்களை மந்திரப் பண்கள் என்றே அழைப்பதுண்டு. இன்று விஞ்ஞான இயலிலே மிகவும் முன்னேறியுள்ள ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒலியின் ஒரு குறிப்பிட்ட வடிவத்துக்கு எத்தகைய பேராற்றல் இருக்கிறது என்பதை நவீனக் கருவிகள் கொண்டு ஆராய்ந்து (Suggestopaedia) 'ஸஜஸ்டொபீடியா' என்ற விஞ்ஞானத் துறையை வளர்த்து வருகிறார்கள். அத்தகைய ஆற்றலுடைய இத்தகைய பண்களிலே ''ஆணையிற் கிளந்த மறை மொழி' என்று சொல்லப்படுகிற பாடல்கள் எழுந்து வரும் போது அவற்றின் ஆன்ம வல்லமை நிகரற்று ஒளிவீசுகிறது.

இத்தகைய இசைப் பண்பும் இலக்கியப் பண்பும் இணைந்த அரிய பாடல்கள் ஆயிரக்கணக்காக நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள் நம் தந்தையர்கள். இவையெல்லாம் நிலையான மேன்மையும், விலைமதிப்பற்ற பெருமையும் கொண்ட இசைச் சுரங்கங்கள்!

இந்த இசைச் சுரங்கங்கள் அனைத்தும் சேர்ந்த இசைப் பண்ணையே தமிழிசை என்பது! அது தமிழகத்தின், தமிழ் மக்களின் இசை!

''ட்யூட்டிகோரின்'' என்றும் ''ட்ராங்க்குபார்'' என்றும் ''போர்ட்டோ நோவோ'' என்றும் பெயர் சூட்டிவிட்டால் நம் தமிழ் ஊர்கள் இங்கிலாந்து ஆகிவிடுமா? இன்றைய இசையுலகில் வழங்கி வருகிற ராகப் பெயர்களும், பிற இசைச் சொற்களும் இதே கதைதான் என்பதை மறந்து விடக் கூடாது. தமிழிசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி அரங்கிலே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக சங்கீத வித்வான்களும் தமிழ்ப் புலவர்களும் கலந்து நடத்தி வந்துள்ள ஆராய்ச்சியின் விளைவாக, தேவாரத் திருமுறையில் வழங்கி வருகிற சாதாரி முதலிய இருபத்திரண்டு பண்களும் இன்று வேறு பெயரில் வழங்கி வருகிற பந்துவராளி முதலிய நம்முடைய கர்நாடக சங்கீத ராகங்களே என்பதைச் சந்தேகமின்றி முடிவு கட்டியிருக்கிறார்கள். இந்த முடிவு மேற்சொன்ன உண்மையை உறுதிப்படுத்துகிறது!

தமிழிசை, எங்கும் போய் விடவில்லை. அது அழிந்துவிடவில்லை. திருமறைக்காடு வேதாரண்யம் ஆகியிருக்கிறது. அவ்வளவே!

வானம் போன்று விரிந்ததும் கடல் போன்று ஆழமானதும், இந்த நிலவுலகம் போன்று தொன்மையானதும் ஆகும் தமிழிசை. அது தேவாரம் மட்டுமில்லை. நாகஸ்வரம், வீணை, நாடக மேடை, நாட்டிய அரங்கம், அரசவை என்று கிளை வீசி விழுதுவிட்டுப் படர்ந்த ஆலமரம். அது சாதி சமய வேறுபாடின்றித் தமிழர்களாகிய நம் அனைவருக்கும், சொந்தமான மரபு வழிச் சொத்து! அதைப் பாதுகாத்துப் பேணுவது தமிழ் நாட்டின் வழித் தோன்றல்களாகிய பொது மக்களின் கடமையும் பெருமையும் உரிமையும் ஆகும்!



★ சர் சி.பி. ராமசாமி அய்யரை வரவேற்கும் ராஜா சர் தம்பதி....

இன்பத் தேன் பாயுது கேளுங்கள்!



* எம்.எஸ். : முதல் கச்சேரி



* முதல்வர் : துவக்கவுரை



* யேசுதாஸ் : இசைப் பேரறிஞர்

இவ்வாண்டு டிசம்பர் 21 - ஆம் தேதி ஒரு பொன்னான நாள். தமிழிசைச் சங்கத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் தொடங்கும் நாள். துவக்கி வைப்பவர் தமிழக முதல்வர். முதல் கச்சேரி செய்பவர் தமிழிசையின் வளர்ச்சிக்கு ஆரம்பம் முதலே தோள் கொடுத்த எம்.எஸ். தலைமை வகித்து, இசைப் பேரறிஞர் பட்டம் பெறுபவர் ரசிகர் கூட்டத்தைக் காந்தமாக இழுக்கும் தேன் குரல் யேசுதாஸ்.

தமிழிசைச் சங்கம் நடத்தும் இசை விழாக்களின் தனிச்சிறப்பே தேவார, திருமுறை இசைக்கு அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்தில்தான் இருக்கிறது. மூன்று நாட்கள் காலையில் நடைபெறும் பண் ஆராய்ச்சி அரங்கம் தவிர 22 டிசம்பர் தொடங்கி ஜனவரி 3 1993 விழா முடியும் வரை அனேகமாக எல்லா நாட்களிலும் திருமுறை, தேவாரம், திவ்வியப் பிரபந்தம், அபிராமி பதிகங்கள் போன்றவை முன் மாலை நேரங்களில் கச்சேரிகளாகவே ஒலிக்கும். பின் மாலைக் கச்சேரிகளில் முன்னணிக் கலைஞர்களின் பாட்டு மற்றும் வாத்தியக் கச்சேரிகள் : திருவிழா ஜெய சங்கர், குன்னக்குடி, மணி கிருஷ்ணசாமி, மாண்டலின் ஸ்ரீநிவாஸ், ஷேக் சின்ன மௌலானா, கே.பி. சிவானந்தம், லால்குடி ஜெயராமன், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், திருவிடைமருதூர் ராஜா (ஆரம்ப தினம்), கழுகுமலை கந்தசாமி, கே.வி. நாராயணசாமி,யேசுதாஸ், சங்கர நாராயணன், ஏ.கே.ஸி., சேஷகோபாலன், சரோஜா-லலிதா, சுதா ரகுநாதன், மகாராஜபுரம் ராமச்சந்திரன் என்று ஆவலைத் தூண்டும் பெயர்கள்!

இதையெல்லாம் தவிர, கோபால கிருஷ்ண பாரதியின் பஞ்சரத்ன கீர்த்தனைகள், சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்கள், எனச் சில அரிய பாடல்களின் தனிக் கச்சேரிகளும் உண்டு.

தமிழிசையின் பொன் விழாவை முத்தமிழ் விழாவாகவே மிளிரச் செய்ய நாட்டிய நிகழ்ச்சிகள் வழங்குவோர் சித்ரா விஸ்வேஸ்வரன், பத்மா சுப்ரமண்யம் போன்ற பிரபலங்கள் தவிர சுதா ரமேஷ், அகிலாண்டேஸ்வரி, ம்ருதுளா போன்ற கலைஞர்களும் கூட. கண்ணனும், கந்தனும் என்ற நாட்டிய நாடகம் தவிர, ''இடும்பன்'' என்ற ஹெரான் தியேட்டர்ஸின் மேடை நாடகமும் உண்டு.

திருப்புகழும் தமிழ் இன்பமும் என்ற தலைப்பில் வாரியார் சுவாமிகள் கதை அரங்கு நிகழ்த்துகிறார்.

துவக்க விழா சமயத்தில் முதல்வர் ஆற்றவிருக்கும் உரையை எல்லோருமே மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். சென்ற ஆண்டு இசை விழாவின் போது மியூசிக் அகாடமியில் அவர் ஆற்றிய உரை ஏற்படுத்திய இனிய ஆச்சரியத்திலிருந்து நாம் இன்னும் முற்றிலுமாக மீளவில்லையே!





"மாதங்களில்
மார்கழி நான்."

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது கிராண்ட் ஸ்வீட்ஸ்

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.







தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

பாடல் பெறாத திலங்கள்





நாதஸ்வரத்தை உறையிலிருந்து எடுத்தார் முத்துப் பிள்ளை...!

சீவாளியை உதட்டில் வைத்துப் பதப்படுத்தி ...பீ...பீ...பீப்பீ.... மெல்ல தலையைத் திருப்பி, சிடனைப் பார்த்தார்.

''...சொல்றதை நல்லா வாங்கிக்க...! நாதஸ்வரம் ஒரு ராட்சச வாத்தியம்...! ரொம்ப கவனமாக் கையாளணும்...! சீவாளி இடைஞ்சல் பண்ணி, சின்னப் பிசிறு விழுந்தால் கூட இனிமை மாறிப் போகும்...! கவனி...!''

... வாசிக்க ஆரம்பித்தார். பதினைந்து இருபது நிமிடம் போல் இந்த வாசிப்பு தொடர்ந்தது. நிறுத்தினார். 'ம்....' என்று சிடனைப் பார்த்து ஒரு தலையாட்டல்...! அவன் முயற்சிக்க..

...சட்.....

...முகத்தில் கோபம் தெரிந்தது...! வாத்தியத்தைக் கீழே வைத்தார்.. கையால் தாளம் போட்டுக் காட்டினார். பாடிக் காட்டினார், அவனும் பாட....

''அப்படியில்லேடா...! முண்டம்...! நெட்ரு பண்ணி ஒப்பிக்காதே...! பாடறப்ப ஒரு குழைவு வேணும். ஜீவன் வேணும், அலை மாதிரி அப்படியே மேலே போய்க் கீழே இறங்கி வரணும்...! ...பாரு... இப்படி! ...ரி...ச...த...த...பா... த...ப..க...க...ரீ...''

பாட.... ஏழெட்டு தடவை ஆயிற்று...! பையன் தலையில் இரண்டு குட்டு விழுந்ததுதான் மிச்சம்... இவர் முகத்தில் சிவப்பு ஏறியது.... நிறைய...



''எழுந்திர்றா...! எழுந்திரு...! இடத்தைக் காலி பண்ணு...! பாக்கு வெட்டியை எடுத்து ஓங்கினார்... 'மரமண்டை! மரமண்டை.... ஞான சூனியம்...''

பையன் எழுந்திருப்பதற்குள் தூணோரமாகக் குரல் வந்தது.

''நன்னா வாசிக்கிறான்.. நன்னா வாசிக்கிறான்'னு தூக்கி விட்டவன் எல்லாம் இன்னிக்கு உச்சாணிக் கிளையிலே உட்கார்ந்திருக்கான்...! கச்சேரிக்குப் பத்தாயிரம் பதினைஞ்சாயிரம் வாங்கறான். 'சர்....சர்'னு கார்லே வரான்... போறான்! 'இந்தா'ன்னு ஒத்தைக்காக நம்ப கண்ணுலே காட்டறானா? ச்சு... இவனாவது சமயம்னா ஒரு வாழைத்தாரு பரங்கிக்காய்னு கொண்டு வந்து கொடுக்கிறான்... அதையும் நிறுத்திடணுமா? 'சர்'ருன்னு கோபம் மாத்திரம் வந்தாப்பிலே ஆயிடுச்சா? 'ஞானம் - ஞானம்'னு நம்ப ஞானத்தைத் தானே சேர்த்து வைச்சிருக்கோம்... பங்களாவும் காருமா சேர்ந்திருக்கு....?''

கமலம் யாருடனோ பேசுவது போல் சொன்னாள். பெருக்கியபடி, தலையை நிமிர்த்தி அரைப் பார்வையாக இவரைப் பார்த்தாள். சிரிக்கிற மாதிரி இருந்தது! அந்தப் பார்வையிலும் சிரிப்பிலும் ஓர் ஆற்றாமை... விரக்தி... தோல்வி.. ஆத்திரம் வெளிப்பட....

சீடன் இன்னும் அங்கேயே உட்கார்ந்திருந்தான். இவர் முகத்தைப் பயத்தோடு பார்த்தான். பிள்ளையின் கோபம் பிரசித்தம்! எழுந்திருந்து விட்டாலும் அவருக்குக் கோபம் வரும்! அங்கேயே உட்கார்ந்திருந்தால், கையில் கிடைத்ததை எடுத்து வீசிவிடுவார்.

''அப்ப.... நாளைக்கு வரேங்க.''

''ம்....''

அவன் எழுந்து போவதைப் பார்த்தபடி இருந்தார். படியில் இறங்கி, தெருவோடு நடந்தான். இந்தப் பய நடக்கிறது அசப்பில் ராசப்பா மாதிரியே இருக்கு என்று நினைத்தார்.

இவரிடம் வந்த சமயம் ராசப்பாவும் இந்த அளவுதான் இருந்தான்! நெற்றி நிறைய விபூதி! நிறந்த உடம்பு! இடுப்பில் பெரிய துண்டு.... வீட்டோடு கிடந்தான். கலயத்தில் இருக்கிற பழையதை அள்ளிப் போட்டுக் கொண்டு சாப்பிடுவான்! ஒரு சமயத்துக்கு வண்டி ஓட்ட.... துணி துவைக்க... மாவு இடிக்க... இப்படி நாலைஞ்சு வருஷம்...

இப்பொழுது ராசப்பா அடையாளம் தெரியாமல் மாறிவிட்டான். கமலம் சொல்லுகிற மாதிரி உச்சாணிக் கிளைக்குப் போய் விட்டான்... உடம்பில் சதை வைத்து வெளுப்பு கூடி, மினு மினுப்பு ஏறி... அவனைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் இருக்கிறது...! பெயர் இருக்கிறது!

இந்த ராசப்பா இவ்வளவு அமர்க்களப்படுத்துகிறானே! என்னால் ஏன் முடியவில்லை? எத்தனையோ வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிற கேள்விதான் இது!

ஜி.நாராயணன்



• டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா

திரை இசையில் ஒரு டாக்டர்!

'வானம்' படத்தில் 'அபிராமி தேரில் வந்தாள்' பாட்டு - சண்முக ப்ரியா ராகம்; இதே படத்தில் பாகேச்வரி, தேஷ் ராகங்களில் பாடல்கள்; 'பூக்கள் மீண்டும் பூக்கும்' படத்தில் 'பெண்ணே உன் காலம் வெல்லும்' என்ற வருணா பரண ராகப் பாடல்; 'என் ஆசை ராசாத்தியில்' யமுனா கல்யாணி ராகத்தில் ஒரு பாட்டு; அதோடு ரேவதியும் சக்கரவாகமும் இணைந்துப் புதுவிதமாக ஒரு பாட்டு; மாண்ட் ராகத்தில் இன்னொன்று.... என ஏராளமான கர்நாடக ராகங்களில் சினிமா பாடல்களுக்கு இசையமைத்து வருகிறார் டாக்டர் சந்திர சேகர சாண்டில்யா.

மருத்துவ நிபுணரான சாண்டில்யா, எஸ். ராஜம், டி.வி.ஜி., ருக்மிணி ராஜ கோபாலன் என்று பலரிடம் முறைப்படி இசைப் பயிற்சி பெற்றவர்.

படு பிஸியான இவர், ''காலை, மாலை மெடிகல் பிராக்டிஸுக்கு இடையே இசை பிராக்டிஸுக்கும் எப்படியோ ஓரிரு மணி நேரங்கள் ஒதுக்கிவிடுவேன்'' என்கிறார்.

– சித்தார்த்

வாசலில் ஏதோ ஓசை. கார் சப்தம் - குழந்தைகளின் கூக்குரல்!

எழுந்து வெளியே வந்தார். இரண்டு பேர் நிற்பது தெரிந்தது.

''நமஸ்காரம்....''

''வாங்க....''

''நாங்க மெட்ராஸ்லேர்ந்து வரோம். 'பால விநாயகர் கான சபை'ன்னு கேள்விப் பட்டிருக்கலாம் - அடையார்லே இருக்கு. இவர்... சந்திரசேகரன்.. பிரசிடெண்ட். நான் செகரட்ரி...''

''சந்தோஷம்.''

''நம்ப ராசப்பா இருக்கார் இல்லியா....? தெரிஞ்சிருக்குமே...? பெரிய வித்வான்! வந்து அவரை மிஞ்ச ஆள் கிடையாது இப்ப!''

''ம்......''

''சமீபத்தில் ஒரு பேட்டி கொடுத்திருக்கார். அதிலே உங்களைப் பத்தியும் சொல்லியிருக்கார்! ம்... இந்த நாதஸ்வர வாசிப்பில் 'திருவையாறு பாணி'ன்னு ஒன்னு இருக்காமே? நீங்க... அதில் கரை கண்டவர்'னு...''

பிள்ளை சிரித்தார்! சிரிப்பில் இளக்காரம் இருந்தது! ரொம்ப கண்டவன் போல் அவன் சொன்னானாம் இவனுங்க கேட்டானுங்களாம்...

''ஒவ்வொரு வருஷமும் எங்க சபாவிலே புதுசு புதுசா ஏதாவது செய்வோம்! ஒரு ஜுகல் பந்தி! வீணையும் தவிலும்...! இந்த மாதிரி.... வர்ற சீஸன்லே உங்க கச்சேரி ஒண்ணு ஏற்பாடு செய்யலாம்னு அபிப்பிராயம். அதான்...''

''செஞ்சுட்டா போச்சு.''

''இந்த கச்சேரி மட்டும் ஒழுங்கா வந்துதுன்னு வைச்சுக்கோங்கோ, அப்புறம் தலையிலே வைச்சுண்டு கூத்தாடுவான் எல்லாரும் உங்களை! ஜாகையை மெட்ராசுக்கு மாத்திட வேண்டியதுதான்.''

இவர் பேசாமல் இருந்தார், முகத்தில் மட்டும் அந்த இளக்காரச் சிரிப்பு மறையாமல்.

''நீங்க... 'டேப்'பிலே ஏதாவது கொடுத்திருக்கேளா? கீர்த்தனைகள்... இல்லை... பழைய கிராமபோன் ரிகார்டு இருந்தால் கூட போதும்...ம்... இந்த 'திருவையாறு பாணி'ன்னு சொல்றாளே அதிலே அப்படி என்ன அபூர்வம்னு....''

''இல்லியே'' இவர் உதட்டைப் பிதுக்கினார். ஒரு விநாடி யோசனை செய்தார்... 'என் வாசிப்பைக் கேட்கணுமா?'

அவர்கள் விருப்பம் அதுதான் என்று புரிந்தது! 'எனக்குப் பரீட்சை வைக்கப் பார்க்கிறானுங்களா?' 'சர்' என்று கோபம் பொங்கியது....! 'எலே.. எழுந்து போங்கடா...' கமலம் சொல்லுகிற மாதிரி இந்தக் கோபம் தான் குறுக்கே நிற்கிறதோ! அடக்கிக் கொண்டார்.

''அரை மணி பொறுத்துக்குங்க, சாயரட்சை கோவில்லே போய் வாசிக்கிறது ரொம்ப நாள் பழக்கம், வழிமுறை. இன்னிக்கும் வாசிப்பேன். வாங்க! கோவிலையும் பார்த்த மாதிரி இருக்கும்.''

சொன்னபடியே அரை மணியில் வந்து விட்டார். மண்டபத்தில் உட்கார்ந்து....

பைரவியில் ஆரம்பம்... தொடர்ந்து, 'நீ இரங்காய்' அப்புறம் 'சக்கனிராஜ...'

''பேஷ்.... பேஷ்...'' என்றார் சந்திரசேகர். ''வெளுத்துக் கட்டிப்பிட்டீர்...!''

''அண்ணா! ஒரு நிமிஷம்'' என்றார் கூட வந்தவர். தனியே அவரைப் பிராகாரத்துப் பக்கம் அழைத்துப் போனார்.



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே.:. வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவிப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "மெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.


"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB."

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA

வெளிநாட்டு மாணவர்களுக்கென விசேஷ வெளிநாட்டு சேவைப் பிரிவும் இயங்கி வருகிறது.



''அருமையா வாசிக்கிறார்! நிறை குடம்!''

''வாசிக்கிறதெல்லாம் ரெண்டாம் பட்சம்தான் அண்ணா! இந்தத் தோடியையும் பைரவியையும் யார் வாசிக்கல்லே... சொல்லுங்கோ?''

''என்ன சொல்றே? புரியல்லியே...''

''ஒரு நாதஸ்வர வித்வான்னா... எப்படி இருக்கணும்னு ஜனங்கள் எதிர் பார்க்கறா?''

''ம்....''

''ஒரு பந்தா! ஒரு இமேஜ். 'தில்லானா மோகனாம்பா'வில் சிவாஜி வந்த மாதிரி! ஒரு கம்பீரம்! நல்ல முகவெட்டு, அலை அலையா கிராப்பு, மயில்கண் வேஷ்டி, சில்க் ஜிப்பா, ஜரிகை அங்கவஸ்திரம், கழுத்திலே டாலர் கோத்த சங்கிலி அப்படி... சபையிலே வந்து உட்கார்ந்தா... 'ஜிலு ஜிலு'ன்னு இருக்க வேண்டாமா? இவர்? வயற்காட்டிலே கலப்பையைத் தூக்கிண்டு போற ஆள் மாதிரி! ம்... இந்த வழுக்கைத் தலையையும், அட்டைக் கரியையும்.... அழுக்கு வேஷ்டியையும் மேடையிலே உட்கார்த்தி வைச்சா? சிரிக்க மாட்டாளா?''

அப்படி ஒரு காட்சி அவர் கண்முன் விரிய....

''நம்ப முந்திக்கலாம்னு பார்த்தோம்... நீ சொல்றதைப் பார்த்தால்...?''

''வெளி அழகுக்கு மயங்குகிற காலம் இது! இவர் இம்ப்ரஸிவ்வா இல்லியே...! எடுபடுமா?''

''வித்தை இருக்கு... மறுக்க முடியாது...''

''என் கேள்வி.. ரிஸ்க் எடுக்கணுமா?''

''ஒண்ணும் சொல்லத் தெரியல்லே...''

''அப்படின்னா... வேண்டாம்...''

சட்டையைக் கழற்றி விட்டு உள்ளே சென்றார்கள். குருக்கள் தீபாராதனை காட்டினார். ஒளி அம்மன் மேல் விழ....

''மீனாட்சி!'' என்றார் குருக்கள்.

''கொஞ்சம் நன்னா காட்டுங்கோ. சரியாத் தெரியல்லே.''

குருக்கள் தட்டை உயர்த்த.

''பிரமாதமா இருக்கே! ஏ அப்பா! என்ன அழகு... என்ன அழகு!'' வியப்பும் விரிந்த கண்களுமாகப் பார்த்தபடி நின்றார்கள்.

''இந்த மாதிரி எங்கேயும் பார்த்தது இல்லே! தத்ரூபம்! எவ்வளவு ஜீவன்! அம்மன் அப்படியே நேரில் நிற்கிற மாதிரி, பார்க்கிற மாதிரி! என்ன நேர்த்தி! ஆஹா!''

''யாராவது பாடியிருக்காளா...இந்தக் கோவிலை... அம்பாளை?''

''ச்சு... இல்லை...'' குருக்கள் சூள் கொட்டினார். ''என்னமோ தெரியல்லே... சுத்து வட்டாரத்திலே இருக்கிற கோவில் எல்லாத்துக்கும் பெரியவா நிறைய வந்திருக்கா, பாடியிருக்கா. இங்கே வரல்லே! இந்த ஊர், எட்டாக்கை! நாமா, இப்படி எதாவது சொல்லி சமாதானப்படுத்திக்க வேண்டியதுதான்...''

''ரொம்ப அற்புதமா இருக்கு! யாரும் இதைப் பாடல்லேன்னா ஆச்சரியம் தான்...''

''சில சமயம் இப்படி ஆயிடறது...!'' குருக்கள் நிறுத்தினார்.... பெருமூச்சு விட்டார்: ''ச்சு... அற்புதமா இருக்கிறதெல்லாம் வெளிச்சத்துக்கு வராமலேயே போயிடறது....! அதுதான் உலகம்...!''

சொல்லி விட்டு ஏனோ முத்துப் பிள்ளையைப் பார்த்தார்.

பிள்ளை... நிதானமாக நாதஸ்வரத்தை உறைக்குள் போட்டுக் கட்டிக் கொண்டிருந்தார்.

முன்னேறி வருகிறார்கள்; வரவேற்புச் சொல்லுங்கள்!



* சௌம்யா (படம் : யோகா)

உத்யோகத்தைத் துறந்தார், இசைக்காக!

''சங்கீதத்தை விட முடியல்லே... அதனால் உத்யோகத்தை விட்டுட்டேன்'' என்று கூறும் ஓ. எஸ். தியாகராஜன் இந்த சீசனில் ஒன்பது கச்சேரிகள் செய்கிறார்!

டெல்லியில் ஷாலிமார் பெயின்ட் நிறுவனத்தில் பிரதான கணக்கராக வேலை பார்த்து வந்தார் ஓ.எஸ்.டி. ''காலையில் வானொலி கச்சேரி, பிறகு அலுவலகம், பின்னர் மாலை சபா கச்சேரி அல்லது வெளியூர்ப் பயணம் என அலைந்த அலைச்சலில் வீட்டுக்குப் பொழுதோடு திரும்பும் நாட்களே கம்மியாகிவிட்டன. அதனால் நான் வேலையை விட்டேன்...'' என்கிறார். இப்போது சென்னையில் 'செட்டில்' ஆகி கச்சேரிகள் செய்வதுடன் பாட்டு கற்றுக் கொடுக்கவும் செய்கிறார்.

அடுத்த ஆண்டு அமெரிக்கச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தியாகராஜுவின் அரங்கேற்றம் அவரது பதினாறாவது வயதில் நடந்தேறியது. ஆரம்ப கால குரு அப்பா ஓ.வி.சுப்ரமண்யம்தான். 1983 இல் ஜூனியர் வித்வானாக ஆர்.ஆர். சபாவில்

கச்சேரி செய்த போது லால்குடி ஜயராமன் பக்கவாத்தியம் வாசித்ததைப் பெருமிதம் கலந்த நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

அரசாங்கத்தின் கலாசார பரிமாற்றத் திட்டங்களில் கர்நாடக இசைக்கு அதிக இடம் அளிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது ஓ.எஸ். டிக்கு.

''உண்மையிலேயே ஞானம் இருக்கு!''

மியூசிக் அகாடமியின் 1972-73 ஆண்டு இசை விழாவின் போது வரிசையாக ஆறு போட்டிகளில் பரிசு பெற்ற சுகந்தாவை நகைச்சுவை கலந்த மகிழ்ச்சியோடு பாராட்டினார் தலைமை தாங்க வந்த செம்மை வைத்தியநாத பாகவதர்: ''ஏன் ஒவ்வொரு முறையும் மேடைக்கு வந்து போறே....? இங்கேயே ஒரு ஓரமா நின்னுண்டு எல்லா பரிசையும் வாங்கிக்கோ!'' என்று!

இன்று இனிமையான இசைக்குப் பெயர் போன இளைய கலைஞர் வரிசையில் சேர்ந்து விட்டார் சுகந்தா காளமேகம்.

* கமலா



ஆனால் அவர் ஆரம்பத்தில் கற்றுக் கொண்டது நாட்டியம்தான்! பிறகுதான் கடயம் கிருஷ்ணமூர்த்தி, தேவகோட்டை கோபாலய்யர் ஆகியோரிடம் இசை கற்க ஆரம்பித்தார்.

திருவனந்தபுரம் வானொலியில் இவர் செய்த கச்சேரியைக் கேட்டு விட்டு, சில கோவை வாசிகள் நேரிலேயே வந்துவிட்டார்கள். 'எங்கள் ராககதாவில் கச்சேரி செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள்! மேடைப் பாடகியாக இவர் மலரத் தூண்டுகோலாக இருந்தது இந்தச் சம்பவம் தான்.

சுகந்தாவின் ஒரு கச்சேரிக்கு வந்திருந்த செம்மங்குடி, சாவேரி பாடும்படி கேட்க, தயங்கி யோசித்திருக்கிறார் இவர். தயக்கத்தைக் கவனித்த செம்மங்குடி, ''அப்போ உனக்கு உண்மையிலேயே ஞானம் இருக்குன்னு அர்த்தம்'' என்று ஊக்கப் படுத்தும் வகையில் கூறியதை ஆசியாகக் கருதுகிறார் சுகந்தா.

* ஓ.எஸ்.டி



ஆண்டுதோறும் ரேடியோ சங்கீத சம்மேளனத்தில் பாடும் சுகந்தாவுக்கு இந்த டிசம்பர் சீசனில் மூன்று கச்சேரிகள் உள்ளன.

இசையின் ரசாயனம் தெரிந்தவர்!

சௌம்யா - பெயருக்கேற்ற அமைதியான ஆழமான பாட்டு இவருடையது. எஸ். ராமநாதனிடமும் முக்தாவிடமும் கற்றுக் கொண்டால் வேறு எப்படி இருக்க முடியும்!

வானொலி, சபா, தனியார் போட்டிகளில் முப்பதுக்கும் மேற்பட்ட பரிசுகள் பெற்றிருக்கிறார். எஸ். ராமநாதன் தாமாகவே முன் வந்து சிஷ்யையாக ஏற்றுக் கொண்ட பாக்கிய சாலி சௌம்யா. பத்து வருடங்கள் அவரிடம் பயிற்சி.

படிப்பிலும் நன்கு பிரகாசிக்கிறார் சௌம்யா. பி.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி)யில் தங்கப் பதக்கம். எம்.எஸ் ஸியை முதல் வகுப்பில் முடித்துக் கொண்டு இப்போது ஐ.ஐ.டியில் ஆர்கானிக் கெமிஸ்ட்ரியில் டாக்டர் பட்டம் பெற ஆய்வு செய்து வருகிறார்.


இசையிலும் டாக்டர் பட்டம் பெறும் அளவுக்கு உயர இவரை வாழ்த்துவோம்.

டெல்லியில் ஹிந்துஸ்தானி இசை!

ஆறு வயதிலேயே கமலாவுக்குச் சங்கீத ஆர்வம் அரும்பிவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் பிறந்தாலும் வளர்ந்ததும் படித்ததும் தந்தை டாக்டராகப் பணியாற்றும் வாரணாசியில். அதனால் ஹிந்துஸ்தானி இசையின்பால் இயல்பான ஈடுபாடு.

* சுகந்தா





"பாடகருக்கு 150, மிருதங்கக்காரருக்கு 100, வயலின்காரருக்கு 100 குடுத்துடு..."

"ரேட்டு ரொம்பக் குறைச்சலாயிருக்கே, விலைவாசியெல்லாம் வேறே ஏறியிருக்கு..."

"ரேட் இல்லேய்யா! ஃப்ரீபாஸ்! கச்சேரிக்குக் கும்பல் வேண்டாமா?"

பண்டிட் அமர்நாத் மிச்ராவிடம் பயிற்சி பெற பெற்றோர் ஏற்பாடு செய்தனர். சுமார் ஆறு வருடங்களுக்குப் பெற்ற இப்பயிற்சி பலமான அஸ்திவாரமாக அமைந்தது. பண்டிட் பிரிஜ் பூஷன் காப்ராவின் கிடார் வாசிப்பால் ஈர்க்கப்பட்ட கமலா தாமும் கிடார் கற்க ஆசைப்பட்டார். பண்டிட் சிவ நாத் பட்டாச்சார்யாவிடம் மாணவியாகச் சேர்ந்து கிடாரில் ஹிந்துஸ்தானி இசை வாசிக்கக் கற்றுக் கொண்டார். ஐந்து ஆண்டுகளில் நல்ல தேர்ச்சி பெற்று மேடை ஏறிய கமலாவுக்கு ஏராளமான பாராட்டுகளும் விமர்சனங்களும் குவிந்துள்ளன.

பி.எஸ்ஸி ஜுவாலஜிக்குப் பிறகு இசையில் இளநிலை, முதுநிலைப் பட்டங்களையும் பெற்றுள்ளார். முதுநிலை (கிடார் இசை) பரீட்சைகளில் முதல் வகுப்பில் தேறினார். பயிற்சியின் போது வழிகாட்டி டாக்டர் என். ராஜம் - பனாரஸ் பல்கலைக் கழகத்தின் மேடைக் கலைகள் பிரிவுத் தலைவர்.

கலாசார பரிமாற்ற திட்டத்தின் கீழ் டெக்ஸாஸ் (அமெரிக்கா) சென்று வந்த கமலா, "கிடாரை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்தபடி வாசிப்பதை அங்கு பலர் வியப்புடன் பார்த்ததை நினைவு கூர்கிறார்.

இந்திய இசை வாசிக்க ஏதுவாக சிலர், கிடாரில் கூடுதல் தந்திகள் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் கமலாவின் குரு டாக்டர் ராஜம் அதை வரவேற்கவில்லை என்பதால் ஒரிஜினல் கிடாரில் இவர் மிக ஒரிஜினலாகவே இசைத்து வருகிறார்.

– கீதா மோஹன்

அருள்வாக்கு



அந்தப் பரதேவதையையே சங்கீத தேவதையாகச் சொல்லும் போது ராஜ மாதங்கி, ராஜ ச்யாமளா என்று பெயர் சொல்கிறார்கள். 'மீநாக்ஷி மே முதம் தேஹி... ராஜ மாதங்கி' என்று தீக்ஷிதர் பாடியிருக்கிறபடி மதுரையிலே நித்ய வாஸம் பண்ணுகிற மீநாக்ஷியானவள், பராசக்தி சங்கீதத்தின் அதிதெய்வமாக இருக்கப்பட்ட அவஸரம் (கோலம்) தான். காஞ்சிபுரத்தில் காமாக்ஷி கோயிலிலும் இவளுக்குத் தனி ஸந்நிதி இருக்கிறது. "ச்யாமளா தண்டகம்" இப்படி ஸங்கீத மூர்த்தியாக இருக்கப்பட்ட பராசக்தியைப் பற்றியதே. 'நவரத்னமாலா' என்பதாக 'ஓம்கார பஞ்ஜர சுகீம்' என்று ஆரம்பிக்கிற ஸ்துதி ஒன்றைக் காளிதாஸன் செய்திருக்கிறான். அதுவும் இந்த ச்யாமளா தேவியைப் பற்றியதுதான். அதிலே இவளும் ஸரஸ்வதியைப் போலவே கையில் வீணை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது: 'வீணா ஸங்க்ராந்த காந்த ஹஸ்தாம்'. நிறத்தில் மட்டும் அவளுக்கும் இவளுக்கும் நேர் வித்தியாசம். ஸரஸ்வதி நல்ல வெளுப்பு. இவளோ கறுப்பு. அதனால்தான் 'ச்யாமளா' என்று பெயர். இவளுடைய லாவண்யம் நிறைந்த கையின் நுனி விரல் வீணையின் தந்திகளில் எப்போதும் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அவள் இப்படி இருக்கிறாளென்றால் நாமும் சங்கீத உபாஸனையால் அவளைப் பிடித்து விடலாம் என்று அர்த்தம். நிறைய சாஸ்த்ராப்யாஸம் பண்ணி, யோகாதிகளால் சித்தத்தை நிறுத்தி வசப்படுத்த முடியாத நாமும் ஸ்வரங்களில் லயிப்பதால் மனஸை நிறுத்தி அவளுடைய சரணாரவிந்தத்தில் அதைக் கிடத்திவிடலாம். ஸுலபமாக அவள் கடாக்ஷத்தைப் பெற்று விடலாம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஆறு வயதில் 'நந்தகுமார்' படத்தில் கிருஷ்ணராக நடித்த மதுரை டி. சேதுராமன், பின்னர் கர்நாடக இசையை முறைப்படி (சோழ வந்தான் சேஷய்யரிடம் குரு குலம்) கற்றார். குமாரி கமலாவில் ஆரம்பித்து இன்று பிரபல நாட்டிய நட்சத்திரமாக உள்ள ஸ்ரீநிதி ரங்கராஜன் வரை அநேகமாக எல்லா முன்னணி நாட்டியக் கலைஞர்களுக்கும் பாடிப் பெயர் பெற்றிருக்கிறார். அவருடன் ஒரு பேட்டி :

கே : மேடையில் பாட்டுக் கச்சேரி செய்வதற்கும் நாட்டியத்துக்குப் பாடுவதற்கும் உள்ள வித்தியாசங்களைச் சொல்லுங்கள்....?



டி. சேதுராமன்

பதில் : பாட்டுக் கச்சேரி செய்பவர் தமது ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்துவதற்காகப் பாடுகிறார். நாட்டியத்துக்குப் பாடுபவர், நாட்டியக் கலைஞரின் திறமை வெளிப்படுவதற்கு உதவியாகப் பாடுகிறார். அதனால் இரண்டாவதில் முழு சுதந்திரம் கிடையாது; அந்தந்த சமயத்தில் தோன்றும் மனோதர்மங்களை இஷ்டப்படி வெளிப்படுத்த முடியாது. முன் கூட்டியே ஒத்திகை பார்த்துக் கொள்ள வேண்டும். நாட்டியக் கலைஞரின் பாணி, அவரது ஈடுபாடு - இவை ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். ஜூனியர் கலைஞராக - ஆரம்ப நிகழ்ச்சி வழங்குபவராக - இருந்தால் ஒரு ஸ்திரமான அமைப்புக்குள்தான் ஆடுவார்கள். ஆனால் இவர்கள் தவறு செய்யும் வாய்ப்புக்கள் அதிகம். அதை எதிர்பார்த்துக் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணணும். சீனியர் கலைஞர்களோ சபைக்கும், மனோதர்மத்துக்கும் ஏற்ப சின்னதும் பெரிதுமான மாறுதல்களை நிகழ்ச்சியில் ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு. இதையும் எதிர்பார்த்துத் தயாராய்த்தான் இருக்க வேண்டும்... மொத்தத்தில் நெளிவு சுளிவுகள் தெரிந்திருக்க வேண்டும்....

கே : நீங்கள் இதற்கெனச் சிறப்புப் பயிற்சி எடுத்துக் கொண்டீர்களா?

ப: தனிக் கச்சேரி செய்யுமளவுக்கு இசைப் பயிற்சி இருக்கிறது. மற்றபடி அனுபவம்தான் பெரிய அனுகூலம். அதோடு பக்கவாத்தியம் வாசிப்பவர்களின் ஒத்துழைப்பும் அவசியம். பாட்டுக் கச்சேரியின் போது கடைசி நிமிஷத்தில் பக்க வாத்திய வித்வான் மாற்றப்பட்டாலும் பாதகமில்லை. ஆனால் நாட்டியக் கச்சேரியில் இப்படி மாறினால் சிரமம் அதிகம். முன் கூட்டியே பக்கவாத்தியங்களுடன் சேர்ந்து பயிற்சி செய்தால்தான் நிகழ்ச்சி நன்றாக அமையும்.

கே : உற்சாகம் மேலிட நாட்டியக் கலைஞர் ஒரே வரிக்கு, ஒத்திகை பார்த்ததற்கு மாறாகக் கூடுதல் நேரம் அபிநயம் பிடித்தால்?

ப : அவருடைய மனோதர்மம் எப்படி இயங்குகிறது என்று ஓரளவு புரிந்துவிடும். அதற்கேற்பப் பாடுவோம். ஒரே வரியைச் சில சமயம் பத்து முறை அபிநயிப்பார்கள். நாட்டியத்தில் அந்த ஒரு வரியை

"நாட்டியத்துக்குப் பாட நெளிவு சுளிவு தெரிய வேண்டும்!"

எத்தனை விதங்களில் காண்பிக்கிறார்களோ அத்தனை விதமான உணர்ச்சி பாவங்களுடன் - அபிநயத்துக்குப் பொருத்தமான உணர்ச்சி பாவங்களுடன் பாட வேண்டும். உதாரணமாக ஒரே வரி பாட்டுக்குக் கிருஷ்ணரைக் குழந்தையாகவும் காட்டலாம் சங்க சக்ர சமேதரான விச்வரூப பெருமானாகவும் காட்டலாம். முதல் அபிநயத்துக்குக் குழைவோடு பாட வேண்டும். இரண்டாவதுக்குக் கம்பீரமாகப் பாட வேண்டும்... சில சமயம் நாட்டியத்தின் இடையே ஒரே வரி பாட்டுக்கு, ஒரு முழு கதையை அபிநயித்துக் காட்டுவார்கள். அந்தகைய சந்தர்ப்பங்களில் கதை நமக்கு நன்றாகத் தெரிந்திருந்தால்தான் பிழைத்தோம். இல்லாவிட்டால் அபிநயம் எப்போது முடியும் என்று எதிர்பார்த்து நாமும் முடிக்க முடியாது.

கே : நீங்கள் சொல்வதைப் பார்க்கும் போது நாட்டியத்துக்குப் பாடுவது தனிக் கச்சேரி பண்ணுவதை விட சிரமம் என்றே தோன்றுகிறது... அதற்கேற்ற அங்கீகாரம் உங்களுக்குக் கிடைத்துள்ளதா?

ப : தனிப்பட்ட முறையில் எனக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. ஆனால் பொதுவாக நாட்டியத்துக்குப் பாடுவோருக்கு உழைப்புக் கேற்ற, செலவிடும் நேரத்துக் கேற்ற ஊதியம் இல்லை. சமூகத்தில் கௌரவம் இல்லை. ஒரு நிகழ்ச்சிக்குக் கிடைக்கும் சன்மானத்தை நட்டுவனார், பாடகர், வாத்தியம் வாசித்தவர்கள் என்று பிரித்துக் கொடுக்கும் போது தொகை குறைந்து விடுகிறது. மெல்லிசையோ சினிமா பாட்டோ பாடுவோருக்குக் கிடைக்கும் அங்கீகாரம் நாட்டியத்துக்குப் பாடும் கலைஞர்களுக்குக் கிடையாது! ஆனால் இப்போது ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. எங்களைப் போன்றோர் தனிக் கச்சேரி செய்யும் அளவுக்குத் திறமை படைத்தவர்கள் என உணர்ந்த நாரதகான சபாவில் டிசம்பர் 6 முதல் 9 வரை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கே : நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பாட வாய்ப்புக்கள் தொடர்ந்து கிடைக்குமா?

ப : கிடைப்பது அரிது. அதனால்தான் திறமையிருந்தும் பலர் இந்தப் பணிக்கு வரத் தயங்குகிறார்கள். நாட்டியம் பயிலுவதற்கே நிறைய செலவாகிறது. நிகழ்ச்சி அளிப்பதற்கு மேலும் செலவு என்னும்போது நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை குறைவுதான். ஆசைக்கு ஒரு முறை அரங்கேறிவிட்டு நிறுத்தி விடுவோர்தான் அதிகம்!

கே : பல வருடங்களாகப் பாடி வருகிறீர்கள். உருப்படிகளில் ஏதேனும் மாறுதல்?

ப : நிறைய தமிழ்ப் பாட்டுக்கள் தற்கால அறிஞர்கள் இயற்றியவை இப்போது நாட்டியத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

– பானுமதி ராமச்சந்திரன்

9

கோவிலில் பந்தல் போட்டு வாழைமரம் கட்டியிருக்கிறது. ஸ்பீக்கரில் சீர்காழி கோவிந்த ராஜன். விநாயகனே, வினை தீர்ப்பவனே. பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு மார்க்கெட் பரபரப்பாய் இருக்கிறது. பல வர்ணங்களில் குடைகள் கண்ணைப் பறிக்கின்றன. தரையில் கிடைத்த இடங்களில் சரப்பிள்ளையார் அணிவகுப்பு. நான்கணாவிற்கு எருக்கம் பூ மாலை வாங்கச் சொல்லி காலைத் தொட்டுக் கும்பிடும் ஏழைச் சிறுவன். பூணூல், விநாயகர் அகவல். அருகம் புல், அரளிப்பூ. குட்டி சாமந்தி மாலை. கையகல வேட்டி. பிள்ளையார் கண்களில் கட்சி நிறத்தில் குண்டுமணி. அமர்த்தி அழைத்து வரப் பலகை. நாவற்பழம், கொய்யா, ஆரஞ்சு, விளாம்பழம். கவுளி வெற்றிலை. காண்பிக்கக் கற்பூரம். இட்டு விடுகிற சந்தனம். லக்ஷ்மிநாராயணன் ஒவ்வொன்றையும் பார்த்து வாங்குகிறான். ஒற்றைக் கையில் பலகைப் பிள்ளையாருடன் சைக்கிள் தள்ளு வதுதான் கஷ்டமாகயிருக்கிறது.



ம.வே.சிவகுமார்

ரயில்வே கேட் மூடியிருக்கிறது. தொகுதியில் அவ்வப்போது பார்த்த, பெயர் தெரியாத ஆசாமியொருவர் அசந்தர்ப்பமாய் அருகில் வந்து நிற்கிறார்.

''என்ன மார்க்கெட்டா?''

லக்ஷ்மிநாராயணன் சைக்கிளைப் பிடித்தபடி தலையைச் சாய்த்து, தோள் பட்டை உயர்த்தி மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொள்கிறான். தடக், தடக் என்று ரயில் கடந்து கேட் திறக்கிறது. இருப்புப் பாதையையொட்டிய ஒற்றையடிப் பாதை. பின்பக்கம் கேரியரில் பெயர் தெரியாத தொகுதி ஆசாமி கையில் பலகைப் பிள்ளையாருடன் அமர்ந்திருக்க, பல்லைக் கடித்துக் கொண்டு லக்ஷ்மிநாராயணன் சைக்கிள் ஓட்டுகிறான். இறக்கத்தில் சைக்கிள் தானாக இறங்குகிறது. வழியில் எருமை மாட்டைச் சுற்றிக் கொண்டு போகச் சிறிது சிரமப்பட்டு விட்டது. லக்ஷ்மிநாராயணன் தொலைவிலிருந்து வீட்டைப் பார்க்கிறான். ஏதோ அசம்பாவிதம் போல் வாசலில் கூட்டம் கூடியிருக்கிறது.

''ஒரு நிமிஷம்.''

கேரியர் ஆசாமியின் மற்றைய கையில் லக்ஷ்மிநாராயணன் சைக்கிளைத் திணிக்கிறான். விஷயம் என்னவாக இருக்கும்? மடித்துக் கட்டிய பதற்ற வேட்டியில் ஓடி வந்து கூட்டத்தை விலக்கிப் பார்க்கிறான். நடுவே லக்கேஜ் இறங்கியிருக்கிறது. அவனது புதுடில்லி மாமனார் சவாரி வந்த ஆட்டோகாரனிடம் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்.

''யோவ், யோவ். என்னய்யா தகராறு?''

''ரெண்டு ரூபா கூட கேக்கறேன் சார். அவ்வளோ தூரம் வண்டி காலியாப் போகணும். கேட்டா தரமாட்டேங்கறாரு.''

'மடையா. அறிவு இருக்கா உனக்கு? என்னிக்குடா தமிழனுக்கு டில்லிக்காரன் துட்டு கொடுத்திருக்கான்? இந்தா ரெண்டு ரூபா. தமிழனுக்குத் தமிழன்தான் ஹெல்ப். புரிஞ்சுதா?' - எண்ணெ ஒட்டத்தோடு ரூபாய் நோட்டு கைமாறுகிறது.

நின்ற இடத்தில் வட்டமடித்து லக்ஷ்மி நாராயணன் கூட்டத்தைப் பார்க்கிறான்.

''இன்னா கூட்டம் இங்க? போ. நவுரு. என்ன படமா காட்டறாங்க? போ, போயிடு. டாய், யார்றாவன்? எடத்தைக் காலி பண்ணு போ!''

கண்ணீர்ப் புகை போட்டாற் போல் கூட்டம் கலைகிறது. அவன் மாமனார் டில்லி ஆட்டோக்களைப் பற்றி ஏதோ பேச ஆரம்பிக்கிறார்.

''ஸ்டாப். வந்ததும் பாலிடிக்ஸ் வேணாம். முதல்ல காப்பி சாப்பிடுங்க.''

கடந்து விட்ட மாதங்களில் பூரித்த மகள் விஜயலக்ஷ்மியை அவள் தாயார் கண்கள் நிறைந்து பார்க்கிறாள். கூடியிருக்கும் முகத்தழகில் பெண் குழந்தையென்று தோன்றுகிறது. அவள் வேளா வேளைக்குச் சாப்பிடுகிறாளா? ஒவ்வொரு மாதமும் டாக்டரிடம் போகிறார்களா? அவள் ஜனக்புரி மாமியிடம் கொடுத்தனுப்பிய குங்குமப் பூ கிடைத்ததா? மாப்பிள்ளை தொந்திரவு செய்கிறாரா? ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அவரை அதிகம் நெருங்க விட வேண்டாம். சீர்வரிசையில் விட்டுப் போன சில்லறை அயிட்டங்களை இந்த முறை வாங்கியாயிற்று. இது அவளுக்குப் புடைவை. இது மாப்பிள்ளைக்குச் சட்டைத் துணி. அவளுக்குப் பிடிக்குமேயென்று பெரிய எவர்சில்வர் டப்பாவில் காரட் அல்வா. ரோஸ் கலர் பேப்பரில் வெள்ளிப் பாலாடை. ஆமாம். நகைகள் பத்திரமாய் இருக்கிறதா? வீட்டில் நகைகளை வைத்துக் கொள்ள வேண்டாம். அவை பாங்க் லாக்கரில்தானே இருக்கு? மாப்பிள்ளையை ஒரு நடை அவற்றை எடுத்து வரச் சொல்லி சரி பார்க்க வேண்டும். இப்போது வேண்டாம். ராத்திரி அவர்கள் தனித்திருக்கும் போது சொன்னால் போதும்.

சமையலறையில் ஈரத்தரை காய்ந்து, வாசலில் வெற்றிலை போட்டு நுனி நாக்கில் சிவப்பு பார்த்துத் தாயாரும், மகளுமாய்ப் பல கதைகள் பேசிக் கொள்கிறார்கள். அன்றைய புதுப் புடைவையில் விஜயலக்ஷ்மி மெல்ல படுக்கையறையில் நுழைய, கதவுக்குப் பின்னால் காத்திருந்து தாவிட்டு, பலகைப் பிள்ளையாரைச் சுவரை நோக்கித் திருப்பி வைத்து, அவளருகே அதிராமல் அமர்ந்து கொள்கிறான். நகையைப் பற்றி அவள் சொன்ன பிறகே அதிர்வுகள் ஆரம்பிக்கின்றன.

''நகையா?''

கட்டிலில் லக்ஷ்மிநாராயணன் எழுந்து கொள்கிறான்.

''எதுக்கு?''

''சரி பார்க்கணுமாம்.''

''சரி பார்க்கணுமா? ங்கொப்பன் வேலையாயிருக்கும். விடிஞ்சதும் பேசிக்கிறேன்.''

கட்டிலில் கறுவிக் கொண்டு லக்ஷ்மி நாராயணன் உட்கார்ந்திருக்கிறான். அவனருகில் எப்போதும் போல் விஜயலக்ஷ்மி நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறாள்.

வெளிச்சக் கிரணங்களில் உலகம் குளிக்கிறதைக் காண்கிற ஆசையில் சூரியன் மெல்ல எட்டிப் பார்க்கிறான். வாசலில் மாமனார் நியூஸ் பேப்பரைப் பிரிக்கிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டி

கர்நாடக இசைக்கு அமெரிக்க விருது!

அன்புள்ள வில்வநாதன்,

அமெரிக்க நாட்டின் கலாசாரத் தொன்மையைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் நீங்கள் அரிய பணியாற்றியிருக்கிறீர்கள். உங்கள் திறமையும் கலை வன்மையும் இந்த நாட்டை வளப்படுத்தியிருக்கின்றன. உங்கள் செயல்பாடு இன்னும் பல கலைஞர்களை இதே ரீதியில் பணியாற்றும்படி ஊக்குவிக்கும்.

பார்பராவும் நானும் எங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
ஜார்ஜ் புஷ்

ஆம்! அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் எழுதிய கடிதம்தான் (சுருக்கம்) இது.

அமெரிக்க மக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள். அவரவரும் பாரம்பரியக் கலைகளைப் பல தலைமுறைகளாகப் போற்றி வளர்த்து வருகிறார்கள். இதுவே அமெரிக்கப் பண்பாடாக விளங்குகிறது. இந்த அடிப்படையில்தான் அமெரிக்காவின் National Endowment for the Arts அமைப்பின் National Heritage Fellowship பெற்றதற்காக, புல்லாங்குழல் வில்வநாதனுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அமெரிக்க அதிபர் புஷ் அனுப்பினார்.


● 'வில்வா'

25 ஆண்டுகளாக வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் இந்திய இசை பயிற்றுவித்து வருகிறார் வில்வநாதன். இவர் வீணை தனம்மாளின் பேரன், பாலசரஸ்வதியின் சகோதரர். பாவம் சொட்டச் சொட்டப் புல்லாங்குழல் வாசிக்கும் சங்கீத கலாநிதி.

அமெரிக்காவில் இவ்வாண்டு பதிமூன்று பேருக்கு மட்டுமே National Heritage Fellowship அளிக்கப்பட்டது. அவர்களுள் ஒருவர் 'வில்வா' என்பது கர்நாடக இசைக்கே பெருமை.

– கே.எஸ். மகாதேவன்

ஆவேசமாய் லக்ஷ்மிநாராயணன் வந்து நிற்கிறான்.

''வணக்கம் உயர்திரு மாமனார் அவர்களே! மண வாழ்க்கையோட வெற்றிக்கு முக்கிய காரணம் அடிப்படையிலே ஒரு நல்ல மாமனார், மாப்பிள்ளை உறவு. மனசு விட்டுச் சில விஷயங்களைப் பேசலாம்னு பாக்கறேன். லொக்கேஷன் எங்கே? இன்டோரா, இல்லை அவுட் டோரா?''

''ஏதோ நகையெல்லாம் சரி பார்க்கணும்னு இவ சொல்லியிருந்தா. பாங்க்லே போய்ச் சரி பார்த்துட்டு வர்ற வழியிலே பேசிக்கலாமே.''

மாப்பிள்ளையும், மாமனாரும் பல்லவன் பஸ்ஸில் பாரிஸ் கார்னர் போகிறார்கள். பாலக்காடு அக்கவுண்டண்ட் லாக்கரைத் திறந்து விட்டு வெளியேறுகிறார். மணி பர்ஸில் லிஸ்ட் எடுத்து மாமனார் சரி பார்க்கிறார். தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள். பீரோவின் மாற்றுச் சாவி. அனைவரும் சேர்ந்து வந்து வைத்தது போலவே இருக்கிறது.

''பார்த்தாச்சா?''

மாமனார் தலை திருப்தியில் ஆடுகிறது.

''சரியா இருக்கில்லே?''

''உம்.''

''மொத்தம் எவ்வளவு பவுன்?''

''முப்பது பவுன் கொடுத்தேன்.''

''கொடுத்தாச்சில்லே? அப்ப நகை எங்களதுதானே? பின்னே எதுக்காகப் பார்க்கணும்னு கேக்கறீங்க?''

''அது எப்படி? பொண்ணைப் பெத்தவங்க கவலைப் படாம இருக்க முடியுமா?''

''ஓஹோ! தஞ்சாவூருக்கு லெட்டர் போட்டா ஒழுங்கா போய்ச் சேருதான்னு கூடவே போய்ப் பார்ப்பீங்களா? நல்ல ஆளுங்கப்பா! இதோ பாருங்க. நான் ஒரு மாதிரி டைப். மாப்பிள்ளை வீட்டுக்கு மரியாதையா வர்ற மாமனார் மாதிரி வாங்க. எஸ்டேட் வெவகாரம் பாக்க வர்ற ஜமீன்தார் மாதிரி வராதீங்க.''

கரங்கப் பாதையில் இறக்கி விட்டு, லக்ஷ்மிநாராயணன் அலுவலகம் திரும்புகிறான்.

''கூட யாரோ வந்திருந்தாங்களே. யாரது?''

கரண்ட் அக்கவுண்டில் வனஜா கேட்கிறாள்.

''மாமனார்.''

லக்ஷ்மிநாராயணன் கேஷ் டிப்பார்ட்மெண்ட் கதவு திறந்து நுழைகிறான். வெளியே அழுக்கு ஓங்கியும், காக்கி சட்டையுமாக ஒருவன் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, லக்ஷ்மிநாராயணன் அன்றைய சம்பளத்துக்குக் கொஞ்சம் நேரம் வேலை செய்து நிமிர்கிறான்.

''உனக்கென்னையா?''

''பணம் எடுக்கணுங்க.''

''யாரு அக்கவுண்ட்லே எடுக்கலாம்னு பாக்கறியா?''

''இல்லீங்க. பார்ம் எழுதணும்.''

நைந்த பாஸ் புத்தகத்தில் ஃபாரம் வருகிறது.

''எத்தனை ரூபாய்?''

''நூறு ரூபாய்ங்க.''

''கையெழுத்துப் போடுவியா?''

''இல்லீங்க.''

லக்ஷ்மிநாராயணன் ஸ்டாம்ப் பேடை வைத்து உதவ, அந்த ஏழை வாடிக்கையாளன் கட்டை விரலை அழுத்திப் பதிக்கிறான்.

''படுபாவி. அது என் கட்டை விரல்!''

மத்தியானம் புகைப்பட ஆல்பம் வருகிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வந்த அன்று எடுக்கப்பட்ட புகைப்படங்கள். மனம் தடதடக்க லக்ஷ்மிநாராயணன் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டுகிறான். இது வரை ஒரு படத்திலும் அவன் இல்லை. பக்கத்துக்குப் பக்கம் அதிகாரிகளே சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நான்கைந்து புரட்டல்களில் ஆல்பம் முடிந்து விடும். இதோ, ஒரு படத்தில் லக்ஷ்மி நாராயணன். ஆனால் என்ன பிரயோசனம்? அது முன் வரிசையில் அவன் அமர்ந்திருக்கிற புகைப்படம். குருநாதருடன் சேர்ந்திருக்கிற மாதிரி இல்லை. இதோ கடைசி பக்கம். திருப்பியதுமே அவன் மனம் ஒரு துள்ளு துள்ளுகிறது.

''எலேய்!''

லக்ஷ்மிநாராயணன் ஓடி வந்து நிற்கிறான்.

''ஒளுங்காயிருக்கணும். தெரிஞ்சுதா?''

புகைப்பட ஆல்பத்தில் கடைசிப் படமாய் அவனிடம் சிவாஜி விரல் உயர்த்தி எச்சரித்த அந்த ஒரு கணம் பதிவாகியிருக்கிறது.

அலுவலகம் முடிகிறது. மின்சார ரயில் வரவில்லை. பிளாட்பாரத்தில் பெஞ்ச் ஒன்றில் நண்பர்களுடன் லக்ஷ்மிநாராயணன் பேசிக் கொண்டிருக்கிறான்.

''நல்லவேளை.''

''என்ன?''

''போன வாரம்தான் வளையலை அடகுலேர்ந்து எடுத்து லாக்கர்லே வைச்சேன். இல்லேன்னா இன்னிக்குத் தமிழன் டில்லிக்காரன் முன்னால நாறியிருப்பான்.''

''மோசம்டா. அதுக்குள்ள என்ன உனக்கு அப்படி நெருக்கடி?''

உரிமையில் நண்பர்கள் லக்ஷ்மிநாராயணனைக் கண்டிக்கிறார்கள்.

''போடா. வீட்டைக் கட்டிப் பார். கல்யாணம் பண்ணிப்பார்னு சும்மாவா சொன்னான்? அது ஒரு இன்பத் தொல்லை. அவசிய அநியாயம். மத்தியிலே பொண்டாட்டி பார்த்ட வந்துது. காலைலே ஹோட்டல். மத்தியானம் சினிமா. சாயங்காலம் பீச். வளையலை அடகு வைச்சு மோதிரம் வாங்கினேன். என்ன பண்றது? புதுப் பொண்டாட்டி. ஆச்சே? எதையும் அடகு வைச்சாவது அலங்காரம் பண்ணித்தானே தீரணும்.''

ரயில் வருகிறது. லக்ஷ்மிநாராயணனும் நண்பர்களும் நடக்கிறார்கள். வந்து நின்ற பெட்டியிலிருந்து லக்கேஜ் இறங்கிப் பின்னாலேயே மாமனாரும், மாமியாரும் இறங்குகிறார்கள்.

''அப்ப நாங்க பொறப்படறோம். ரெண்டு நாள் கேகே நகர்லே என் பிரதர் வீடு. அப்புறம் திருச்சி, லால்குடி, பழனி. சீமந்தத்துக்கு ஒரு வாரம் முன்னால வர்றோம்.''


''வந்து ரெண்டு நாள் கூட ஆகல்லியே?''

நண்பர்கள் நடுவே லக்ஷ்மிநாராயணன் கேட்கிறான்.

''வாஸ்தவம்தான். ஆனா மண வாழ்க்கையோட வெற்றிக்கு முக்கிய காரணம், அடிப்படையிலே ஒரு நல்ல மாமனார், மாப்பிள்ளை உறவு. நீங்க சொன்னது தான். நாங்க வர்றோம் மாப்பிள்ளே.''

பிளாட்பாரத்தில் மாமனார் கை கூப்புகிறார். மின்சார ரயில், லக்ஷ்மிநாராயணன் வீட்டை நோக்கிப் புறப்படுகிறது.

(தொடரும்)



"செய்தியா வாசிக்கிறாய், சீ போடா!"

●● இரவு ஏழே கால் மணிக்குத் திருவனந்தபுரம் பத்திரிகை அலுவலகங்கள் அனைத்துக்கும் போன் செய்து ஏழரை மணிச் செய்தியைத் தவறாமல் பார்க்கச் சொல்லியது ஒரு குரல்!

அன்று டீ.வி. செய்தி வாசிக்கத் திரையில் தோன்றிய சந்தோஷ், தலைப்புச் செய்திகளுள் இரண்டினை வாசிக்கு முன்னரே ஒரு கரம் முஷ்டியை மடக்கிக் கொண்டு அவரைப் பதம் பார்த்தது. இதை டீ.வி.யில் பார்த்துக் கொண்டிருந்த லட்சக்கணக்கானவர்களுக்கு என்ன ஏது என்று புரிவதற்குள் 'சீ! போடா!' 'நிறுத்துடா!' என்ற அதட்டல்களுடன் சந்தோஷ் மீது பாய்ந்து அவரை அப்புறப்படுத்தினார்கள் சிலர். பாய்ந்தது யார், எதற்காக என்று விவரம் தெரியவில்லை. எனினும் அன்று 26 நவம்பர் - 7.30 மணிச் செய்தியே வாசிக்கப்படவில்லை!

பம்பாயில் 'கார்சேவா'!

●● 12,000 ரூபாயிலிருந்து 17,00,000 ரூபாய் வரை மதிப்புள்ள கார்கள் வாங்க, விற்க - சிறந்த இடம் பம்பாயில் மகேஷ் காந்தாவாலா நடத்தும் 'கார் மேளா'! 150 ஊழியர்களுடன் ஒவ்வொரு ஆண்டும் மேளா நடத்தும் காந்தாவாலா, கார் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கமிஷன் பெறுகிறார். சுமார் இரண்டாயிரம் கார்கள் மேளாவில் பங்கேற்கின்றன!


●● உலகிலேயே ஓசை மிகுந்த நகரங்கள் வரிசையில் பம்பாய்க்கு மூன்றாவது இடம்! இது உலக சுகாதார நிறுவனத்துடைய ஆய்வின் முடிவு. போதாக்குறைக்கு ஆலைகளிலிருந்து வெளிவரும் நச்சுப் புகையோடு வாகனங்கள் வெளிப்படுத்தும் 3000 டன் கார்பன் மோனாக்ஸைடும் சேர்ந்து கொள்ள, செவிக்கு மட்டுமின்றி நாசிக்கும் நுரையீரல்களுக்கும் கூட திண்டாட்டம் தான்.

●● கடந்த பல ஆண்டுகளாக மஹாராஷ்டிரா மாநில சட்டசபை குளிர்காலத்தில் நாக்பூரில் கூடுகிறது. விதர்பா பகுதி முன்னேற வேண்டும் என்ற நோக்கில் இந்த ஏற்பாடு! இதனால் எழுநூறு அதிகாரிகள் தவிர, ஊழியர்கள், எம்.எல்.ஏக்களுக்கு ஆகும் வருடாந்திர போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் பத்து கோடி ரூபாய்! இத் தொகையை விதர்பாவை முன்னேற்றுவதற்குச் செலவழித்திருந்தாலே போதுமே என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது!

கையில் துப்பாக்கியுடன் விரதம்!

●● ஆந்திராவிலிருந்து சபரிமலை செல்வோர் அதிகரித்து வருகின்றனர். ஆந்திர தொழில் நல அமைச்சர் சந்தோஷ் ரெட்டி சபரிமலைக்குச் செல்ல கறுப்பு அணிந்துள்ளதோடு அவரது மெய்க்காவலரும் அதே விரதம் பூண்டுள்ளார். கையில் துப்பாக்கியோடு கடமையைச் செய்து வருகிறார். தலைநகரில் பல அதிகாரிகள் கறுப்பு ஸஃபாரி அணிந்து காலில் செருப்பின்றி ஆபீஸ் செல்கிறார்கள்! சட்டசபையிலும் சாஸ்தா பக்தர்கள் உண்டு!

– நமது நிருபர்கள்



பிருந்தா கானம்



* பிருந்தா



* நிர்மலா பார்த்தசாரதி

* கீதா ராஜன்



சமீபத்தில் பிருந்தாவின் சதாபிஷேகத்தை அவரது ரசிகர்கள் கொண்டாடினார்கள். இசை உலகில் அலாதியான முத்திரை பதித்து விட்ட 'பிருந்தா பாணி' என்றால் என்ன? மற்ற கலைஞர்களின் பாணியிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டது?

பிருந்தாவின் இசையில் நிறைவே ஊறித் திளைத்த கீதா ராஜன் சொல்கிறார் :

''வீணை தனம்மாள் கோடி காட்டிய பதம் பாடும் டெக்னிக்கை இவர் பிரயோகித்துப் பிரபலப்படுத்தினார். காலப் பிரமாணத்தை இழுத்துப் பாடாமல், ஒதுக்கிப் பாடும் பாணி இவருடையது. குரல் வளத்தில் அதிகக் கவனம் செலுத்துவார். கமகம் எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவுதான் இருக்கும்.

''கீர்த்தனைகளை வழங்கும் விதமே இவரது ஸ்பெஷாலிடி. சின்னச் சின்ன பிர்காக்கள் வேகமாக வரும். பதங்களில் வரும் இடைவெளியில் விச்ராந்தி இருக்கும். ராகமாலிகையில் ஸ்லோகங்கள் பாடும் இவர் திறமை விசேஷமானது.''

வீணைக் கலைஞர் நிர்மலா பார்த்தசாரதி சொல்கிறார் :

''பிருந்தாம்மாவின் இசை, பரம்பரை வழியில் ஊறியது. மணிக்கணக்காக ஆலாபனை பண்ணினாலும் ஓர் இடத்தில் கூட புனருக்த தோஷம் (மறுபடி மறுபடி சொல்லுவது) வரவே வராது. நிரவல் செய்யும் போது ராக பாவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடுவார். எதை ஒதுக்க வேண்டும், எதை வைத்துக் கொள்ள வேண்டும் என்று நன்கு தெரிந்தவர். வல்லினம் - மெல்லினம் கொடுத்துப் பாடுவதில் வல்லவர்.

''க்ஷேத்திரக்ஞர் பதம் இவரது ஸ்பெஷாலிடி. அதிலும் இருபுடை தாள பதங்கள். ஏழெட்டு கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டிருப்பதற்குப் பதில் ஒரு க்ஷேத்ரக்ஞர் பதத்தை, அதன் அழகையும் ஆழத்தையும் வெளிப்படுத்தும் வகையில் பாடி, விசுவரூப தரிசனம் மாதிரி நம்மை பிரமிக்கச் செய்து விடுவார்.

''பிருந்தாம்மாவின் விருத்தங்களில் ராகத்தைப் போஷித்துப் பாடும் பாணி பிரதானமானது. இவரது பாணி பரம்பரை பரம்பரையாக வந்தாலும், அதில் புதுமையும் தனித் தன்மையும் இருக்கிறது.

''பாடும் போது நிராசையோடு பாட வேண்டும் எனச் சொல்வதுண்டு. அதாவது நமது இசை மூலம் இன்னின்ன விளைவுகள் உண்டாக்க வேண்டும் என்று திட்டமிடாமல் நிஷ்காம்யமாய்ப் பாடுவது. இவ்வகையில் இசைதான் முன்நிற்க வேண்டும்; பாடகர் முன்நிற்கக் கூடாது. இதுதான் பிருந்தாம்மா பாணி.''

– சித்தார்த்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, 1942 டிசம்பர் 10, 20 இதழ்கள்

கலாநிதி நடனம்




குமாரி கலாநிதி நாளுக்கு நாள் ஓங்கி வளர்ந்து வருகிற கலைத் திறமையினால் சபையின் கவனத்தைத் தன் பக்கம் கவர்ந்து கொண்டாள். கலாநிதியின் கலைச் சிறப்பு முக்கியமாக அபிநயத் திறமையாகும். கலாநிதியின் முகத்தில் வெவ்வேறு பாவங்களும், உணர்ச்சிகளும் மாறி மாறி வருவதைப் பார்க்கும் போது ஏதோ இந்திர ஜால வித்தையைப் பார்ப்பது போலவே தோன்றுகிறது. வேலையும் மீனையும் ஒத்த விசால நயனங்களும் பலவித உணர்ச்சிகளை வெளியிடுவதற்குப் பெரிதும் உதவி செய்கின்றன.

அபிநயத்துக்காகப் பொறுக்கியிருந்த பாட்டுக்கள் (ஒன்றைத் தவிர) எல்லாம் தமிழ்ப் பாட்டுக்கள். அச்சிட்ட புத்தகமும் கையில் கொடுத்திருந்தார்கள். ஆகவே, பாவங்களை நன்கு அறிந்து அனுபவிப்பது சபையோருக்கு எளிதாயிருந்தது. குமாரி கலாநிதி நீடூழி வாழ்ந்து, அபிநயக் கலையை மேலும் மேலும் வளர்த்து, பெற்றோர்களையும் ரஸிகர்களையும் மகிழ்விக்கும்படி பகவான் அருள்புரிய வேண்டும்.

தர்பாரின் சாரம்

சங்கீதத் துறையில் முன்னணிக்கு வரக்கூடிய - வர வேண்டிய - புள்ளியென்று நான் மதிப்பிட்டிருந்த இளம் பாடகர்களில் ஒருவர் ஸ்ரீ வி. வி. சடகோபன். இவர் பி.ஏ. பரீக்ஷை பாஸ் செய்து விட்டு மியூஸிக் அகாடமி சங்கீதப் போட்டியிலும் பரிசு பெற்றார். ஸினிமாத் திரைக்குப் பின்னால் இவர் மறைந்த காரணத்தினால் சங்கீத உலகில் பிரகாசிக்க முடியாமல் போயிற்று. ''ஸினிமாத் திரையில் மறைந்தார்'' என்று ஏன் சொல்கிறேன் என்றால், இவர் நடித்திருக்கும் படங்கள் பெரும்பாலும் மட்டரகமாய்ப் போனதினால்தான். இதைக் குறித்து எனக்குக் கொஞ்சம் வருத்தம் இல்லாமற் போகவில்லை.



எனவே, சென்ற வாரத்தில் ஸ்ரீ வி. வி. சடகோபனுடைய இசைத் தட்டு ஒன்றைக் கேட்க நேர்ந்த போது எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. டாக்கி கீதம் அல்ல; சுத்த கர்நாடக சங்கீத ரிகார்டு. ஒரு பக்கத்தில் ஸ்ரீ கோடீசுவரய்யருடைய ''ஸ்ரீ வேணுகோபால'' என்னும் தர்பார் ராகக் கீர்த்தனையும், மற்றொரு புறத்தில், ''காண வேணும் லட்சம் கண்கள்'' என்னும் ராம நாடகச் சுருட்டி கீர்த்தனையும் பாடியிருக்கிறார். ஒரே நிமிஷத்திற்குள் தர்பார் ராகத்தின் சாரத்தைப் பிழிந்து தந்திருக்கிறார். குரல் அப்பழுக்கில்லாமல் கணீர் என்று ஒலிக்கிறது. ஸாஹித்யத்தின் ஒவ்வொரு வார்த்தையும் விளங்கும்படி பாடியிருக்கிறார். சுருங்கச் சொன்னால், நல்ல சங்கீதத்துக்குரிய எல்லா அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன.

- ஆடல் - பாடல் - ''கர்நாடகம்''





கற்றுக் கொண்டது

அம்மா : கிட்டு, நீ நன்றாய்ப் படித்து வகுப்பில் முதலாவதாகத் தேறினால் அப்பா உனக்குச் சைக்கிள் வாங்கித் தருவதாகச் சொன்னாரே! நீ பாட்டுக்கு வெறுமே திரிஞ்சிண்டிருக்கயே?

கிட்டு : திரியல்லேம்மா! சைக்கிள் விடத்தான் கத்துக்கறேன்.

பட்டம்மாளின் கச்சேரி

ஸ்ரீமதி பட்டம்மாளின் சாரீரம் முன் போலவே மதுரமும் கம்பீரமும் பொருந்தி யிருக்கிறது. சங்கீதம் முன்னைவிடக் கனிவு பொருந்தியிருக்கிறது. ராகங்களை விஸ்தார மாக ஆலாபனம் செய்யாவிட்டாலும், ராகத் தின் முழு ஸ்வரூபமும் நன்கு விளங்கும் படியாக பாவத்துடன் பாடுகிறார்.

நமது பாடகர்- பாடகிகளில் சாஹித்யத் தின் சிறப்புக்காகவே கரகோஷம் பெறு



கிறவர்களில் ஸ்ரீமதி பட்டம் மாளை முக்கியமாகச் சொல்ல வேண்டும். வார்த் தைகளை அவ்வளவு தெளி வாக உச்சரித்து, தானே நன்கு அநுபவித்துப் பாடுகிற படியால், சாஹித்யம் கேட் பவர்களின் மனதைக் கவர்ந்து விடுகிறது. தெரிந்த பாஷைக்குத்தான் இது பொருந்தும் என்று சொல்ல வேண்டியதில்லை.


ஸ்ரீமதி பட்டம்மாளின் கச்சேரியில் பல்லவிக்கு எப்போதும் பிரதான ஸ்தானம் உண்டு. இன்றைக்கும் "மாம்பழனி மலை மகபதியே நீவா" என்னும் கரகரப்ரியா பல்லவியைக் கண்ட நடை திஸ்ர ரூபகத்தில் திறமையுடன் பாடினார். பக்க வாத்தியங் களின் ஒத்தாசை இருந்திருந்தால் இன்னும் நன்றாய்ச் சோபித்திருக்கும்.

அவரவர்களுக்குப் பொருத்தமான பக்க வாத்தியங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வசதி நமது பாடகர்களுக்கு இருக்கிறது; பாடகிகளுக்கு அந்த வசதி இல்லை.

புதிதாகச் சங்கீத உலகில் பிரவேசிக்கும் நண்பர் வினைதீர்த்தான் செட்டியார் அவர் களின் கச்சேரிக்கு நமது பிரசித்தமான பக்கவாத்தியக்காரர்கள் வாசிப்பார்கள். ஆனால் எக் காரணத்தினாலோ, இவர்கள், பாடகிகளுக்கு வாசிப்பதில்லை. பல வருஷம் சங்கீதத் துறையில் பாடுபட்டுப் புகழ்பெற்ற பாடகிகளானாலும் சரிதான்.

ஆடல் - பாடல் - "கர்நாடகம்"

மணிக் கதை



மணி பலூன் வாங்கிக் கொண்டு அப்பாவுடன் போட்டோ பிடித்துக் கொள்கிறான்

அவசரம் வேண்டாம்!

கணவன் : நேற்று ராத்திரி உன் ஆர்மோனியப் பெட்டியைத் திருடன் எடுத்துக் கொண்டு ஓடியது போல் சொப்பனம் கண்டேன்!

மனைவி : நீங்கள் பேசாமல் நின்றேனாக்கும்!

கணவன் : பேசாமல் ஒன்றும் நிற்கவில்லை. 'ஏனப்பா இப்படி ஓடு கிறாய்? மெதுவாய்த்தான் போயேன்!' என்றேன்.



* வேட்டலஸ்ட் ஆயுதம்?

● ஆர். தமிழரசி, சிதம்பரம்.

? ''அன்னை வந்தார்; அள்ளித் தந்தார்'' என்ற வாசகம் முதல்வரைக் குளிர்ச்சிப்படுத்தவா? மக்களின் வயிற்றெரிச்சலைக் கிளப்பவா?

! இரண்டும்தான். மூன்றாவதாக மக்களின் வரிப்பணத்தை விரயமாக்கவும்தான். கடமையைச் செய்வதைக் கூட அரசு செலவில் விளம்பரம் செய்து கொள்ளும் அவலம். அதிலும் தனிநபர் பிரபை வளர்க்கும் அசிங்கம்.

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? தமிழகத்தில் சில பத்திரிகைகள் தம்மை 'அரக்கி' என்றும் 'சர்வாதிகாரி' என்றும் கடுமையாகத் தாக்கி எழுதுவதாக முதல்வர் பேட்டி தந்துள்ளது பற்றி...?



* ''முழுங்கி விட்டார்!''

! துரதிர்ஷ்டவசமாகச் சில பத்திரிகைகள் அத்துமீறிப் போவது உண்மைதான். ஆனாலும் இத்தகைய பத்திரிகைகளை வழிக்குக் கொண்டு வர ஒரே வழி அவற்றை முதல்வர் அலட்சியம் செய்து, மக்களையும் அவ்வாறு செய்யுமாறு கோருவதே. மாறாக, பெரிதுபடுத்தி, அவதூறு வழக்குகள், பேட்டிகளில் புலம்பல்கள் என்று தொடரும் போது, முதல்வர் பேரில் மக்களுக்கு அனுதாபம் ஏற்படுவ தில்லை என்பதுடன் இத்தகைய பத்திரிகைகளுக்கும் அதுவே டானிக் கொடுத்தது போலாகிறது. மக்களும் 'முதல்வர் ஏன் இத்தனை துடிக்கிறார்? ஏதோ உண்மை இருக்கு போல' என்று எண்ண ஆரம்பிக்கிறார்கள்!

● தா. சிந்துகுமார், திருவட்டார்.

? திண்டுக்கல்லில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் கொள்



* தெரியாமல் சொன்னாரா?

சந்திரலேகா தமிழக முதல்வராக வாய்ப்புண்டா?

ளையர்கள் புகுந்து, கொள்ளை அடித்திருக்கிறார்களே?

! திண்டுக்கல்லுக்குச் சென்னை மாநகரம் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை; இங்கே டி.எஸ்.பி. வீட்டிலேயே கொள்ளை!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? இரண்டாவது டெஸ்டும் டிராவில் முடிந்து விட்டதே?

! முதல் ஒருநாள் கிரிக்கெட்டில் தென் ஆப்பிரிக்கா முந்திக் கொண்டதே! நம்மவர்கள் கோட்டை விட்ட காட்சுகள், 'நான் எங்கே நிற்கணும்?' என்பது போல் அஷாருத்தீனே குழம்பிப் போய் ஜாடை காட்டிக் கேட்டது, எல்லாவற்றையும் டீவியில் பார்க்க... ஆளுக்கு நாலு சாத்து சாத்தி விட்டு வரலாம் போல்தான் கோபமாக வந்தது!



* முதல்வராக வாய்ப்பு?

● அ. அப்துல் காதர், அரியநாயகிபுரம்.

? 'நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட வேட்பாளர் வயது 21-ஆகக் குறைக்கப்பட வேண்டும்' என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறதாமே?

! இருக்கும், இருக்கும்! பிரியங்காவுக்கு வயது 21 ஆகப் போகிறதாம்!

● செ. கற்குவேல், வேடப்பட்டி.

? சந்திரலேகா ஐ.ஏ.எஸ். தமிழக முதல்வராக வாய்ப்புண்டா?

! சூ! எழுந்திருங்க, எழுந்திருங்க! பகல்ல என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கு!

● கி. இரமேசபாபு, சேலம். ☐

? கருணாநிதியின் லேட்டஸ்ட் ஆயுதம் என்ன?

! பப்ரி மஸ்ஜித்தில் கடப்பாறை சேவை நடத்தாலும் நடத்தது; கப்பென்று பிடித்துக் கொண்டார்! காங்கிரஸூம் பி. ஜே. பி. யும்



* ''பப்பே!''

நீங்கள் கேட்டவை - தராசு



✱ 21-ஆகிறதாம்!



✱ குழம்பிப் போய்...

ஒருவரோடு ஒருவர் ரகசிய உடன்பாடு செய்து கொண்டு நடத்திய கூட்டுச் சதியாம்! கற்பனை, கொடிகட்டிப் பறக்கிறது! அரசியல் ஆதாயம் தேட எதையும் ஆயுதமாக்குவார் கருணாநிதி.

● வி. சிப்பிக்குள் ராமன், வேப்பத்தூர்.

? ''பிழைகள் மலிந்த புத்தகமாகி விட்டது தமிழகம்; பிழைகளை எங்கு கண்டாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை'' என்கிறாரே கருணாதிதி?

! அவர் பொறுமையை மேலும் சோதிப்பது போல நீர் வேறு அவர் பெயரை எழுதுவதிலேயே பிழை புரிகிறீரே!

● ரா. அரிராம், வங்கநகர்.

? ஸ்பிக் ஊழலில் ஜெயலலிதாவுக்குப் பங்கு இருக்கிறதா?

! ''சந்திரலேகா என்பது சதம் முழுங்கி விட்டு இருபது சதம் அரசுக்குக் கிடைக்கச் செய்ய எண்ணினார்'' என்கிறார் 'ஜெ'. ''பங்குகளைத் துறக்க எண்ணிய போது, மார்க்கெட் விலை அல்லாது 'ஜெ' குறைத்து நிர்ணயிக்க முற்பட்டது ஏன்?'' என்று கேட்டு, 'உள்நோக்கம் உண்டு' என்று உணர்த்தப் பார்க்கிறார் சந்திரலேகா. எது உண்மையோ? ஆக மொத்தம், அரசுக்குப் பங்குகள் இல்லாமல் செய்ததில் ஆட்சியாளருக்குப் பங்கு இல்லாமல் போகவில்லை!

● எஸ். ரோஜா, நாட்டரசன்கோட்டை.

? ஜடேஜா, ஆம்ரே, ஸ்ரீநாத் - தங்களைக் கவர்ந்தவர் யார்?

! நடுவிலுள்ள நம்பிக்கை நாயகர்தான். டெஸ்ட் பிரவேசத்துக்காக நீண்ட காலம் காத்திருந்த காரணத்தால் அவர் ''தாம்ப்ரே'' (மராத்தியில் காத்திரு) என்று அழைக்கப் பட்டார். தென் ஆப்பிரிக்காவில் முதல் டெஸ்டில் செஞ்சுரி போட்டாரோ இல்லையோ, ''பாப்ரே'' (கடவுளே!) ஆகி விட்டார், ஆம்ரே!

● ஈ. மு. கிருஷ்ணன், ஈரோடு.

? 'கேஸட்டை, பொன் விழா மலருடன் அன்பளிப்பு' என்று முன்னர் அறிவிப்பு செய்து விட்டு, தற்போது பொன் விழா மலரும் கேஸட்டும் சேர்ந்து ரூ 50/-க்கு வழங்குவதாக பதில் கூறுகிறீரே?



✱ குளிர்ச்சிப்படுத்த...

! 'தீபாவளி மலர் ரூ 40க்கு வழங்கப்பட்டது எவ்வாறு?' என்பதற்கான என் பதிலைக் குறிப்பிடுகிறீர்கள், போலும்! தீபாவளி மலரை விட பொன் விழா மலர் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் அதை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட காகிதம் தீபாவளி மலர் காகிதத்தை விட உயர்வானது. அதன் விலையும் அதிகம். காஸெட் உங்களுக்கு அன்பளிப்புதானே தவிர, இந்த நிறுவனம் அதை விலை கொடுத்துத்தான் எச்.எம்.வியிடம் வாங்கியுள்ளது. ஒரு எம். எஸ். கேஸட் மார்க்கெட்டில் என்ன விலைக்கு விற்கப் படுகிறது என்பது உங்களுக்கே தெரியும். பொன் விழா ஆண்டில் மலர் வாங்கும் வாசக அன்பர்களுக்கு ஒரு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டால் சிலர் பல்லைப் பிடித்துத்தான் பார்க்கிறார்கள்!

● எம். அருணாசலம், கோணப்பட்டு.

? ''அரசியலில் நண்பனுமில்லை, எதிரியுமில்லை'' என்ற அரசியல்வாதியின் பேச்சுக்கு அடியில் உள்ள உண்மையான பொருள் என்ன?

! 'சந்தர்ப்பவாத சுயநலம்' என்பதுதான்!

● பட்டு, கும்பகோணம்.

? ''தமிழக அரசின் துறைகளிலேயே குழப்பம் மிகுந்தது கல்வித் துறைதான்'' என்கிறாரே நாவலர்?

! இதையாவது அவர் தெளிவாகச் சொன்னாரா, அல்லது தமது வழக்கமான முற்றுப் புள்ளியற்ற பாணி பேச்சில் குழப்பினாரா?

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? ''என் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்கிறார்கள்'' என்கிறாரே, ஜெ?

! ''சந்திரசேகர் எனக்கு சு. சுவாமி மூலம் அனுப்பி வைத்த பணத்தை என்னிடம் சேர்ப்பிக்காமல் சு. சுவாமியே முழுங்கி விட்டார்'' என்பது போலெல்லாம் பேசும் ஜெயைக் கவிழ்க்க வேறு ஒருவர் சதி பண்ண வேண்டுமா என்ன? அவரே போதும்!

> ☐ ரூ 25 பரிசு பெறுபவர் :
> கி. இரமேச பாபு,
> கற்பூரக் கடை,
> திருக்காளியம்மன் கோயில்,
> அம்மாபேட்டை மெயின் ரோடு,
> சேலம் - 636 001.

சக்கரவர்த்தித் திருமகன்

13. பகீரதன்

யாகக் குதிரையைத் தேடிச் சென்ற தன் குமாரர்கள் திரும்பி வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த அரசன் சில நாட்கள் கழித்துப் பேரன் அம்சுமானை அழைத்து, ''பாதாளம் போன குமாரர்களுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. நீ வீரன் அல்லவா? ஆயுதபாணியாகச் சென்று பார்த்து விட்டு வருவாய். வெற்றியோடு வருவாய்!'' என்று அம்சுமானை ஆசீர்வதித்து அனுப்பினான்.

அம்சுமான் தன் சிறிய தகப்பன்மார், சகர குமாரர்கள் பூமியைத் தோண்டிக் கொண்டு போன வழியைப் பிடித்தே சென்றான். திக்குக் கஜங்களைக் கண்ட போது அவற்றை வணங்கிப் பூஜித்துத் தன் காரியத்தைச் சொல்லிக் கொண்டான். அந்த யானைகளும், ''நீ காரிய சித்தியடைவாய்'' என்று ராஜகுமாரனை ஆசீர்வதித்தும் தைரியப்படுத்தியும் அனுப்பி வைத்தன. அதன் பேரில் தாமதமின்றி உற்சாகமாகச் சென்றான்.

பாதாளத்தில் எல்லாப் பக்கங்களும் சுற்றிப் பார்த்தான். ஓர் இடத்தில் பெரியதொரு சாம்பல் குவியலையும் பக்கத்தில் யாகக் குதிரையையும் கண்டு திருப்தியும் திகைப்பும் அடைந்தான்.

சகர ராஜாவின் பத்தினி சுமதியின் சகோதரனாகிய கருடபகவான் அங்கே தற்செயலாக வந்தவன், அம்சுமானை நோக்கி, ''திகைக்காதே! இந்தச் சாம்பற் குவியலே உன் பித்ருக்களான சகர குமாரர்களின் மிச்சம். கபில தேவரால் சபிக்கப்பட்டுச் சாம்பலானார்கள். அன்புக்குரிய குழந்தாய்! குதிரையைப் பிடித்துச் சென்று யாகத்தை முடித்துக் கொள்ளுங்கள். சபிக்கப்பட்ட ராஜகுமாரர்கள் நற்கதியடைய வேண்டுமானால் தேவலோகத்துக் கங்கையை இங்கே வரவழைத்துச் சாம்பலைக் கரைக்க வேண்டும்'' என்றான் கருட பகவான்.

குதிரையுடன் அம்சுமான் வெகு வேகமாகத் திரும்பிப் போய்ப் பாட்டன் மகாராஜாவிடம் விஷயத்தைச் சொன்னான்.

தன் புத்திரர்களுடைய கதியைக் கேட்டு அரசன் துயரக் கடலில் மூழ்கினான். குதிரை திரும்பி வந்தபடியால் யாகத்தைக் கிரமமாக முடித்து விட்டு, குமாரர்களின் கதியைப் பற்றியும் கங்கையைப் பற்றியும் யோசித்தான். யோசித்து, யோசித்து இன்னது செய்வது என்று தோன்றாமல் அந்தத் துயரத்திலேயே உயிர் நீத்தான்.

முப்பதினாயிரம் ஆண்டு வாழ்ந்து சகரன் இறந்தான் என்று ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. ராமாயணத்தில் முப்பதினாயிரம் அறுபதினாயிரம் என்கிற பெரிய எண்களைப் படித்து நாம் திகைக்க வேண்டியதில்லை. முப்பது ''வருஷ சஹஸ்ரம்'' என்றால் அனேக வருஷங்கள் என்றாவது அல்லது முப்பது வருஷமாகவேயும் வைத்துக் கொள்ளலாம். ''சஹஸ்ரம்'' என்பதை ''வருஷம்'' என்பதற்கு ஒரு மங்கள அடைமொழியாகவே வைத்துக் கொள்ளலாம். 'ஷஷ்டி சஹஸ்ரம் மக்கள்' என்றால்

ராஜாஜி

அறுபது மக்களாகவே வைத்துக் கொள்ளலாம். நம்பினால் இருக்கிற படியே வைத்துக் கொள்ளலாம்.

சகரனுக்குப் பிறகு அம்சுமானும், அம்சுமானுக்குப் பிறகு திலீபனும் திலீபனுக்குப் பிறகு பகீரதனும் அயோத்தியில் அரசாண்டார்கள். அம்சுமானும் திலீபனும் தங்கள் மூதாதையர்களுடைய நற்கதிக்கு வேண்டியதைச் செய்ய முடியவில்லையே என்று எண்ணி எண்ணி, மற்ற எல்லா விதத்தில் சம்பத்தும் புகழும் அடைந்திருந்தாலும் இந்தப் பெருங்குறையின் காரணமாகத் தலை முறை தலைமுறையாகத் துக்கப்பட்டுக் கொண்டே காலகதி யடைந்தார்கள்.



திலீபனுக்குப் பின் அவன் குமாரன் பகீரதன் அயோத்தியாபதியானான். அவன் மகா தீரன். பகீரதனுக்கு மக்கட் பேறு வாய்க்கவில்லை. அதைக் கருதியும், கங்கையைக் கொண்டு வருவதற்காகவும் ராஜ்யத்தை மந்திரிகள் வசம் ஒப்புவித்து விட்டுக் கோகர்ணத்தில் நீண்ட தவம் புரியப் போனான். நான்கு பக்கங்களிலும் தீ மூட்டி, தலை மேலே வெய்யிலும் காய, மாதம் ஒரு முறையே ஆகாரம் உண்டு பல்லாண்டுகள் உக்கிரமான தவம் புரிந்தான். விடாமுயற்சிக்கு ஒரு பெயரே ஆயிற்று பகீரதனுடைய நாமம்.

பிரஜாபதிப் பிரம்மா பகீரதனுடைய தவத்தை அங்கீகரித்து அவனுக்குத் தரிசனம் தந்து ''என்ன வேண்டும்?'' என்று கேட்டான். பகீரதன் தன் இரண்டு விருப்பத்தையும் தெரிவித்தான். ''என் பேரில் தாங்கள் இரக்கம் கொண்டால் எங்கள் குலம் அறுபட்டுப் போகாமல் எனக்குப் புத்திரப் பேறு தர வேண்டும். என் மூதாதைகள் சாபத்துக்கு இரையாகி ஜலக்கிரியை இல்லாமல் சாம்பலாகப் பாதாளத்தில் கிடப்பதைக் கங்கா ஜலத்தில் கரைத்து, நீர்க்கடன் செய்து முடித்து அவர்களைச் சுவர்க்கம் சேரச் செய்ய வேண்டும். அதற்காகக் கங்கை கீழே இறங்கி எங்கள் குலத்தின் பெருந் துயரத்தை நீக்க வேண்டும். இதுவே நான் கோரும் வரம்'' என்று பகீரதன் பிரம்மாவை மிக வணக்கமாகப் பிரார்த்தித்தான்.

''உன் தவம் தேவர்களுக்குத் திருப்தி தந்தது; உன் இஷ்டங்கள் நிறைவேறும். ஆனால் ஒன்று : ஹிமவானுடைய மூத்த புத்திரியான கங்கை





கீழே இறங்கினால் அந்த வேகத்தை இந்தப் பூமி தாங்காதே? அதைத் தாங்கக்கூடியவன் உமாபதி ஒருவனே. அவனைக் குறித்துத் தவஞ் செய்வாய்'' என்று சொல்லி உடன் வந்த தேவ கணங்களுடன் மறைந்தான்.

மறுபடியும் பகீரதன் நீண்ட காலம் அன்ன ஆகாரமின்றிக் கடுந்தவம் செய்து உமாபதியின் அருளைப் பெற்றான். பரமசிவன் பிரத்யக்ஷ தரிசனம் தந்து, ''உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன். மலைராஜன் மகளாகிய கங்கை இறங்கும் போது என் தலையில் அவளைத் தாங்குவேன். அவள் உனக்கு அருள்வாளாக'' என்றான்.

பரமேசுவரன் பகீரதனுக்கு இந்த வரத்தைத் தந்ததும் பிரம்மன் சொல்லியிருந்தபடி கங்காதேவி இறங்கினாள். தன் முழு வேகத்துடன் ஆகாயத்திலிருந்து கீழே மகாதேவனுடைய சிரசின் மேல் வீழ்ந்தாள். தன்னுடைய அபார வேகத்தால் சங்கரனையும் தள்ளிக் கொண்டு நேராகப் பாதாளம் போவேன் என்று அவள் எண்ணினாள். அவளுடைய கர்வத்தை யடக்க வேண்டும் என்று முக்கண்ணன் உத்தேசித்தான். அவன் அந்தப்படி நினைத்த மாத்திரத்தில் தலையில் இறங்கிய பவித்திர ஜலப் பிரவாகம் அவனுடைய பெருஞ் சடையில் அகப்பட்டுக் கொண்டு வெளியில் வர முடியாமல் நின்று போய் விட்டது!

எவ்வளவோ முயன்று பார்த்தாள். ஆயினும் இமய மலைச் சொரூபமான மகா தேவனுடைய சடையின் குகைகளினின்று வெளிப்பட்டு வந்து பூமியில் இறங்க முடியாமல் திகைத்துப் போனாள்.

கங்கைக்காகத் தவமிருந்து அடைந்த பகீரதன், ''ஐயோ இப்படியாயிற்றே! ஜலப் பிரவாகமெல்லாம் எங்கே போயிற்று?'' என்று மறுபடியும் மகாதேவனைக் குறித்துத் தவம் செய்தான்.

மகாதேவன் அவனுக்கிரங்கி பிந்துஸரஸில் கங்கையை மெதுவாக விட்டான். அங்கிருந்து ஏழு சிறு ஆறுகளாக மிக அடக்கத்துடன் கங்கா தேவி வெளிப்பட்டாள். மூன்று ஆறுகள் கிழக்கு முகமாகவும், மூன்று ஆறுகள் மேற்கு முகமாகவும் சென்றன. ஏழாவது ஆறு பகீரதன் பின்னால் சென்றது. பகீரதன் மகிழ்ச்சிப் பரவசமானான். தலைமுறை தலைமுறையாகக் காத்திருந்த தன் மூதாதைகளுக்கு நற்கதியுண்டாயிற்று என்று அவன் மனம் பூரித்து, வெற்றித் தேர் ஏறி முன் சென்றான். கங்கை ஆறு அவனைத் தொடர்ந்து துள்ளிக் குதித்துப் பெரும் பிரவாகமாகப் பின்தொடர்ந்து சென்றது. ஜலத்துடன் பல ஜல ஜந்துக்களும் பறவைகளும் விளையாடிக் கொண்டு செல்ல மின்னல் பாய்வது போல் விளங்கிற்று. அந்த மகத்தான காட்சியைக் காண தேவ கந்தர்வக் கூட்டம் ஆகாயத்தில் கூடிற்று. நதியின் கதியும் சில இடங்களில் மெதுவாகவும் சில இடங்களில் மகா வேகமாகவும் சில இடங்களில் மேலிருந்து கீழே குதித்தும், சில இடங்களில் கீழிருந்து மேலே குதித்தெழுந்தும் - கங்கா தேவி மனத்தைக் கவரும் கதிகளுடன் பகீரதன் தேரைப் பின்பற்றி நர்த்தனம் செய்து கொண்டு சென்றாள். ஆகாயத்தில் தேவ கந்தர்வ கூட்டங்களும் நதியின் கூடவே சென்றன.

இப்படிச் சென்ற புண்ணிய நதியானது வழியில் ஓர் இடத்தில் ஜன்ஹு ரிஷியினுடைய யாக வேதிகையைக் கலைத்துச் சேதம் செய்தது. ஒதுங்கிப் போகாமல் இப்படிச் செய்தாளே என்று ரிஷியானவர் நதியை அப்படியே கையில் எடுத்து உறிஞ்சி 'ஆசமனம்' செய்து விட்டார். கங்கை முற்றிலும் மறைந்து ஒழிந்து போயிற்று!

மறுபடியும் பகீரதன் ஐயோ என்று திகைத்தான். ஆனால் தேவ ரிஷி

கணங்கள் ரிஷியை வணங்கி கங்கையின் அபராதத்தை மன்னித்து பகிரதனுடைய தவத்தைப் பயனடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ரிஷியும் அங்கீகரித்து நதியைத் தம் வலது காதின் வழியாக வெளிப்படுத்தி மேலே போக விட்டார்.

''ரிஷியின் உடலிலிருந்து வெளிப்பட்டு ரிஷியின் பெண்ணே ஆனாய். ஜான்ஹவி என்ற பெயரும் பெறுவாய்'' என்று தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்தார்கள்.

பிறகு யாதொரு இடையூறுமில்லாமல் கங்கை சாகரம் சேர்ந்தாள். அங்கிருந்து பாதாளம் புகுந்து சகர புத்திரர்கள் எரிந்து சாம்பலான இடத்தைச் சேர்ந்தாள். பகிரதனும் தன் மூதாதைகளுக்கு நீர்க் கடன் செய்து முடித்து அவர்களை உத்தம லோகம் அடையச் செய்தான்.

பகீரதன் தன் தளரா முயற்சியால் பூமிக்குக் கொண்டு வந்த புண்ணிய நதிக்குப் பாகீரதி என்றும் பெயர்.

''உன் முன்னோர்களாகிய சகர குமாரர்கள் வெட்டிய சாகர சரித்திரமும் பகிரதன் தவத்தின் பயனாக ஆகாய கங்கை பூமிக்கு இறங்கிய சரித்திரமும் கேட்டாய். உனக்கு மங்களமாகுக. மாலை ஆயிற்று. உன் மூதாதை உலகத்துக்குத் தந்த கங்கையில் இறங்கி சந்தியாவந்தனம் செய்வோம்'' என்று விசுவாமித்திரர் ராமசந்திரனுக்குச் சொல்லி முடித்தார்.

கங்கைக்குப் போய் ஸ்நானம் செய்தாலும், அல்லது இந்தப் புண்ணிய கதையைப் பக்தியுடன் படித்தாலும், படிக்கச் சொல்லிக் கேட்டாலும் பாவங்கள் தீர்ந்து சுத்த உள்ளத்தையடைந்து நல்ல சீலமும், எடுத்த காரியத்தில் தளரா முயற்சியும் மக்கள் அடைவார்கள்.


(தொடரும்)

புதுயுக வயலின்!

கிராஃபைட் கனிமத்தின் இழைகளைக் கொண்டு வயலின்களை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளார் ஜே. ஹாரல்ட் ஸ்டீஃபன்ஸ். உலகப் புகழ் வயலின் மேதை யெஹுதி மெனுஹின் இந்த கிராஃபைட் வயலினின் நாதம் திருப்திகரமாக இருப்பதாகச் சொல்கிறார். ''இதனை வாசிக்கவும் சுலபமாக இருக்கிறது'' என்கிறார்.

இந்த வயலினை எல்லோரும் வாங்கக்கூடிய குறைந்த விலையில் விரைவாகத் தயாரிக்க முடியும் என்பதால் சீக்கிரமே மர வயலின்களின் இடத்தை இது பிடித்து விடும் என எதிர்பார்க்கிறார் ஸ்டீஃபன்ஸ். மேலும் மர வயலின்கள் தட்பவெப்ப மாறுதல்களால் பாதிக்கப்படுவதைப் போல் இவை பாதிக்கப்பட மாட்டா. கிராபைட் வயலின்கள் யாவுமே ஒரே சீரான தரத்தில் அமையும்.

– லண்டன் பிக்சர்ஸ் சர்வீஸ்





நட்சத்திர நாயகன்

"ஓடுகிறார்கள்.... ஓடுகிறார்கள்.... சரத்குமாரும், ரோகிணியும் படம் முடியும் வரை ஓடுகிறார்கள்.

செய்யாத கொலையைச் செய்து விட்டதாக சரத்குமாரின் மீது பழி. சிறை தண்டனை. பிரமிப்பூட்டும் விதத்தில் சிறையிலிருந்து தப்பியோடும் அவர், வழியில் தனியாகக் காரோட்டிச் செல்லும் ரோகிணியைத் தற்செயலாகச் சந்தித்து, தன்னுடைய தப்பித்தலுக்கு ரோகிணியையும் அவருடைய காரையும் வலுக்கட்டாயமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்..."

– 'டைப் செட்டிங்'கிற்கு அனுப்புவதற்கு முன் விமர்சனத்தைப் படித்துக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு ஒரு சந்தேகம் எழுகிறது... இதனை ஏற்கெனவே படித்திருப்பது போல. எனினும் தொடர்ந்து படிக்கிறார்.

"போலீஸ் அவர்களைத் துரத்துகிறது. கூடவே, உண்மைக் கொலையாளியின் கோஷ்டியும் இவர்களைத் தேடியலைகிறது. பாழடைந்த கட்டடங்கள்... வனப் பகுதிகள்... காட்டுவாசிகளின் கூடாரங்கள்... ஓட்டல்... என ஓட்டம். துரத்தல். ஒவ்வொரு இடத்திலும் இவர்களுக்கு ஆபத்தைக் கொண்டுவரும் அடுக்கடுக்கான சம்பவங்கள். எனினும், அதிர்ஷ்டம் இவர்கள் பக்கம்..."

– ஆசிரியரின் மனத்தில் நிச்சயமான ஓர் எண்ணம். ஏற்கெனவே எழுதியிருந்ததையே திரும்பவும் எழுதியிருப்பதைப் போல. ஒரு கணம் யோசிக்கிறார். பின் சட்டென்று டெலிபோனை அருகில் இழுத்து, ரிசீவரை எடுத்து, எண்களைச் சுழற்றுகிறார். விமர்சகர் லைனில் வந்ததும், எடுத்த எடுப்பில் விஷயத்திற்கு வராமல்...

"பொதுவா படம் எப்படி இருக்கு?"

"படு விறுவிறு. சம்பவங்கள் ஒன்னொன்னும் சங்கிலி கோத்த மாதிரி அடுக்கடுக்கா சுவாரஸ்ய சஸ்பென்ஸ் பின்னல், ஒரே ஒரு இடம் தவிர."

"என்ன அது?"

"ஒரு பாழடைஞ்ச கட்டடம். அதுல சரத்குமாரும் ரோகிணியும் ஒளிஞ்சிட்டிருக்காங்க. சுற்றி ஒரு போலீஸ் படை இவங்களைத் தேடிக்கிட்டு சுத்துது. அந்த நேரத்துல இவங்க அந்த இடிபாடுகளுக்குள்ளே ஒவ்வொரு இடமா ஒளிஞ்சு ஒளிஞ்சு, போலீஸ் கண்ணுல படாம காதல் டூயட் பாடி ஆடறாங்க. அந்த நிகழ்ச்சியைத்தான் ஜீரணிக்க முடியலை."

விஷயத்துக்கு வருகிறார் ஆசிரியர்.

"இந்த விமர்சன வரிகள் ஏற்கெனவே எழுதினது மாதிரியே அமைஞ்சிருக்கே? ஏன்?"

"சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு ஆங்கிலப் படம் பார்த்து விமர்சனம் எழுதினேன். இந்தப் படத்தைப் பார்த்துட்டிருந்தப்போ அந்தப் படமும் அப்படியே என் மனத்திரையில பிரதிபலிச்சு ஓடிட்டிருந்தது. அதே பாணி சம்பவங்கள்... அதே மாதிரி விமர்சன வரிகள்."

– சி.ஆர்.கே.

மறதிக்கு மருந்து!

கே.செல்வன்

"டேய், சிவராமா! மூச்சுவிட முடியலைடா. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து சாப்பிட்டா கொஞ்சம் சுமாரா இருக்கு. ராத்திரி தூங்க முடியுது. இல்லேன்னா, தூக்கமே வர்றதில்லை..." என்று நிறுத்தி, நிறுத்தி மூச்சு வாங்கிக் கொண்டே ஆஸ்துமா குரலில் பரிதாபமாய்க் கெஞ்சினார் அப்பா.

"இந்த மாசம் வாங்கிட்டு வர்றேன்பா" என்றேனே தவிர, பத்து தேதியாகியும் வாங்கி வரவில்லை. ஞாபகம் இல்லை. வேலை பளுவால் மறந்து போயிற்று.

ஒண்ணாம் தேதி, சம்பளம் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்ததும் அப்பா ஆர்வமாய்ப் பார்த்தார். மருந்தை மறந்து விட்டிருந்தேன்.

அதே நேரம் பார்த்து சரோஜா, "என்னங்க, கண்ணாடிக்கு ப்ரேம் மாத்திட்டு வரச் சொல்லிக் கொடுத்தேனே... மாத்திட்டீங்களா?" என்றவள், ஹாண்ட்பாகிலிருந்து மூக்குக் கண்ணாடி எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டுப் போட்டுக் கொண்டாள். நிலைக் கண்ணாடி முன் நின்று, ப்ரேம் சரியாக இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டாள்.

ஆபீஸ் பியூன் ரங்கனிடம் கொடுத்து, கண்ணாடி ஃப்ரேம் மாற்றிக் கொடுக்கும்படி சொல்ல, மாற்றிக் கொண்டு வந்து விட்டான். அவனிடமே மருந்தும் வாங்கி வரச் சொல்லியிருந்தால் கூட வாங்கி வந்து விட்டிருப்பான். பாழாய்ப் போன ஞாபகமறதி!

அன்று இரவு, அப்பா தூங்க முடியாமல் முனகிய போது என் ஞாபக மறதியை நானே நொந்து கொண்டேன். ஞாபக மறதியா? அல்லது அலட்சியமா? எப்போது வாங்கிக் கொடுத்தாலும் எதுவும் சொல்லாமல் வாங்கிக் கொள்பவர்தானே என்ற அலட்சியமா? பூக்கடையைப் பார்த்தால், மனைவிக்குப் பூ வாங்க வேண்டும் என்ற ஞாபகம் வருவது போல், அத்தனை மெடிக்கல் ஸ்டோரைப் பார்த்தாலும் ஏன் ஞாபகம் வர மாட்டேன் என்கிறது?

ஆனால்... காலையில், "சிவராமா.





என்னால முடியலைடா. செத்துப் போயிட லாம்னு தோணுது...'' என்று அப்பா வெறுப்பின் உச்சத்தில் பேசிய போது எனக்குக் கோபம் வந்தது.

''உங்களுக்கு மருந்து வாங்கறது மட்டும்தான் எனக்கு வேலையா? ஆயிரம் பிக்கல் புடுங்கல் இருக்கு. ஏதோ ஞாபகத் துல மறந்துட்டேன்... என்னை ஏன் இப்படி போட்டுத் தொந்தரவு பண்றீங்க? சே! ஆபீஸ்லதான் தலைவலின்னா இங்கேயும் நரகம்!'' என்று நான் திருப்பிக் கத்தியதும் அப்பா அடங்கித்தான் போனார்.

இது வேதனையை அதிகரிக்கச் செய்யும் அநியாய பதிலடி என்றாலும் தெரிந்தே என் கோபத்தைப் பிரயோகித்தேன். அந்தக் கோபத்துக்கு அப்பாவும் அடங்கி, ஒடுங்கிப் போனதுதான் வேதனையின் உச்சம்!

இதோ இன்றும் அப்பாவுக்கு மருந்து வாங்காமலே பஸ் ஏறியாகி விட்டது.

''சார்! ஹவுசிங் போர்ட்ல பஸ் நிக்குமா?'' குரல் கேட்டுத் திரும்பினேன். ஓர் இளைஞன்தான் என்னைக் கேட்டான்.

''டிக்கெட் வாங்கியாச்சல்ல?''

''வாங்கியாச்சு.''

''அப்படின்னா நிக்கும்...'' என்றேன் நான். அவன் மௌனமானான். நான் அப்பாவைப் பற்றி நினைக்க ஆரம்பித்தேன்.

கொஞ்ச நேரம் சென்றதும், அந்த இளைஞன், ''சார், ஹவுசிங் போர்ட் வந்தாச்சா?'' என்றான்.

''இன்னும் இல்லை.''

''வந்தா சொல்றீங்களா?''

''சொல்றேன்.''

''நான் ஊருக்குப் புதுசு. ஹவுசிங் போர்ட் ஸ்டாப்பிங் எதுன்னு தெரியாது. நீங்க சொன்னா நல்லது.''

''ஹவுசிங் போர்ட் வந்தா கண்டக்டரே கத்துவார்...''

''ஒருவேளை மறந்துட்டார்னா என்ன செய்யறது? அதுக்குத்தான் உங்ககிட்டே சொல்லி வைக்கிறேன்...''

''அதெல்லாம் மறக்க மாட்டாங்க.''

''பஸ் நிக்குமா? யாரும் இறங்கறவங்க இல்லைன்னு நிறுத்தாம போயிட்டா...?''

எனக்கு எரிச்சலாய் இருந்தது. பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாய் இருந்தேன்.

''நீங்க எங்க இறங்கறீங்க?'' அந்த இளைஞன் மீண்டும் கேட்டான். அவனது தவிப்பு எனக்கு ஒருபுறம் சிரிப்பை வரவழைத்தது.

''பெரியகசிநாயக்கன்பட்டி'' என்றேன்.

''கிராமமா?''

''ஆமாம்.''

''ஹவுசிங் போர்ட் தாண்டி இருக்கா? அதுக்கு முன்னாடி இருக்கா?''

''ஹவுசிங் போர்ட் தாண்டித்தான் இருக்கு. வந்தா சொல்றேனே...'' என் வார்த்தையில் எரிச்சல் பிரதிபலித்திருக்க வேண்டும். 'சரி' என்று மௌனமானான், அவன்.

ஹவுசிங்போர்ட் வந்தது. பஸ் நின்றது. அந்த இளைஞன் சொன்னது போலவே கண்டக்டர், ஸ்டாப்பிங் பெயரைக் கூவிச் சொல்ல மறந்தார். அந்த இளைஞனும் பேசாமல் நின்றான். நான், ''ஹவுசிங் போர்ட் இதுதான்...'' என்றேன்.

அந்த இளைஞன் அவசரமாய்ப் பின்னால் திரும்பி, ஒரு பெரியவரைப் பார்த்து, ''ஹவுசிங் போர்ட் வந்தாச்சு, பெரியவரே... இறங்குங்க'' என்றதும், மிக வயதான ஒரு பெரியவர் தட்டுத் தடுமாறி இறங்கினார்.

அந்த இளைஞன் இறங்கவில்லை. எனக்கு மகா கோபம். யாரோ ஒருத்தர் ஹவுசிங் போர்டில் இறங்குவதற்கு நம்மைத் துளைத்து எடுத்து விட்டானே, பாவி!

என் பார்வையில் தொக்கி நின்ற சந்தேகக் கேள்வியை உணர்ந்தவன் போல் அந்த இளைஞனே சொன்னான் : ''அந்தப் பெரியவர் பாவம், சார்! ஹவுசிங் போர்ட் ஸ்டாப்பிங் தெரியாதாம். பஸ்ல ஏறும் போதே 'என்னை ஹவுசிங் போர்ட்ல இறக்கி விட்டுடு தம்பி'ன்னு கேட்டுக்கிட்டார். நானும் புதுசு. அதனாலதான் உங்க கிட்ட கேட்டுச் சொன்னேன்.''

எனக்குச் 'சுரீர்'ரென்று வலித்தது.



பல்லவன் பஸ்ஸில், ஒரு பெண் மணியிடம்,

''நீங்க காலியா இருக்கிற அந்த சீட்ல உட்காரலாமே!''

''வேணாங்க...''

''ஏன்...?''

''என் பெயரே 'அமரா'வதியாச்சே!''

– ஜூலி

வட்டமேஜை

அரசியல் நாகரிகத்துக்கு உயிர் கொடுத்த பேட்டி!

◆ பா. ராகவனின் 'நட்பு' சிறுகதையைப் படித்து நானும் ஜக்கு போல மனம் நொறுங்கிப் போனேன். ஒரு பிஞ்சு மனத்தை, அதன் நம்பிக்கையை, அதன் மகிழ்ச்சியை, அதன் ஏமாற்றத்தை ஆசிரியர் மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்.

ஆமாம், எங்கே சார் இந்த இதழில் எங்கள் அபிமான ஜில்லு-ஜானுவைக் காணோமே!

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

◆ கம்ப்யூட்டரை வைத்து நகைச்சுவை ததும்ப சாந்திபிகா எழுதிய சிறுகதையைப் படித்த போது கதாசிரியரின் புத்திசாலித்தனத்தையும், நகைச்சுவை உணர்வையும் ரசித்தேன்.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

◆ 'மாறிடுமோ மனம்?' சிறுகதையில் மன உறுதியுடன் தனித்து நிற்பேன் என்று சொல்லும் ஸ்ரீதர் வித்தியாசமானவன்தான்!

முத்துப்பேட்டை, மிஸ்டர் தஞ்சை.

◆ கர்நாடகாவில் விசாரணைக் கமிஷனின் முன் ஒரு பெண் கதறியழுத சம்பவம் என்னை மிகவும் கலக்கி விட்டது. கமிஷன் அறிக்கையின் பேரில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் விட்டால் அதைவிட அவமானம் வேறு இல்லை!

பெங்களூர் - 24, ஆர். வேல்முருகன்.

◆ பீகார் ஜனதா தள எம்பிக்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரி பானர்ஜியைத் தாக்கியதைப் பார்க்கும் போது அங்கும் நாம ரைக்களியின் சிஷ்யர்கள் இருக்கிறார்போல் தெரிகிறதே!

ராதாநல்லூர், த. செல்வராஜ்.

◆ சமீபத்திய அயோத்தி சம்பவங்கள் உங்கள் தலையங்கத்தை நினைவூட்டின. 'சரித்திர அநீதிகள் பற்றி விலாவாரியாகப் பேசுகிறவர்கள், சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய அநீதிகளைத் தாங்களும் செய்து விடாமல் விவேகத்துடன் செயல் பட வேண்டும்' என்கிற கடைசி வரிகள் அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் மட்டுமின்றி இந் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் 'பொறுப்பு' உணர்வோடு அங்கீகரிக்க வேண்டிய வரிகள்.

மதுரை - 14, எதிரொலி ஆர். பழநி.

◆ தலையங்கம் சூப்பரா எழுதியிருக்கீங்க சார்! ஆமா.. கல்கி மாதிரி நடுநிலைப் பத்திரிகைகளை எல்லாம் எல்லா அரசியல்வாதிங்களும் படிப்பாங்களா சார்?

சின்னமனூர், எம். இந்திரா கனிப்ரியன்.

◆ மூப்பனாரின் பேட்டி அவர் ஒரு முதிர்ந்த, நேர்மையான அரசியல்வாதி என்பதை உணர்த்துகிறது. காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டிய சரியான தருணம் இதுவே. விமரிசனத்தையே தாங்கிக் கொள்ள முடியாத ஆளும் கட்சி, காங்கிரஸ் இன்னும் வேகமாகச் செயல்பட்டால் நிதானம் இழக்கும்! மூப்பனாருக்கு ஆதரவு தர இளைஞர்கள் தயாராய் இருக்கிறார்கள்.

குழிபிறை, வீ. கே. கஸ்தூரிநாதன்.

◆ மூப்பனார் அவர்களின் பேட்டி சூடாகவும், அதே சமயம் தரமாகவும் இருந்தது. அ.தி.மு.க. வினருக்கு, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பல விஷயங்களைச் சுட்டி காட்டியுள்ளார்.

பாலக்கரை, ஜேம்ஸ் மைக்கேல்.

◆ தோழமைக் கட்சி என்பது ஜால்ராவுக்கல்ல; தட்டிக் கேட்கத்தான் என்றும் பெருமையோடு இருந்த காங்கிரஸ் பெருமை இழக்க காரணம் காங்கிரஸேதான் என்றும் ஒப்புக் கொண்டமை அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. பேட்டி சிறப்பாக இருந்தது. அட்டைப்படமும் வெகு ஜோர்!

தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ தமது பேட்டியிலேயே அரசியல் நாகரிகத்திற்கு உயிர்கொடுத்து விட்டார் மூப்பனார். தரமான அவரின் பதில்கள் அவருக்கே உரிய இயல்புக்குச் சான்று.

சென்னை - 5, எ. கணேஷ்.

◆ தமது ஆட்சியில் இவ்வளவு பாலிடிக்ஸ்-ஐ வைத்துக் கொண்டு ராமர் கோயில் பாலிடிக்ஸ் நடத்தி மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் பா.ஜ. கட்சியின் தோலை உரித்துக் காட்டியது 'லக்னோ ஒரு ரவுண்ட் அப்!' ஹிப் ஹிப் ஹுர்ரே!

மதுரை, நெல்லை. வி. சிவா.

◆ உத்திரப்பிரதேசம் நமக்குத் தந்த பிரதமர்கள் நாலு அல்ல; ஏழு. நேரு, லால்பகதூர் சாஸ்திரி, திருமதி இந்திரா காந்தி, சரண்சிங், ராஜீவ்காந்தி, வி.பி. சிங், சந்திரசேகர் இவர்களைத் தந்த மாநிலம் உ.பி.

ஆலப்புழை, சிவகாமி சுந்தரம்.

◆ லக்னோ பற்றிய மைனஸ் பாயின்டுகளை மட்டும் 'ரவுண்ட அப்' செய்திருக்கிறீர்கள். நமது தஞ்சையைப் போன்று கலை வளர்த்த நகரம் லக்னோ. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பாரம்பரியம் மிக்கது 'லக்னோ கரானா'. லட்சக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் லக்னோ சிக்கான் பூ வேலைகளைப் பார்த்து ரசிக்காதவர் யார்? ரோஜா ஆராய்ச்சி நிலையம் இங்கு அமையப் பெற்றிருப்பது மட்டுமல்ல, தோட்டம் இல்லாத வீடே இல்லை எனலாம்.

சென்னை - 28, கிருஷ்ணவேணி ரங்கநாதன்.



மாண்டலின் மாஸ்டர்கள்!

"தினமும் நான்கு முதல் ஐந்து மணி நேரம் சாதகம் செய்கிறோம். அப்போது தான் இந்த வாத்தியம் சொன்னதைக் கேட்கும்...." என்கின்றனர் மாண்டலின் ஸ்ரீநிவாஸ், ராஜேஷ் சகோதரர்கள்.

காஞ்சி பெரியவரின் முன்னிலையில் ஸ்ரீநிவாஸ் வாசித்துக் கொண்டிருந்த போது அருகிலிருந்த ராஜேஷையும் வாசிக்கும்படி கூறி ஆசிர்வதித்தாராம் பெரியவர். ஒன்பதாம் வகுப்பில் உள்ள ராஜேஷ் தனியாகவும் ஸ்ரீநிவாஸுடன் இணைந்தும் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துள்ளார்.

ஸ்ரீநிவாஸ், மாண்டலினைத் தேர்ந்தெடுத்தது ஏன்...? "எனது தந்தை (சத்திய நாராயணா) தமது மாணவர்களுக்குப் பல வாத்தியங்கள் கற்றுத் தருவார். ஆறு வயதுச் சிறுவனாக இருந்த எனக்கு, ஏனோ அவற்றுள் மாண்டலின் ரொம்பப் பிடித்தது. அப்பாவும் அதை வாசிக்க ஊக்கப்படுத்தினார். அவர் ஆலோசனையின் பேரில் ஐந்து தந்திகளுடனான மாண்டலினை வாசிக்கக் கற்றுக் கொண்டேன்."

"ஊட் (Lute) என்ற இத்தாலிய நாட்டு வாத்தியத்திலிருந்து பிறந்ததுதான் மாண்டலின்" என்கிறார் ஸ்ரீநிவாஸ்.

"பதினான்கு முதல் பதினேழாம் நூற்றாண்டுகளிலிருந்தே இது உபயோகத்தில் இருந்து வந்தாலும் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் இது இத்தாலியில் பிரபலமாகியது. நான்கு ஜதை தந்திகள் உடையதாயிருந்தது.

"மேற்கத்திய இசைக்கு மட்டுமே உபயோகித்து வந்த மாண்டலினை, பம்பாயில் உஸ்தாத் சட்ஜா ஹுசேன் கான் இந்துஸ்தானி இசை வாசிக்கப் பயன்படுத்தினார். மாண்டலினில் வராளி, தோடி, பைரவி ஆகிய மூன்று ராகங்களையும் என்னால் வெற்றிகரமாக வாசிக்க முடிந்ததைத் தொடர்ந்து, எல்லா ராகங்களையுமே வாசிக்கலாம் என்று துணிவு வந்தது" என்கிறார் மாஸ்டர் ஸ்ரீநிவாஸாக ஆரம்பித்து மாண்டலினை 'மாஸ்டர்' செய்து விட்ட இந்த இளைஞர்.

பெரும்பாலும் வடநாட்டில் ப்ருஷ் என்ற மரத்தில் செய்யப்பட்டு வரும் மாண்டலினில் தந்திகள் மட்டும் சென்னையில் பொருத்தப்படுகின்றன. தந்திகளைச் சிறிய வளையம் போன்ற உபகரணத்தால் மீட்ட வேண்டும். தந்திக் கம்பிகளைப் பதினைந்து முதல் இருபது நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். ஒரு மாண்டலினின் விலை அறுநூறு முதல் தொள்ளாயிரம் ரூபாய் வரை இருக்கும்!

– கலா மூர்த்தி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.



அமைதியான மனதிற்கு வழிகள் மூன்று

நம்பிக்கை என்றால் உபாஸனா. உங்கள் செல்வம் தினம் தினம் வளர உறுதியாய் உழைக்கும் நிதிநிறுவனம்.

நேர்மை, நாணயம், மனிதநேயம் என்னும், 'டிவிஎஸ்' ஸின் சீரிய நெறிமுறைகளை கடந்த ஏழு வருடங்களாக பிரதிபலித்து வரும் நிறுவனம். அதிக பலன் தருவதாகக் கூறும் திட்டங்களோடு இணைந்த எந்த அபாயமும் 'உபாஸனா' வின் திட்டங்களில் இல்லை!

உபாஸனா ஃபைனான்ஸ் லிமிடெட்

டிபாஸிட் திட்டங்கள்

திட்டம் 1

[illegible]

காலம் (மாதங்கள்)	வட்டிவிகிதம் (ஆண்டிற்கு)
25 / 36 / 48 / 60	15% [illegible]

திட்டம் 2

[illegible]

காலம் (மாதங்கள்)	வட்டிவிகிதம் (ஆண்டிற்கு)
25 / 36 / 48 / 60	15% [illegible]

* [illegible]

திட்டம் 3 [illegible]

[illegible]

[illegible]	காலம்			
	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

** [illegible]

[illegible]

[illegible]

☐ திட்டம் 1 ☐ திட்டம் 2 ☐ திட்டம் 3

பெயர் : ______

முகவரி : ______

______ போன் ______

[illegible]

[illegible]

தொடரும் நம்பிக்கையென்னும் 'டிவிஎஸ்' பாரம்பரியம் !

Stimulus/UFL/172/92

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka